www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

பக்கம் 20

දිනමුරසු වාරමලර් மார்.07–13,1999

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 299

## மலையகத் தொழில் மையங்கள் புலிகளின் குறியில்



## சந்திரிக்காவை சந்திக்க மறுத்ததேன்



## பரபரப்பான புதிய தொடர்



## அரங்கம் அந்தரங்கம்

படிப்பகம்

# முரசம்

## யாழ் கழுத்தறுப்பு

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

யாழ் குடாநாட்டில்
மர்மக் கொலைகளும்
ஆட் கடத்தல்களும்
அதிகரித்துள்ளன!
புலிகள் என்ற பெயரில்
அப்பாவி இளைஞர்கள்
காணாமல் போகின்றனர்!
மக்களை பீதியில்
வைத்திருப்பதற்காக
அப்பாவிகள் கொல்லப்பட்டு
தலைகள் வீதிகளில்
வீசப்பட்டு வருகின்றன!
ஏற்கனவே
அறுநூறுக்கு மேற்பட்டோர்
யாழில் கைதாகி
பலியாகியுள்ளனர்!
தற்போது மறுபடி
காணாமல் போவோர்
படலம் ஆரம்பமாகியுள்ளது!
இச் சம்பவங்களில்
படையினருக்கு
நேரடியான சம்பந்தம்
இல்லாதிருக்கலாம்!
அவர்கள்
அறியாமல் இவை
நடப்பதாக நினைப்பது
அறிவீனம்!
தமிழ்க் கட்சிகள்
இவற்றைச் செய்வதால்
தம்மீது புகார் எழாது
என்று சிருடைத்தரப்பு
நினைக்கவும் கூடும்!
ஏற்கனவே
குடாநாட்டில் கைதாகி
காணாமல் போனோர் பற்றிய
பிரச்சனையைத் திசை திருப்ப
இன்று புதிதாக
காணாமல் போவோர்
பிரச்சனை உதவும்
எனவும் எண்ணக்கூடும்!
'தமிழ்க் கட்சிகளின்
பெயர்தானே கெடும்...!
அதுகூட இக்கட்சிகளை
எதிர்காலத்தில்
ஓரங்கட்ட உபயோகப்படும்...!'
என்றும் நினைக்கலாம்!
இந்தியப்படை காலத்தில்
'மண்டையன் குழு'
என்ற பெயரில்
புலி வேட்டை நடந்தது!
புலிகள் என்று
அப்பாவிகள் பலர்
கோரமாய்க் கொல்லப்பட்டனர்!
அதே அவலம்
மறுபடி அரங்கேறி வருகிறது!
மண்டையன் குழுவை
இந்தியப் படை
தட்டிக் கொடுத்தது!
தற்போது
தட்டிக் கொடுப்பது யார்?
என்பது ஒன்றும் இரகசியமல்ல!
கழுத்தறுப்பு
நடவடிக்கைக்கு
காரணம் யார் என்று
ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும்
நன்கு தெரியும்!
அவ்வாறு தெரிந்தும்
மக்களுக்குக் கூறாமல்
மறைத்துள்ளன!
இக் கட்சிகளது
ஜனநாயக முழக்கங்கள்
வெத்து வேட்டுக்களே
என்பது நிரூபணமாகியுள்ளன!
மனித உரிமை,
ஜனநாயகம் என்பவற்றில்
உள்ளபடியே
அக்கறை இருக்குமானால்
அவற்றை யார் மீறினாலும்
அம்பலப்படுத்த வேண்டும்!
அரசியல் கட்சிகள்
என்ற வகையில்
மக்களுக்கு உண்மைகளைக்
கூறுவது இவற்றின்
கடமையல்லவா?
விடுதலைப் புலிகள்
தமது உறுப்பினர்களை
சுடுவது மட்டுமே
இக் கட்சிகளுக்கு
ஜனநாயக மீறல்!
ஏனெனில், இவை
சகல விடயங்களையும்
தம் விருப்பு- வெறுப்பு,
தமது நலன்கள்
என்ற கோணத்திலிருந்தே
பார்க்கத் தொடங்கியுள்ளன!
அதன் காரணமாகவே
அப்பாவிகள் கொலையாவதை
மௌனமாக
அங்கீகரிக்கின்றன!
இந்த மௌனம்
சாதிப்புகளுக்கு
இயக்க ஒற்றுமை என
முலாம் பூசுவது
மக்களை ஏமாற்றும் முயற்சி!
ஒற்றுமை என்பது
மக்களுக்காகவும்,
சரியானவற்றுக்காகவுமே!
தவறுகளை
நியாயப்படுத்தவும்
மறைக்கவும் அல்ல!
இதேவேளை,
யாழ் குடாநாட்டு
மர்மக் கொலைகளுக்கு
சிருடைத்தரப்பினரும்
தமது பொறுப்பைத்
தட்டிக் கழித்திட முடியாது!
அவர்களுக்கு தொடர்பே
இல்லையெனில்
குற்றம் புரிந்தவர்களை
நீதியின் முன்
நிறுத்திக் காட்டட்டும்!
சொற்களை விட
செயல்களே முக்கியம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## சமாதி நிலை

மனதை ஒருமுகப்படுத்தி, அதை நிலையான இன்பத்தை அனுபவிக்கும்படி செய்வதுதான் சமாதி நிலை.

சமாதி நிலையை அடைய முடியாமல் அறியாமை, ஆணவம், ஆசை, வெறுப்பு, உடலின்மீது இருக்கும் பற்று ஆகிய இவை ஐந்தும் தடை செய்துகொண்டு இருக்கின்றன. 'தன்னை' யார் என்று தெரிந்துகொள்ளாமல் இருக்கும் அறிவின்மையில் இருந்துதான் ஆணவம் தோன்றுகிறது. இந்த ஆணவத்தில் இருந்துதான் தனக்கு எது தேவை, எது தேவையில்லை, என்று புரிந்து கொள்ளாமல், எல்லாப் பொருட்கள்மீதும் ஆசை ஏற்படுகிறது. இவற்றையெல்லாம் தாமே அனுபவித்து இன்புற வேண்டும் என்ற உணர்வும் ஏற்படுகின்றது. இந்த ஆசைகள் நிறைவேறத் தடைகள் ஏற்படும்போது, அந்தத் தடைகள் மீது வெறுப்பு ஏற்படுகிறது. தாம் அனுபவித்துக்கொண்டு இருக்கும் பொருட்கள்மீது மற்றவர்கள் ஆசைப்படும்போது அவர்கள்மீது பொறாமை ஏற்படுகிறது.

இந்த வெறுப்பின் காரணமாக தன் உடலின் மீது இருக்கும் பற்று, மென்மேலும் அதிகமாகிறது. அதனால் இந்த உடம்பை விட்டுவிட்டு இறந்து போய்விடும்படி நேருமோ என்ற பயமும் ஏற்படுகிறது. இவ்வாறு அறியாமை, ஆணவம், ஆசை, வெறுப்பு, உடலின் மீது பற்று என்ற ஐந்தும் ஒன்றில் இருந்து ஒன்றாக இதே வரிசையில் தோன்றுகின்றன. இவற்றிலிருந்து விடுபடுவதுதான் சமாதி நிலை.

தொகுப்பு: கொஸ்லாந்தை எஸ்.என். ராஜரட்ணம்.



## புனித ஹஜ்ஜு யாத்திரை

புனிதமான ஹஜ்யாத்திரைக் காலம் ஆரம்பித்து விட்டது. ஹஜ்ஜாஜிகள் ஹஜ் யாத்திரை செல்லத் தயாராகிக் கொண்டிருக்கின்றனர். ஹஜ் யாவர் மீதும் கடமையானதல்ல. இக் கடமையை நிறைவேற்ற வேண்டியவர்கள் யார் என்பதை இறை மறை பின்வருமாறு கூறுகிறது:

எவர் மக்காவுக்கு ஹஜ்யாத்திரை செல்லச் சக்தியுடையவராக உள்ளாரோ அத்தகைய மனிதர் அல்லாஹ்வுக்காக அவ்வாலயத்தை ஹஜ்ஜு செல்வது கடமையாகும்.

அல்குர் ஆன் (3:97)

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகள் உள்ளன. அவை கலிமா, தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு. இவற்றில் இறுதிக் கடமை புனிதமிக்கதாகும். வசதியும் வாய்ப்பும் உள்ள இடங்களில் ஏனைய நான்கு கடமைகளையும் யாவரும் செய்து கொள்ளலாம்.

ஆனால் ஹஜ்ஜுக் கடமை அவ்வாறல்ல. அதை நிறைவேற்ற புனித மக்காவுக்கே சென்றாக வேண்டும். இதனால்தான் இறுதிக் கடமை ஹஜ்ஜை வசதி படைத்தவர்களுக்கு மட்டும் அல்லாஹ் விதியாக்கியுள்ளான்.

சகல வசதிகளுமிருந்து இவ்விறுதிக் கடமையை பாராமுகமாக வாழும் பணக்காரர்கள் இறுதித் தீர்ப்பு நாளில் இறைவனிடத்தில் 'நஷ்டவாளிகளே' என்று இறை தூதர் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

ஆகவே அல்லாஹ்வின் நெருக்கத்தையும் நேசத்தையும் பெற புறப்படுங்கள் புனித ஹஜ்ஜு யாத்திரை.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல. 296

இடம் உள்ளமை இடம் பிடித்துள்ள விமக்க வைத்த கவிதைகள்:

### பரிசுக்குரிய கவிதை

### எக்காலம்?

சுதந்திரப் பொற்காலம்
என்றவர்கள்-
இவர்கள் வாழ்வது
எக்காலம்?
வடக்கு-கிழக்கில்
இப்போதும் கற்காலம்!

எஸ். வாகினி- சுவிற்ஸர்லாந்து.

### சந்திப்பு

பந்தமில்லை
பாசமில்லை
சிந்திக்க
நேரமில்லை...
சந்தித்தோம்...
அகதிகளாய்...!

கயல் வண்ணன்-
வவுனியா.



### நிச்சயமில்லை

அடுத்த நிமிடம்
நிச்சயமில்லை...!
இந்த நிமிடத்தை
நிம்மதியாக்குவோம்!

ஜே.எம். ஃபஸ்லி-கல்பிட்டி வீதி.
ஏத்தாளை

### தோல்வி

காதலர் தினத்தில்
ஜூஸ் சொக் வாங்கினோம்!
எவரும் அகப்படாததால்
நாங்கள் குடிக்கின்றோம்!

சி. கதிர்செல்வன்- வவுனியா.

### தேவை

கூடிக் குலவிக் கொண்டாடி
வாழ்விலோரானந்தம்!
இதை இழந்தவர்,
எதிர்பார்ப்பவர்
நாட்டில் எத்தனை மனிதர்கள்!

ம. திருவரசுராசா- வவுனியா.

### கனவு

வண்ணக் கனவுகளுடன்
வாழ்ந்த வாழ்க்கை
வான் குண்டுகளால்
வண்டியில் வீதிக்கு
வந்ததய்யா!

வெ. இவோன்- சாவற்கட்டு,
மன்னார்.

### வி(மு)டிவெங்கே?

ஒற்றுமையை விட்டெறிந்து
ஆளுக்கொரு பக்கமென்றால்
சத்தியமாய் தமிழரென்று
அம்மன் கோயில் மத்தளமே!

கிரிசாந்தி, சந்திரகலா-
மட்டக்களப்பு.

### வழி என்ன?

விளைக்கும் நிலமெல்லாம் குண்டென்றால்:
உழைத்து வாழ்ந்தவர்கள்
பிழைக்கும் வழிதான் என்ன?

ச. மகாலிங்கம்-வெலிமடை குரூப், வெலிமடை.

## கவிதைப் போட்டி இல.299



### பாழாய்ப் போச்சு

நாளெல்லாம் வீணாய் ஆச்சு,
'சமாதானப் போரால்' நம்
வாழ்வெல்லாம் பாழாய்ப் போச்சு!

கந்தெகெதர ஜெகதீஸன்.

### கவனம்

கட்டைவண்டி தனில் ஏறி
காளைகளை அவிழ்த்து விட்டு
காலம் கடத்தாதீர்கள்...!
வெள்ளை வண்டி வந்துவிடும்
அள்ளிக்கொண்டு சென்றுவிடும்!

கல்லாறு டினேஸ்-
மஸ்கெலியா.

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 13.03.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.299
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### சுற்றி வளைப்பு

வளைத்துப்
பிடித்தாச்சு!
இனி புதைக்க
வேண்டியதுதான்
பாக்கி!

த.நகுலேஸ்வரன்- மட்டக்களப்பு.

### தொலைத்துவிட்ட வசந்தங்கள்

கொலரா நோய் பரவுகின்ற நினைப்பே இன்றி
குஷியாகச் சுவைக்கின்றீர் ஐஸ்பழத்தை!
தொலைத்துவிட்ட வசந்தங்கள் போதுமப்பா
தொற்று நோய் பீடிக்க இடங்கொடாதீர்!

செல்வி மதுரா யோகேந்திரன்-
திருக்கோவில்.

## வரியல்ல கப்பம்

வவுனியா இயக்கச் சண்டைகள் வெட்கக்கேடானவை. இக் கட்சிகளுக்கு வரி ஏன்? "வரி விதிப்பைக் கைவிட முடியாது. நாம் இயக்கம் நடத்த வேண்டாமா?" என்று ஒரு கட்சித் தலைவர் கேட்டிருக்கிறார். அரசியல் கட்சிகள் மக்களிடம் உண்டியல் குலுக்கியோ, சந்தா மூலமோ நிதி திரட்டலாம். வரி அறவிட முடியாது. இவர்கள் என்ன போராட்டமா நடத்துகிறார்கள்? இவர்கள் இயக்கம் நடத்த வேண்டும் என்று மக்களா கேட்கின்றனர். அடுத்த தேர்தலில் இவர்கள் பாராளுமன்றம் செல்வதற்கு கட்சி நடத்துகிறார்கள். அதற்கு மக்களா வரி செலுத்துவது? வரி என்பதைவிட கப்பம் என்பதே சரியான சொல்.

கு. லோகநாதன்,
வவுனியா.

## பலம் இருந்தால் காட்டுவர்

இராஜதந்திரியார் கூறியதுபோன்று, எந்தவொரு இயக்கமும் இன்னொரு இயக்கம் தம்மைவிட முன்செல்ல விடமாட்டாது. தம் கையில் பலம் இருந்தால் சக இயக்கத்தை அடக்க முற்படும். புலிகளிடம் பலம் அதிகம் இருந்ததால் அவர்கள் ஏனைய இயக்கங்களை ஓரம் கட்டினர். இல்லையானால் புளொட்டோ, ரெலோவோ புலிகளை ஓரம் கட்டியிருக்கும். அன்றைய நிலை மட்டுமல்ல, இன்றைய நிலையும் இதுதான். பல்லுப் பிடுங்கப்பட்ட பாம்புகளாக பலம் இழந்த இயக்கங்கள் சில தாம் உயிர்வாழ்வதற்கு ஜனநாயக வேசம் போடுகின்றன. இதுதான் உண்மை.

கே. ஜெயசேகர், மட்டுநகர்.

## பெயர் சொல்லப் பயம்

இங்கு வவுனியாவில் மூன்று இயக்கங்களே உள்ளன. புளொட், ரெலோ இரண்டுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பயத்தில் இருக்கிறது. சில காலத்தின் முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் இங்கு நடமாடவே முடியாது. இன்னொரு இயக்கம் துரத்தித் துரத்தி அடித்தது. ஜனநாயகக் காவலர்களாக இன்று அறிக்கைகளை சளைக்காது வெளியிடும் இயக்கம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆனால் வவுனியாவில் நடந்த கொலைகள், சமீபகால இயக்க மோதல்கள் பற்றி ஈ.பி.ஆர்.எல்.எஃப். பெயர் குறிப்பிடாமல் பொதுவாக விமர்சனம் செய்கிறது. புலிகளை மட்டும் பெயர் கூறி விமர்சிப்பர். புலிகளைவிட ஏனைய இயக்கங்கள் இரண்டிடமும்தான் ஈ.பிஆர்.எல்.எஃப். பயப்படுகிறது.

தா. திருமாவளவன்,
வவுனியா.

சமகாலப் பிரச்சனைகளோடிணைந்த சம்பவங்களைக் கோடிட்டுக் காட்டும் சுரேஷ்-பாலா (சுபா) வின் தொடர் இதயத்தைத் தொட்டுச் செல்கிறது. தரும் முரசுக்குப் பாராட்டுக்கள்.

பேனா, சுப்பிரமணியன்,
அக்கரபத்தனை.

# வாசக(ர்)சாலை



## இதுதான் ஜனநாயகமா?

முரசே!

'குறுநில மன்னர்களும் அவர்களது துப்பாக்கிகளும்' நன்றாக இருந்தது. விடுதலைப் புலிகள் மட்டுமே சக இயக்கங்களை மதிப்பதில்லை என்றும், தாம் 'ஜனநாயகவாதிகள்' என்றும், கூறித் திரிந்தவர்கள் இப்போது தமக்குள்ளேயே மோதியுள்ளனர். படை இல்லாவிட்டால் மோதி அழிந்திருப்பர். இதுதான் ஜனநாயகமா? புலிகள் மட்டும்தான் சக இயக்கத்தினரை நோக்கி துப்பாக்கிகளை நீட்டியதாகக் கூறுபவர்கள், கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் மறைக்க முடியாது!

இ. செல்வநாயகம், வவுனியா.

## முரசு ஒலிக்கட்டும் பொய் அழியட்டும்

குருநாகல் மாவட்ட பன்னல, அலபடகம பிரச்சனை தொடர்பான உண்மை நிலையை சுருக்கமாக இருந்தாலும் மிகவும் துல்லியமாக விளக்கிய முரசுக்கு எமது ஊர்சார்பாகவும் தமிழ்பேசும் மக்களின் சார்பாகவும் பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன். நடந்த விடயத்தை வெட்டு ஒண்டு துண்டு இரண்டாக கூறிவிட்டது முரசு.

நன்றி!

எம்.எஸ்.எம். பௌசல் அமீர், அலபடகம.

## முன்னாள் பயங்கரவாதிகள்

தமிழ்க் கட்சிகள் தாம் ஜனநாயக வழிக்கு வந்துள்ளதாகக் கூறுவது பற்றி இராஜதந்திரியார் முன்பு கூறிய விளக்கம் நினைவில் உள்ளது. அதனையொட்டியே இதனை எழுதுகிறேன்.

இப்போதுதான் இக்கட்சிகள் ஜனநாயக வழிக்கு திரும்பியுள்ளன என்று வைத்துக்கொண்டால், ஆயுதம் ஏந்தியிருந்த காலத்தில் அராஜக இயக்கங்களாக இருந்தன என்றுதானே அர்த்தம்? அப்படியாயின் புலிகள் மட்டுமே ஜனநாயக விரோதிகள் என்று இவை கூற முடியாதே! இவர்களே தாம் கடந்த காலத்தில் ஜனநாயக வழியில் இருக்கவில்லை என்று கூறும்போது, புலிகள் இவர்களைத் தடை செய்தது எவ்வாறு தவறாகும்?

ஆயுதம் ஏந்துவதும் ஜனநாயக உரிமைக்கான போராட்டத்தில் அடக்கம். ஜனநாயக உரிமைகள் ஆயுத முனையில் பறிக்கப்படுகையில், ஜனநாயகவாதிகளும் ஆயுதம் ஏந்துவதுதான் வழக்கம். அவ்வாறே வடக்கு கிழக்கிலும் நடந்தது. ஆயுதம் ஏந்தாது இருப்பதுதான் ஜனநாயகம் என்றால் இக் கட்சிகளை 'முன்னாள் பயங்கரவாதிகள்' என்றழைப்பதே பொருந்தும்.

சி. குமாரரத்தினம், கனடா.

## மிரட்டல் பறித்தல்

முரசே! யாழ் குடாநாட்டில் இன்று மனித உரிமை மீறல்களில் குறிப்பிட்ட ஒன்றிரண்டு தமிழ்க் கட்சிகளே ஈடுபட்டு வருகின்றன. ஜனநாயகம், மக்களுக்கு உதவுதல் என்ற போர்வைகளில் மிரட்டல், இயக்கப் போட்டி, பணம் பறித்தல், ஆட்கடத்தல்கள் என்பவையே இங்கு நடக்கின்றன.

எம். கோகுலன், யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

www.padippakam.com

## சந்திரிக்காவைச் சந்திக்க தமிழக முதல்வர் தயக்கம்

## இலங்கைத் தூதர் மங்கள முனசிங்க தெரிவிப்பு

"தமிழர்கள் என்ற போர்வையில் புலிகளும் சேர்ந்துவிடுவார்கள் என்பதாலேயே இராணுவத்தில் தமிழர்களை சேர்ப்பதில்லை" இவ்வாறு இலங்கையின் இந்தியாவுக்கான தூதர் மங்கள முனசிங்க கூறியுள்ளார்.

தமிழக சஞ்சிகையான ஜூனியர் விகடனுக்கு அவர் அளித்துள்ள பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது: தமிழர்கள் யார்? புலிகள் யார் என்று கண்டுபிடிப்பது கஷ்டமாக உள்ளது. ஆனால் இலங்கையில் வர்த்தகம் செய்பவர்களில் உச்சத்தில் இருப்போரில் அதிகம் பேர் தமிழர்தான். இலங்கையின் தூதர்களாக பல நாடுகளில் தமிழர்கள் பணியாற்றுகின்றனர் என்று கூறியுள்ளார்.

இலங்கை அதிபர் சந்திரிக்கா ஏன் தமிழகம் வரக்கூடாது என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள மங்கள முனசிங்க, "தமிழகத்துக்கு வரவேண்டும், உங்கள் முதல்வரைச் சந்திக்க வேண்டும் என்று இம்முறை டெல்லி வந்தபோதும் சந்திரிக்கா விருப்பப்பட்டார். ஆனால் தமிழக முதல்வர்தான் நேரம் ஒதுக்கித்தர மறுத்துவிட்டார்.

தமிழக முதல்வரைச் சந்திக்க நானும் பலமுறை நேரம் ஒதுக்குமாறு கேட்டுள்ளேன். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உட்பட கருணாநிதி வரை யாருமே அனுமதி கொடுக்கவில்லை.

எங்களைச் சந்திக்கவே தமிழக முதல்வர் அஞ்சுகிறார்" என்று கூறியுள்ளார்.

கச்சதீவை மறுபடி இந்தியாவிடம் ஒப்படைக்கும் அவசியம் கிடையாது. இது முடிந்துபோன விஷயம். தமிழக அரசியல்வாதிகள் சிலர் இதனை தமது சுயநலத்திற்காக பயன்படுத்த முயல்கின்றனர். தமிழக மீனவர்கள் தங்கள் வலைகளை கச்சதீவில் உலர்த்திக் கொள்ள அனுமதி உண்டு என்றும் மற்றொரு கேள்விக்கு முனசிங்க பதிலளித்துள்ளார்.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை அடிக்கடி சுட்டு வீழ்த்தும் கொடுமை ஏன்? என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போது "தமிழக மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் தவறுதலாக நுழைந்து விடுகின்றனர். விடுதலைப்புலிகள் தமது படகுகளை சாமர்த்தியமாக தமிழக மீனவர்களது படகுகளுக்குள் நுழைத்து இலங்கைக்குள் புகுந்து விடுகின்றனர்.

இதனைத் தடுக்கவே தமிழக மீனவர்களை, 'வரவேண்டாம்' என்று எச்சரிக்கிறோம். அதன் பின்னரும் தமிழக படகுகள் நுழைவதால் சுடவேண்டி ஏற்படுகிறது" என்றும் கூறியுள்ளார்.

# தவறுகளை மூடிமறைக்க உதவி!

## தமிழ் அதிகாரிகளுக்கு புலிகள் எச்சரிக்கை

வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் அதிகாரிகள் சிலர் அரசின் தவறுகளை மூடிமறைக்க துணைபோவதாக விடுதலைப் புலிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

புலிகளின் குரல் வானொலியிலும் அரச அதிகாரிகளது அசமந்தப் போக்குகள் பற்றியும், அரசின் தவறுகளை மூடி மறைப்பது பற்றியும் புகார்கள் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சில அரச தமிழ் அதிகாரிகள் புலிகளையும் திருப்தி செய்துகொண்டு, ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் நல்ல பிள்ளைகளாக நடந்துகொண்டு இலஞ்சத்தில் ஊறித் திளைப்பதாக புலிகளுக்கு தகவல் எட்டியுள்ளதாம்.

யாழ் குடாநாட்டில் முக்கிய அரச அதிகாரி ஒருவர் புலிகளுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் நல்ல பிள்ளையாக நடந்து வருகிறார். அதே சமயம் தனது உறவினர்கள் மூலம் சரக்குக் கப்பல் சேவைகள் நடத்தி வர்த்தகர்களிடம் பணம் கறக்கிறார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

தொடர்ந்து பதவியில் இருப்பதற்காக இந்த அரச அதிகாரி அரசின் தவறுகளை நியாயப்படுத்தவும் முயன்று வருகிறார்.

இதோபோல மேலும் சில அதிகாரிகள் யாழ் குடாநாட்டில் மக்களின் முதுகில் சவாரி செய்துவருகின்றனர். இவர்களில் சிலருக்கு புலிகளால் முதல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

யாழ் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, மக்களுடன் சாதுவாக நடந்து கொண்ட சில அதிகாரிகள் இப்போது தலைகீழாக மாறிவிட்டனராம்.

மட்டக்களப்பிலும் தமிழ் அதிகாரிகள்மீது புலிகள் கண்காணிப்புச் செலுத்துவதாக கூறப்படுகிறது.

சமீபத்தில் கிராம சேவையாளர் ஒருவர் புலிகளால் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், மேலும் சிலர் கடும் எச்சரிக்கைக்கு உள்ளாகியுள்ளனர்.

### ஆதரவாளர்கள்?

இதேவேளை யாழ் குடாநாட்டில் ஊர்க் காவல் படையில் தமது ஆதரவாளர்கள் என்ற பெயரில் உறுப்பினர்களை சேர்க்க சில தமிழ்க் கட்சிகள் முன்வந்துள்ளதாக புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தமிழ் மக்களை அழிக்க தமிழ் இளைஞர்களையே பயன்படுத்த அரசு திட்டமிடுகிறது. தமது ஆட் பற்றாக்குறையை தமிழ்க் குழுக்களது உறுப்பினர்கள் மூலம் தீர்த்துக் கொள்ளப் பார்க்கிறது என்றும் புலிகள் கூறியுள்ளனர்.

## ஒன்பது மீனவர்கள் மாயம்

### திருமலை மீனவர் அவலம்

திருமலை மீனவர்கள் ஒன்பது பேர் படகுகளுடன் காணாமல் போயுள்ளனர். இவர்கள் சென்ற படகுகள் தாக்குதலுக்கு உள்ளானதாக நேரில் கண்ட மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

23.02.99 அன்று திருக்கோணமலை கடற்பிராந்தியத்தில் படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஐந்து மீனவர்கள் காணாமல் போயினர். இவர்கள் 'டாங்கிப் படகு' என்றழைக்கப்படும் சிறிய மீன்பிடிக் கப்பலில் நின்று மீன்பிடித்துக் கொண்டிருந்தனராம்.

ஏ.எம்.லோரன்ஸ், எச்.வி.பிரசாத் பியதர்சன், பி.ஜே.பி. அஜித்குமார, வி.ரி.அஷ்ரப், கே.வி.புஸ்பகுமார ஆகியோரே காணாமல் போயினர்.

25.02.99 அன்று முல்லைக் கடற்பகுதியில் மற்றுமொரு டாங்கிப் படகும், மீனவர்களும் காணாமல் போயுள்ளனர். எல்.ஜி.நிசாந்த, எஸ்.டபிள்யூ. நலமல் நிலாந்த, கே.எம்.சுனில், சரத் ஆகிய நான்கு மீனவர்களே காணாமல் போயினர்.

இவர்கள் சென்ற படகுகள் தாக்கப்பட்டதாக மீனவர்கள் கூறுகின்றபோதும், கடற்படையினர் அதுபற்றி எதுவும் தெரிவிக்கவில்லை.

கடந்த மூன்று ஆண்டுகளில் திருமலை மீனவர்கள் 40 படகுகளை தாக்குதலில் இழந்துள்ளனர். மூவினத்தைச் சேர்ந்த 150 மீனவர்கள் பலியாகியுள்ளனர்.

அவ்வப்போது புலிகளாலும் திருமலை மீனவர்கள் கடத்தப்பட்டு பின்னர் விடுதலையான சம்பவங்களும் நடந்துள்ளன.

## புளொட் பொறுப்பாளர் காவலில்

### அலுவலகத்திற்கு பாதுகாப்பு

யாழ் நகரில் கடந்த 23.02.99 அன்று வெட்டி வைக்கப்பட்டிருந்த தலைக்குரியவர் இனம் காணப்பட்டுள்ளார். அவரது உடலும் மீட்கப்பட்டுள்ளது. நெல்லியடி லக்ஷ்மி திரையரங்கின் அருகிலுள்ள ஒழுங்கையில் வசிக்கும் ராஜரத்தினம் ராஜேஸ்வரன் (24) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இதுபற்றி தெரியவருவதாவது; இராஜரத்தினம் இராஜேஸ்வரன் யாழ் நகரில் தனியார் கடை ஒன்றில் வேலைபார்த்து வந்தவர். இவருக்கு புளொட் இயக்கத்தினருடனும் தொடர்புகள் இருந்ததாக தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் புளொட்டின் இராணுவப் பொறுப்பாளர் சதீஸ் கொல்லப்பட்ட பின்னர் இவர்மீதும் புளொட்டுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

ஏற்கனவே யாழ் நகரில் கழுத்து நெரித்து கொல்லப்பட்டு பிணமாக வீசியெறியப்பட்ட இளைஞரும் ராஜேஸ்வரனும் நண்பர்கள் என்றும் ஒரு தகவல் தெரிவிக்கிறது.

ராஜேஸ்வரன் நல்லூரைச் சேர்ந்தவர். நெல்லியடி கன்பொல்லை கிராமத்தில் திருமணம் முடித்து, அங்கேயே தங்கியிருந்துள்ளார். நெல்லியடி லக்ஷ்மி தியேட்டர் ஒழுங்கையில் மூன்றாவது வீடு முத்துராசா என்பவருக்கு சொந்தமானது. அந்த வீட்டில் புளொட் உறுப்பினர்கள் தங்கியிருந்தனர். அந்த வீட்டைத் தாண்டியே தினமும் ராஜேஸ்வரன் தனது வீட்டுக்குச் செல்ல வேண்டும்.

ராஜேஸ்வரன்மீது சந்தேகம் ஏற்பட்ட பின்னர் புளொட் முக்கியஸ்தரான தாடிச்சிறி என்பவர் அடிக்கடி ராஜேஸ்வரன் வீட்டுக்கு சென்று வந்துள்ளார்.

தமது இராணுவப் பொறுப்பாளர் சதீசின் நினைவுதினத்தின் முன்பாக தலை ஒன்றை அவர் சுடப்பட்ட இடத்தில் வைக்க முடிவு செய்தமையால் ராஜேஸ்வரனை தீர்த்துக்கட்ட திட்டமிட்டனர்.

#### தலை தனியாக

புளொட் உறுப்பினர்கள் தங்கியிருந்த முத்துராசா வீட்டின் முன்பாகத்தான் புளொட் அலுவலகம் இருந்தது. ராஜேஸ்வரனை பிடித்து தமது அலுவலகத்தில் வைத்து தீர்த்துக்கட்டினர்.

அவரது தலையை வாளால் வெட்டி தனியாக எடுத்துவைத்துவிட்டு, உடலை பழைய பாய் ஒன்றுக்குள் சுற்றிக்காட்டினர். அதனை தமது உறுப்பினர்கள் தங்கியிருந்த முத்துராசா வீட்டு மலசலகூட குழிக்குள் போட்டு மறைத்தனர்.

முத்துராசா வீட்டில் இரண்டு மலசல கூடங்கள் இருந்தன. அதில் பாவிக்கப்படாத மலசலகூடத்திலேயே உடலைப் போட்டனர். இத் தகவல் எப்படியோ அந்தப் பகுதி மக்களுக்கு தெரியவந்தது. அதனையடுத்து அந்த வீட்டுப் பக்கம் சிலர் சென்றபோது துர்நாற்றம் வீசியிருக்கிறது. உடனடியாக கதைபரவி மக்கள் கூடிவிட்டனர். அப்பகுதி கிராம சேவையாளருக்கும் தகவல் கூறப்பட்டது.

இவ்வாறு பதற்றமான சூழல் ஏற்பட்டதும் முத்துராசா வீட்டில் தங்கியிருந்த தாடிச்சிறி உட்பட ஏனைய புளொட் உறுப்பினர்களும், அலுவலகத்தில் இருந்தோரும் தப்பியோடிவிட்டனர்.

அதன்பின்னரே படையினர் வந்து குழிக்குள் இருந்த உடலை மீட்டனர். அப்பகுதி புளொட் பொறுப்பாளரும் கைது செய்யப்பட்டார். அப் பொறுப்பாளர் உடனடியாக விடுதலை செய்யப்பட்டதாக புளொட் வட்டாரங்கள் கூறியிருந்தன. ஆனால் இன்றுவரை அவர் விடுதலையாகவில்லை.

இதற்கிடையே நெல்லியடி புளொட் அலுவலகத்தின் வேலிகளை கோபம் கொண்ட மக்கள் கொளுத்தி எரித்தனர். அலுவலகத்தை தாக்காது படையினர் தடுத்துவிட்டனர். அலுவலகத்திற்கு பாதுகாப்பளித்துள்ளனர்.

## "நிதி கேட்க மாட்டோம்!"

### புளொட் அறிவிப்பு!

மட்டக்களப்பு- செங்கலடியிலுள்ள வர்த்தகர்களை அழைத்து செங்கலடி-பதுளை வீதியிலுள்ள தமது முகாமில் புளொட் இயக்கத்தினர் கூட்டமொன்றை நடத்தினர்.

அங்கு சமூகமளித்திருந்த வர்த்தகர்கள், கடைக்காரர்களின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய புளொட் இயக்கத்தினர், "நாம் இது வரை காலமும் நிதி வசூலித்தது போன்ற நடவடிக்கையில் இனிமேல் புளொட் இயக்கம் ஈடுபடாது. அப்படி யாராவது எமது இயக்கப் பெயரைச் சொல்லி நிதி கேட்டோ அல்லது வேறேதும் தேவைகளுக்காகவோ உங்களிடம் வந்தால் உடனடியாக எமது இயக்க முகாமுக்கு அறியத் தாருங்கள். சம்பந்தப்பட்டோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்போம். உங்களிடம் நமக்கு ஏதாவது தேவையென்றால் எமது இயக்கக் கடிதத்துடன் உத்தியோக பூர்வமாக நாம் ஆட்களை உங்களிடம் அனுப்பி வைப்போம்!" என்று கூறியுள்ளார்கள்.

ஆனால் இந்த அறிவிப்புகளுக்கும் செயற்பாடுகளுக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் பதுளை வீதியில் உள்ள வயல்களில் இருந்து நகருக்குக் கொண்டு வரப்படும் நெல் மூடைகளுக்கு ஆங்காங்கே நின்று காசு வாங்குவதில் அந்த இயக்கத்தினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்கள் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

## எதிர்ப்புப் பேரணி

ஏப்ரல் முதலாம் திகதி நடைபெறத் திகதி குறிக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் குறித்து மத்திய மாகாண-சுதந்திர தேர்தலுக்கான இயக்கம்-கண்டியில் எதிர்ப்புப் பேரணியொன்றை நடாத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

மேற்படி இயக்கத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "மாகாணசபைத் தேர்தலினால் கிறிஸ்தவர்களான எமக்குப் பெரிய வெள்ளிக் கிழமை இறைவழிபாடு தடைப்படுமா? பெரிய வியாழக்கிழமை ஏப்ரல் முதலாம் திகதி வருகிறது. எமது சமய வழிபாட்டிற்கான உரிமையைப் பாதுகாப்போம். அஹிம்சை வழி எதிர்ப்புப் பேரணி எதிர்வரும் 07.03.1999 அன்று கண்டி மாநகரில் நடைபெறும். அனைவரும் அணி திரளுக!" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## மலையகத்தில் சோதனை

### புதியவர்கள் பதிய உத்தரவு

மலையத்தில் தோட்டப் பகுதிகளுக்கு புதியவர்கள் எவராவது வந்தால் உடனடியாக பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு மலையகப் பகுதிகளில் புதிய நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது.

மலையகத்தில் பல பகுதிகளில் பொலிஸ் ரோந்துகள் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மலையகத்தில் தொழில் புரியும் வடக்கு கிழக்கைச் சேர்ந்தோர் துருவித் துருவி விசாரிக்கப்படுகின்றனர்.

புதியவர்களுக்கான பதிவுகள் உட்பட மேலும் புதிய நடைமுறைகள் மலையகத்தில் கொண்டுவரப்படலாம் என்று தெரிகிறது.

மலையகத்தில் மின்மாற்றிகளுக்கு பாது காப்பளிக்கும் விடயத்திலும் பொலிசார் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். சகல மின்மாற்றிகளுக்கும் பாதுகாப்பளிக்க போதுமான பொலிசார் அங்கில்லை என்று கூறப்படுகிறது. தேர்தல் பணிகளிலும் பொலிசார் ஈடுபட உள்ளதால் மலையகம் உட்பட நாட்டின் முக்கிய பகுதிகளில் மின்மாற்றிகளை பாதுகாப்பது கடினமாக இருக்கப்போகிறது.

## சர்வதேச பெண்கள் தினம்

### திருமலையில் பண்பாட்டுப் பவனி

சர்வதேச பெண்கள் தினத்தை, முன்னிட்டு திருமலையில் பண்பாட்டுப் பவனி ஒன்று நடைபெறவுள்ளது. எதிர்வரும் மார்ச் 08ம் திகதி திங்கட்கிழமை இப் பவனி நடைபெறவுள்ளது. திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையும, அரங்க செயற்பாட்டுக் குழுவும் இந்தப் பவனிக்குரிய ஏற்பாட்டைச் செய்து வருகின்றன.

ஏற்கனவே கொழும்பு நகரில் எழுச்சியான முறையில் அரங்க செயற்பாட்டுக் குழு பவனி நடத்தியிருந்தது. பெண்களும், ஆண்களும் வீதிகளில் புரண்டும், இரத்தம் தோய்ந்த ஆடைகளை இழுத்துச் சென்றும் ஆர்ப்பரித்தனர். "பயமற்ற வாழ்க்கை மீண்டும் வேண்டும்" என்று கோஷித்தனர்.

அதே போன்றதொரு எழுச்சிமிக்க பவனியே திருமலையில் நடைபெறவுள்ளதாக அரங்க செயற்பாட்டுக் குழுவினர் கூறியுள்ளனர்.

காலை பத்து மணிக்கு திருமலை சிவன் கோயிலில் இருந்து புறப்படும் பவனி திருமலை நகரசபை மண்டபத்தை சென்றடையும். பகல் 12.30 க்கு எழுச்சிக் கூட்டம் நடைபெறும்.

கையில் தீப்பந்தம் ஏந்தியபடி பெண்கள் பலர் இப்பவனியில் அணிவகுத்துச் செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'பயமற்ற வாழ்வை மீண்டும் அடைந்திட, கைகளில் கனலேந்தி பெண்கள் நாம் அணி திரள்வோம்!' என்று பெண்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

## ஒரே தினத்தில் நடவடிக்கை?

### மூவருக்கு மரண தண்டனை!

மட்டக்களப்பில் புலிகளின் வசமுள்ள பட்டிப்பளைப் பகுதியில் இருவரும் படையினரின் கண்காணிப்பின் கீழுள்ள தன்னாமுனையில் ஒரு பெண்ணுமாக மூன்று பொதுமக்களுக்கு கடந்த வாரம் புலிகள் மரண தண்டனை வழங்கினர்.

கடந்த 24.02.99 அன்று காலை அம்பிளாந்துறைச் சந்தியில் கிராம சேவை உத்தியோகத்தரான ரி. கணேசலிங்கம் (35) என்பவர் பொதுமக்கள் முன்னிலையில் குற்றத் தீர்ப்பு வெளிப்படுத்தப்பட்ட பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது மனைவியும் சில காலங்களுக்கு முன்னர் புலிகளால் குற்றம் காணப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று கூறப்படுகிறது.

சீருடையினர் உட்பட புலிகள் இயக்கத்துக்கு விரோதமான தமிழ்க் குழுக்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார் என்பதே கிராம சேவகர் மீது சாட்டப்பட்ட பிரதான குற்றச்சாட்டாகும்.

அதே தினத்தன்று பட்டிப்பளைச் சந்தியில் எஸ். கருணாகரன் (33) என்பவருக்கும் பொது இடத்தில் வைத்துப் புலிகள் மரண தண்டனை வழங்கிச் சுட்டுக் கொன்றனர்.

அதே தினத்தன்று மாலை 7.35 அளவில் இரு பிள்ளைகளின் தாயான ஈ.மேரி பெனடிக்ற் (30) என்பவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். கணவனைப் பிரிந்து வாழ்ந்த இவர் வெளிநாட்டில் வீட்டுப்பணிப் பெண்ணாக இருந்துவிட்டு வந்திருந்தார் என்று தெரியவருகிறது.

தன்னாமுனைப் பகுதியில் புலிகளின் நடமாட்டங்கள் பற்றிய தகவல்கள் உடனுக்குடன் படையினருக்கு எட்டி விடுவதால் புலிகள் அதிருப்தியுடன் இருந்துள்ளனர்.

கொல்லப்பட்ட பெண், சீருடையினருடன் தொடர்பு வைத்திருந்தார் என்றும் முன்னர் பலதடவை புலிகளால் எச்சரிக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

## இராணுவ அதிகாரிக்குத் தடை!

### தளபதி கடும் ஆட்சேபம்!

அமெரிக்க ஆதிக்கத்திலுள்ள ஹாவாயில் அமெரிக்க இராணுவத்தின் 'பசிபிக் கொமாண்ட்' அமைப்பில் நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக சிறீலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். பேரார்வத்துடன் அவர் பயண ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார். இருவாரங்களுக்கு முன்னர் அவர் விமானம் ஏற ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்த போது, திடீரென அவருக்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

முன்னாள் இராணுவத் தளபதி, ரோஹன் டி எஸ்.தலுவத்தைதான் இந்த அதிகாரியின் பெயரை சிபார்சு செய்தாராம். இந்த அதிகாரியின் பயணத்தைத் தடை செய்ததை ஆட்சேபித்து தற்போது இராணுவத் தளபதியாகவுள்ள லெப். ஜெனரல் சிறிலால் வீரசூரிய வெளிநாட்டமைச்சுக்குக் கடிதம் எழுதியுள்ளாராம்.

இந்த அதிகாரி அமெரிக்காவுக்குச் செல்வதற்குத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டமைக்கான காரணம் என்ன தெரியுமோ? இவர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய காலத்தில் பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்குக் காரணகர்த்தாவாக இருந்துள்ளாராம். இவ்வாறு இராணுவத்திலுள்ள அதிகாரிகள் சிலர் தெரிவிக்கின்றனர்.

இத்தகவலை ஆங்கில வார ஏடான 'சண்டே டைம்ஸ்' வெளியிட்டுள்ளது.

இந்நாட்டில் மனித உரிமைகளை மீறி எத்தனையோ மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்று நிரூபிக்கப்பட்டபோதும், பலர், இத்தகைய 'தண்டனை'க்குள்ளாக்கப்படவில்லை. இவருக்கு மட்டும் ஏன் இந்தப் பாரபட்சம் என்று கேள்வி எழக்கூடும்.

'சோழியன் குடுமி சும்மா ஆடுமா?'

'சிறீலங்கா அரசுப் படைகளும் விடுதலைப்புலிகளும் மனித உரிமை மீறல்களில் மோசமாக ஈடுபட்டு வருகின்றன!' என்றொரு குற்றச்சாட்டை அண்மையில் வெளியாகிய அமெரிக்க அரசாங்க அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

இக்கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தில், மனித உரிமைகளை மீறியவர் என்ற நிலையிலுள்ள ஒரு வரை சிறீலங்கா அரசு அங்கு அனுப்பி வைத்தால் ஏதாவது ஏடாகூடமாக நடந்து விட்டால் என்னாவது?' என்று உயர் மட்டத்தி லுள்ளவர்கள் கடைசி நேரத்தில் கருதியிருக் கக்கூடும், என்று அவதானிகள் கூறுகின்றனர்.

## தகவலுக்கு சன்மானம்

யாழ் நகரில் 02.02.99அன்று கழுத்தை நெரித்து கொல்லப்பட்டு பிணமாகக் கிடந்தவர் செல்லையா புவீந்திரன்(25).

அவரது கொலைக்கு காரணமானவர்கள் பற்றி தகவல் கொடுப்போருக்கு 25 ஆயிரம் ரூபாய் சன்மானம் தரப்படும் என்று படையினர் அறிவித்துள்ளனர்.


படிப்பகம்

# மன்னார் மருத்துவமனை

## அவலநிலை என்று தீரும்?

(மன்னார் நிருபர்)

மன்னார் ஆதார வைத்தியசாலையில் போதியளவு மருந்துகள் இல்லாமையால் ஆஸ்பத்திரியை முடிவிட முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவ்வைத்தியசாலைக்குத் தேவையான ஜனவரி-மார்ச் மாதங்களுக்கான மருந்துகள் அனுப்பப்படாததால் இங்கு கொஞ்சமேனும் மருந்துகள் இல்லை. மருத்துவர்களும் போதியளவு நியமிக்கப்படவில்லை.

வவுனியாவிலுள்ள மாகாண சுகாதார பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தினாலேயே மன்னாருக்கு மருந்துகள் விநியோகிக்கப்படுகின்றன. இந்த அலுவலகம் அண்மைக் காலமாக மன்னாருக்கு மருந்துகளை அனுப்பி வைப்பதில் அசட்டைத்தனம் காட்டி வருகிறது.

இதனால் கடந்த 20ஆம் திகதி கிளினிக்குகளுக்கு வந்த பெருமளவான நோயாளர்கள் சிகிச்சை பெறமுடியாமல் திருப்பி அனுப்பப்பட்டனர். வார்ட்டுகளில் தங்கியிருப்போரும் மருந்தின்றி உயிரபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்கள் மருந்துச் சிட்டையுடனேயே திரும்பிச் செல்கின்றனர்.

வன்னிப் பகுதியிலிருந்து வரும் நோயாளர்களும், இங்குள்ளவர்களும் சிகிச்சையின்றி பலத்த பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். தனியார் மருத்துவ நிலையங்களும் இப்பகுதியில் குறைவாகவே உள்ளன.

# உறுதிமிகு பாலர்கள்



வன்னியில் பொருளாதார முற்றுகை மத்தியிலும் மக்களின் மன உறுதி வியக்க வைக்கும் ஒன்றாகும். வெளியுலகிலிருந்து துண்டிக்கப்பட்டது போலிருக்கிறது வன்னி நிலை. அது ஒரு வேறு தேசம் போன்றே அரசும் அணுகி வருகிறது.

இவ்வாறான நிலையிலும் நம்பிக்கையை தளரவிடாது வாழ்க்கை நகர்கிறது. கஷ்டங்கள் மத்தியில் வாழப் பழகிவிட்டதால், மன உறுதியோடு எதிர்காலத்தை சந்திக்கும் துணிச்சலும் அம் மக்களிடம் காணப்படுகிறது.

படத்தில் உள்ளது கிளிநொச்சி இராமநாதபுரம் முன் பள்ளி பாலர் பாடசாலைக் குழந்தைகளது அணி வகுப்பு.

இது கிளிநொச்சி அரச அதிபர் கியூடெக் நிறுவனம், முன் பள்ளி அபிவிருத்தி சபை என்பவற்றால் பராமரிக்கப்படும் பாடசாலையாகும்.

அப் பாலர் பாடசாலையில் மகிழ்வு விழாவில் மன உறுதியோடு நிற்கும் குழந்தைகளையே காண்கிறீர்கள். சூழ்நிலைதான் சிந்தனையைத் தீர்மானிக்கிறது.

# பாராட்டத்தக்க பெறுபேறு

"வன்னியில் அன்றாட வாழ்க்கையே அவலத்துக்கு உள்ளாகியிருக்கும் நிலையில் அண்மையில் வெளியாகிய க.பொ.த (உ.த) பரீட்சை முடிவில் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்தின் (சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா) பெறுபேறுகள் பாராட்டப்படத்தக்கதாக உள்ளது. பரீட்சையில் தோற்றிய 17 மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்றுள்ளனர். அதில் 9 பேர் 250 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

5 மாணவர்களுக்கு பல்லைக்கழக அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பாடசாலையின் மொத்த ஆசிரியர்கள் ஒன்பதுபேர். மூன்று பாடங்களைக் கற்பித்தவர்கள் ஒரு ஆசிரியை, பிரதி அதிபர்.

நான்காவது பாடமாகிய புவியியலைக் கற்பித்தவர் புவியியலைப் பாடமாகக்கொள்ளாத வணிகப்பட்டதாரி. தனியார் கல்வி நிலைய வசதிகள் இல்லாத நிலையில் விசேட வகுப்புக்களை நடாத்த ஆசிரியர்களுடன் பழைய மாணவர்களும் உதவினர்.

# வாக்குகளை கவரும் திட்டம்

## இரு அணிகளும் குறிவைப்பு

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபைத் தேர்தலையடுத்து கண்டி மஹியாவை தமிழ் தொழிலாளர்களின் வாக்குகளை எப்படியாவது தட்டிக்கொள்ள வேண்டுமெனக் கருதி மாகாண சபையில் போட்டியிடும் வேட்பாளர்கள் பலரும் மிகுந்த பிரயத்தனம் எடுத்து வருகின்றனர்.

சுமார் 2000 வாக்குகளை இங்கு தமது வெற்றிக்காக உறுதிப்படுத்திக் கொள்ள பொ.ஜ.ஐ.முன்னணியும் ஐ.தே.கட்சியும் துடியாய்த் துடிக்கின்றன.

மஹியாவையில் வசிக்கும் இத்தகைய தொழிலாளர் பரம்பரையினர் கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்தும் பலகையினாலும் மண் சுவரினாலும் தயாரிக்கப்பட்ட ஒடுக்கமான குடிசைகளில் சுகாதார சீர்கேடுகளுக்கு மத்தியில் நெரிசலாக வாழ்ந்து வருகின்றனர். இதனை உணர்ந்த மத்திய அரசு கடந்த வாரம் முதல் கட்டமாக 200 வீடுகளை அவர்களுக்கு நிர்மாணித்துக் கொடுக்க முன் வந்துள்ளது. இந்த மாடி வீட்டுத் திட்டத்திற்கு தமது பூரண ஆதரவை வழங்கவும் அமைச்சர் இந்திக்க குணவர்தன உறுதி பூண்டு அடிக்கல்லையும் நாட்டிச் சென்றுள்ளார்.

கடந்த அரசாங்க காலத்தில் இதே போன்ற திட்டத்தை அரசியல்வாதிகள் முன்வைத்த போதிலும் எதுவும் நடைபெறவில்லை என்பதையும் அப்பகுதி மக்கள் முரசுக்குத் தெரிவித்திருந்தனர்.


BRIGHT NEW METHOD

SPOKEN ENGLISH

பேச்சு ஆங்கிலம்

தபால் மூலமும் நேரிலும் நடைபெறும்



ஆங்கிலம் பேச வேண்டும் என்று விருப்பம்

ஆனால்......

ஏதாவது தவறாகப் பேசி விடுவோமா என்ற தயக்கம், பயம்.

மற்றவர்கள் ஆங்கில மொழியை பேசும் போது புரிந்து கொள்ள முடிகிறது

ஆனால் பேசும் போது தயக்கம்

இது தானே உங்கள் பிரச்சினை

கவலையை விடுங்கள்!

மிக குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் பேசப் பழக முடியும் நேரில் கற்க விரும்புவோர் தொலைபேசி மூலமோ, நேரிலோ தொடர்புகொள்ளவும். தபால்மூலம் கற்க விரும்புவோர் கீழ்க்காணும் விண்ணப்பப்படிவத்துடன் சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்ளவும்.

பெயர்: ..........

விலாசம்: ..........

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S- 27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX. P.O. BOX NO: 162, COLOMBO - 11 TELE: 434770, 074-718592



மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை

வவுனியாவில் மார்ச் 13,14,15ம் திகதிகளில் சந்திக்கலாம்

(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)

(HOTEL VASANTHAM), 40,கண்டி வீதி, வவுனியா. T.P.024-22607, 024-22615, 22365

கொழும்பில் மார்ச் 20 முதல் 25 வரை சந்திக்கலாம்

Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388

கல்முனையில் மார்ச் 6,7ம் திகதிகளில் சந்திக்கலாம்

T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329

கடிதத்தொடர்பு:- Resident T.P. 065-24019
Dr. P.Arumugam S.A.M.P.
No. 51/5, Koolavady Road, Batticaloa. SRI LANKA.



உடன் விற்பனைக்கு

புத்தம்புதிய கொத்ரேஜ் தமிழ் எலெக்ரோனிக் ஸ்கிரிப்ரா தட்டச்சு இயந்திரம். (Godrej Tamil Electronic Type writer. model-Scripta single line with 16 KB memory)
மற்றும் ஒலிம்பியா எலெக்ரோனிக் தட்டச்சு இயந்திரம் (Olympia Compact 5 DM)
இரண்டும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
தொலைபேசி எண்: 074-514282



காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-6.
T.P:- 586218



மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள்.
இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.
067-50349



THE WORLD ENGLISH

தபால் மூலம் ஆங்கிலக் கல்வி

ஆங்கிலக் கல்வியை அரிச்சுவடியிலிருந்து கற்பதற்கு அரியதோர் சந்தர்ப்பம்!

அதிஷ்டம் அழைக்கிறது'

1000 புலமைப் பரிசில்கள்

எமது கல்வி நிறுவனத்தினால் வழங்கும் அதிஷ்ட சீட்டிழுப்பு மூலம் 1000 புலமைப்பரிசில் திட்டத்தில் இணைந்து, ஆங்கில மொழியில் சிறந்த பெறுபேற்றைப் பெற இன்றே செயற்படுங்கள்!

- ஆங்கிலத்தில் சிறந்த மொழித்திறனை அடைந்து, அதனை தொடர்ந்து இலகுவாக கற்கும் ஆற்றலை ஏற்படுத்துவதற்கும்.
- எமது 2 ஆம் கட்டபாடநெறி எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என்பதனை விளங்கிக் கொள்வதற்கும்.
- உங்கள் நம்பிக்கையின் மகத்தான சின்னமாக இப்பாடநெறி தயாரிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவுத் திகதி 1999-03-20

விபரங்களைத் தெளிவாக தொலைபேசி மூலம் பெறுவதாயின், 066-40126 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்க.

விண்ணப்பப் படிவங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும் ரூபா 3/50 முத்திரையுடன் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

SLI SHAKESPEARE'S LANGUAGE INSTITUTION
01, BATAGOLLADENIYA,
KANDY. TEL: 066-40126, 072-243503

ENGLISH: FOR YOUR SUCCESSFULL FUTURE



மஹாசக்தி மருத்துவம்



GOVT APPROVED CHARITABLE Services Reg NO. HA 14-BT/176

காலம் பகைக்கும்போது காதல், திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத் தடைகளும் கணவன், மனைவி குடும்ப பிரச்சனைகள், அன்புக்குரியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், மதுவிற்கு அடிமை, தகாத உறவு, தீய சக்திகளின் தொல்லைகள், தீராத உடல்நோய், மனநோய், மருந்தீடு, வேறு பிரச்சனைகளும் ஏற்படலாம். இவைகளிலிருந்து விடுபட அல்லது வெற்றிகொள்ள இலவசமாக சோதிட மருத்துவ மனோதத்துவ, மாந்திரீக ஆன்மீக ஆலோசனைகள் வழங்குகின்றார் மஹாசக்தி உபாசகர் (வைத்திய கலாநிதி) சுகாதார அமைப்பினால் பதிவு செய்யப்பட்ட இந்தியன் வைத்தியசாலையின் டாக்டர்- "மந்திரயோகி"
(D.H.M.S.D.Ac (இலங்கை), M.B.B.S.H. D.S.M. (இந்தியா)) வரமுடியாதவர்கள் வெளிநாட்டவர்கள் வெளியில் சொல்லமுடியாத வெட்கமான, வேதனையான பிரச்சனைகள் நோய்கள், தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகள் கோரிக்கைகளை எழுதியும் தொலைபேசி மூலமும் தொடர்புகொண்டு தபால் மூலம் விருப்பங்களை நிறைவேற்றலாம். மாலை 4-30 மணியிலிருந்து 6.30 மணிவரை தியான (MEDITATION) நேரமாகையால் தொடர்பு கொள்ளப்படாது. விரும்பி அனுப்பும் குருதட்சணைகளை ஏற்று முதலில் உடன் கவனிக்கப்படும். மணியோடர்: ராப்ற் எடுக்கவேண்டிய பெயர் GURUSACKTHY CENTRE" (INDIAN CLINIC) விலாசம். மட்டக்களப்பு, கல்லடி, மணிக்கூட்டு கோபுரத்துக்கு கிழக்குப்பக்கம் இராமகிருஷ்ணபுரம் வீதியில்.

தொலைபேசி இலக்கம் 065-24872

INDIAN CLINIC (GURUSKTHY CENTRE)
KALLADY-BATTICALOA (P.O) (SRI LANKA)



1வது பிறந்த நாள் வாழ்த்து



செல்வன் ஜஹுசன் / 20.02.1999

யாழ் ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதியைச் சேர்ந்த சந்திரன்-மயூரதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜஹுசன் தனது முதலாவது பிறந்த நாளை மன்னார் இலுப்பைக்கடவையில் உள்ள தனது இல்லத்தில் 20.02.1999 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, லெபனானில் உள்ள பெரியமாமா, அத்தை(செல்வி), ஜீவா மச்சாள், நிசானா மச்சாள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் ஆனைக்கோட்டை வரத விக்கினேஸ்வரர் விநாயகர் அருளால் சகல கலைகளும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- கண்ணன் (மாமா), லெபனான்.





மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.



RAMY CDS RAMY CDS RAMY CDS RAMY CDS

உலகப் பிரசித்தி பெற்ற உயர்தர (ரமி) இசைத்தட்டுகள்

ஆங்கிலோ-இந்திய கூட்டுத் தயாரிப்பாளர்கள் EMI-RPG அமைப்புடன் RAMIY இணைந்து பழைய-புதிய பாடல்களை சர்வதேசத் தரத்தில் (CD's) இசைத்தட்டுக்களாக வெளியிட்டுள்ளனர்.

இவற்றை இலங்கையில் அறிமுகப்படுத்துவதில்

ஏ.கே.வி. எம்போரியம் பெருமைப்படுகிறது.

நாடெங்கும் விற்பனை முகவர்கள் தேவை.

நியாய விலையில்-சர்வதேசத் தரத்தில்-RAMIY CDS.

எமது விசேட வெளியீடு — மன்னார் மடு மாதா மீதான கிறிஸ்தவ கீதங்கள்

A.K.V. EMPORIUM
F 119, PEOPLES PARK,
COLOMBO-11.
Phone:435744, 472129

சுவிற்ஸர்லாந்தில் —
RAMIY RECORDS
GMBH
KOCHLI STR-028
8004-ZURICH.
Phone: 004181252525013




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

கொழும்பிலிருந்து வன்னிக்குச் சென்று வந்த சர்வமதக் குழுவினர் சமாதானப் பேச்சு பற்றி கூறிக்கொண்டிருக்கையில், கொழும்பிலிருந்து பெரும் தொகையான ஆயுத தளபாடங்கள் வன்னிப் போர்முனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

கடந்த வாரம் வவுனியா நகர் வழியாக ஆயுத தளபாடங்கள் ஏற்றப்பட்ட 'கொன்டெயினர்களும்', புதிய டாங்கிகளும் வரிசையாக போர்முனை நோக்கிச் சென்றதை காண முடிந்தது.

எவ்விதமான இரகசியமும் இன்றி பகிரங்கமாகவே இந்த ஆயத தளபாட விநியோகம் நடைபெற்றுள்ளது.

வன்னிசென்ற சர்வமத தூதுக்குழுவுக்கு அரசின் மறைமுக அனுக்கிரகம் இருந்தது ஒன்றும் இரகசியமல்ல.

வவுனியா-மன்னார் சாலையில் நிலை கொண்டுள்ள படையினரில் ஒரு பகுதியினர் வவுனியா யாழ் சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

வவுனியா-யாழ்சாலையில் நிலை கொண்டிருந்த பொலிசாருக்கு பதிலாகவே அவர்கள் கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கிருந்த பொலிஸ் அணியை கொண்டு வந்து வவுனியா-மன்னார் சாலையில் நிறுத்தியுள்ளனர்.

பொலிசார் இடமாற்றம் கோரியதால் அவ்வாறு செய்யப்பட்டதாக கூறும் காரணம் நம்பத் தகுந்ததாக இருக்கவில்லை.

ஏனெனில் வவுனியா-யாழ் சாலையில் நின்றாலும் ஒன்றுதான், வவுனியா-மன்னார் சாலையில் நின்றாலும் ஒன்றுதான். இரண்டுமே வன்னிப் போர் முனை சார்ந்த பகுதிகள்தான். புலிகளது தாக்குதலுக்கு இலக்காகக்கூடிய பகுதிகள்தான்.

வவுனியா, யாழ் சாலையில் பணியாற்ற

உள்ளதால், பிரதான முனைகளை பலப்படுத்தும் அவசியமும் நேர்ந்துள்ளது.

ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்பாக புலிகள் பாரிய தாக்குதல் எதனையும் மேற்கொண்டு விடக்கூடாது என்பது அரசின் கவலை.

புலிகளது தாக்குதலை தடுப்பதற்கு அரசிடம்இரண்டே இரண்டு மார்க்கங்கள் உள்ளன.

ஒன்று; புலிகள் தாக்குதல் நடத்த ஒன்று குவியாது தடுக்க வன்னியில் பல முனை நகர்வுகளை மேற்கொள்வது.

இரண்டு; புலிகளது பாரிய தாக்குதலை தடுத்து நிறுத்தக்கூடிய தற்காப்பு நிலையை வலுப்படுத்துவது.

இந்த இரண்டு மார்க்கங்களில் முதல் மார்க்கம் சற்று ஆபத்தானது. தாக்குதல் ஒன்றை ஆரம்பித்து, புலிகள் பதிலடி கொடுத்தால் அது தேர்தல் அரங்கிலும் எதிரொலிக்கும்.

எப்படியாகிலும் வன்னிப் போர்முனை உட்பட நாட்டின் எப்பகுதியிலும் புலிகளது பாரிய தாக்குதல் எதனையும் ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்பாக நடக்கவிடக்கூடாது என்பதுதான் அரசின் ஆசை.

இந்த ஆசை காரணமாகத்தான் சர்வமத தூதுக்குழுவை வன்னிக்கு அனுப்பவும்

மலையகம்தான் தற்போது இலங்கை அரசுக்கு அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுக்கும் முக்கியமான தொழில்துறை பிரதேசம்.

அங்கு சீர்குலைவை ஏற்படுத்துவது அரசின் பொருளாதார நிலையை மேலும் ஆட்டம் காணவைக்கும் என்பதே புலிகளது நோக்கம்.

மலையகத்தில் முதலில் குண்டுவைத்தது ஈரோஸ் இயக்கம். பேதுறுதாலகால மலையில் இருந்த தொலைத் தொடர்பு கோபுரத்தை தகர்க்க குண்டு வைக்கப்பட்டது.

ஈரோசில் மலையக இளைஞர்கள் பலர் இருந்தனர். அவர்களும் அத் தாக்குதல் நடவடிக்கையில் பங்குகொண்டனர்.

புலிகளுடனும் மலையக இளைஞர்கள் பலர் இணைந்துள்ளனர். சமீபகாலத்தில் அவர்கள் இணையும் வீதம் அதிகரித்துள்ளது.

மலையக இளைஞர்களுடன் இணைந்து மலையகத்தில் பொருளாதார சீர்குலைவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு மட்டக்களப்பு மாவட்ட புலிகள் அணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, குன்றுகளில் தொடர்ந்தும் குண்டுகளது ஓசைகள் கேட்காமலிருக்காது.

***

**ஆ**னைமிறவில் 26.02.99 அன்று குண்டு ஒன்று வெடித்ததாக செய்தி வெளியாகியது. இது தற்செயலாக வெடித்தது என்று மட்டுமே படைத்தரப்பால் கூறப்பட்டது. மேலதிக விபரங்கள் கூறப்பட்டவில்லை.

ஆனால் புலிகளின் குரல் வானொலி இக் குண்டு வெடிப்பு நடந்த மறுநாளே, அது எங்கு வெடித்தது என்ற தகவலை துல்லியமாகக் கூறியது. ஆனாலும் அக் குண்டு வெடிப்புக்கு புலிகள் உரிமை கோரவில்லை.

புலிகள் குண்டுத் தாக்குதல்கள் நடத்துபவர்கள். அதனால் புலிகளது முகாமில் குண்டு வெடிப்பு தற்செயலாக நிகழ வாய்ப்புண்டு. ஆனால்....

குண்டுவெடிப்பு தற்செயலாக நடந்தது என்றால் ஹெலிகள் பறந்து திரிந்ததும், ஷெல்லடி ஓசைகளும் கேட்டதும் ஏன்?

வன்னியில் வெடிகுண்டுகளை புலிகள் அதிகம் பயன்படுத்த உள்ளதாக சென்ற வாரம் கூறியிருந்தோமல்லவா. ஆனால் படையினர் குறிப்பிட்ட குண்டு வெடிப்பு சேத விபரங்கள் பற்றி மேலதிக தகவல் எதனையும் கூறாதுவிட்டுள்ளனர்.

ஆனையிறவு படையணிப் பொறுப்பு அதிகாரியும் முன்னாள் இராணுவப் பேச்சாளருமான சரத்முனசிங்காவுக்கு காயம் ஏற்பட்டதா? படையினர் சிலர் பலியானார்களா? என்று உலாவிய செய்திகளை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை. ஆம் அல்லது இல்லை என்ற பதிலைப் பெறமுடியவில்லை. நாம் அறிந்த தகவலைத்தர தணிக்கை இடமளியாது.

# குன்றுகளில் தொடரப்போகும் குண்டோசை

ஏப்ரல் முதலாம் திகதி ஐந்து மாகாண சபைகளுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது.

அதற்கு முன்பாக வன்னியில் பாரிய படை நகர்வு ஒன்றுக்கு முயற்சித்துப் பார்க்கும் விருப்பம் அரசுக்கு இருக்கலாம். ஆனால் சமீபத்தில் பெய்துள்ள கடும் மழையால் புவியியல் சூழ்நிலை அதற்கு சாதகமாக இருக்காது.

மாங்குளத்தால் முன்னேற முடியாது போனால், ஒட்டிசுட்டானில் இருந்து முல்லைத் தளம் நோக்கி நகர்ந்து பார்க்கவும் அரசு திட்டமிடலாம்.

வன்னிப் படையதிகாரியாக இருக்கும் மேஜர் ஜெனரல் பலகல்ல மணலாறு பகுதிக்கான பொறுப்பையும் மார்ச் 10ம் திகதி முதல் ஏற்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மணலாற்றுப் பகுதி உட்பட வன்னியில் நிலை கொண்டுள்ள சகல படைப்பிரிவுகளையும் ஒரே அதிகாரியின் பொறுப்பின்கீழ் கொண்டுவந்து, சகல படைப்பிரிவுகளையும் ஒருமுகப்படுத்தி நடவடிக்கையில் இறக்க வசதியாகவே இவ்வாறு செய்யப்பட்டிருக்கலாம்.

முல்லைத்தீவு தளத்தை பலவீனப் படுத்துவதற்கு ஒட்டிசுட்டானில் இருந்தும், மணலாற்றுப் பகுதியில் இருந்தும் படை நகர்வை இரு முனைகளில் மேற்கொள்ளும் யோசனைகூட இருக்கலாம்.

பிரேமதாசா அரசு பதவியில் இருந்த போது மணலாற்றுக் காட்டுப் பகுதியில் பாரிய படை நகர்வொன்று மேற்கொள்ளப்பட்டது. பல நாட்களாக நடந்த சமரின் பின்னர் படையினர் பழைய நிலைகளுக்கு திரும்பினர்.

அப்போது மேஜர் ஜெனரல் பலகல்ல இராணுவ புலனாய்வுப் பிரிவில் முக்கிய பொறுப்பில் பிரிகேடியர் தரத்தில் இருந்தார்.

வன்னிப் படையணிகளுக்கு பொறுப்பாக மேஜர் ஜெனரல் பலகல்ல நியமிக்கப்பட்ட பின்னர் பாரிய படை நகர்வுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

முன்னேறித் தாக்குவதைவிட, முதலில் தமது அணிகளை வலுப்படுத்துவது, கைப்பற்றிய பகுதிகளில் உள்ள ஓட்டைகளை அடைத்து தற்காப்பு அரண்களை கெட்டிப் படுத்துவது என்பவற்றில்தான் பலகல்ல கவனம் செலுத்தியுள்ளார்.

படைகள் முன்னோக்கி நகரும்போது பின்புறத்திலோ, விலாப் பகுதிகளிலோ புலிகளால் தாக்கப்படாது தடுப்பதும் பிரதானம் என்பது பலகல்லவின் உத்தி.

'மெதுவாக ஆனால் உறுதியாக' என்ற உபாயத்தோடு படை நகர்த்துவதே மேஜர் ஜெனரல் பலகல்லவின் திட்டம்.

கடந்தவாரம் ஆயுத தளபாட குவிப்புடன், மேலும் சில போர்க்கள மாற்றங்களும் படைத்தரப்பில் செய்யப்பட்டன.



பொலிசார் மறுத்திருந்தால், வவுனியா மன்னார் சாலையில் பணியாற்றவும் மறுத்திருப்பர்.

எனவே, வவுனியா-யாழ் சாலையில் படையினரால் ஏற்கனவே கைப்பற்றப்பட்ட பகுதிகளை கெட்டிப்படுத்தும் தற்காப்பு நடவடிக்கையின் ஒரு கட்டமே இந்த இடமாற்றங்கள்.

மாங்குளம் மற்றும் ஒட்டிசுட்டான் சண்டை முனைகளுக்கும் வவுனியா படைத் தளத்திற்கும் இடையேயான தொடர்பைத் துண்டித்து ஊடறுப்புத் தாக்குதலை புலிகள் நடத்த திட்டமிடலாம்.

உடனடியாக செய்யாது போனாலும் படை நகர்வு ஆரம்பிக்கும்போது, தம்மை முன்னால் நகரவிட்டு பின்னால் வந்தோ, விலாப்பக்கமாக வந்தோ புலிகள் ஊடறுப்பு நடத்தலாம் என்று படையினர் நினைப்பதாக தெரிகிறது.

அதனால்தான் பின்னரங்க நிலைகளும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளன.

இன்னொன்று, புலிகள் மிக நீண்ட தாக்குதல் நிறுத்தம் ஒன்றை கடைப்பிடிப்பது படை உயர் மட்டங்களை ஆழ்ந்த குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்தளவுக்கு நீண்ட இடைவெளி கொடுத்திருப்பது, ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு என்பது போன்று, பெரும் தாக்குதல் ஒன்றுக்கான தருணம் பார்த்திருக்கிறார்களோ என்றும் படைத் தரப்பை சந்தேகிக்க வைத்துள்ளது.

இந்தத் தாக்குதல் நிறுத்தம் என்பது புலிகளது பலவீனத்தை குறிக்கவில்லை என்பதும், தமது அணிகளை புலிகள் புனரமைப்பதோடு, பெருமளவான புதிய தயாரிப்புக்கள், களஞ்சியப்படுத்தல்கள் என்பவற்றில் ஈடுபட்டுள்ளனர் என்பதும் படையினர் அறியாதது அல்ல.

வன்னியில் புலிகள் எந்த முனையில் தாக்குதல் தொடுப்பர் என்பது கேள்விக்குறியாக

பின்னணியில் நின்றது அரச தரப்பு.

ஏப்ரல் முதல் தேதிக்கு முன்பாக புலிகள் பாரிய தாக்குதல் நடத்தாது தணிப்பதற்கு சர்வமத தூதுக்குழுவின் விஜயம் உதவும் என்று அரச தரப்பில் சிலர் கருதினராம்.

தூதுக்குழுவில் சென்று வந்த அரசுக்கு வேண்டப்பட்ட ஒருவர் கூறிய தகவல்கள் அரசுக்கு திருப்தியளிக்கவில்லை. அரசுடன் பேச வேண்டும் என்று புலிகள் விழுந்தடித்து நிற்கவில்லை. தமது பலத்தை முன்னிறுத்தியே பேசியுள்ளனர். அரசுமீது குறிப்பாக ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் மீது தமது பலத்த அதிருப்தியையும் தெரிவித்தனர் என்று அவர் கூறியிருக்கிறார்.

இதனால் தமக்கு தேர்தலில் பாதகம் ஏற்படுத்த புலிகள் முனையக்கூடும் என்ற அபிப்பிராயம் அரச தரப்பில் வலுவடைந்துள்ளது.

அதன் காரணமாகவே போர் முனைத் தளபதிகளுக்கு, புலிகளது பாரிய தாக்குதல்கள் இடம்பெறாது பார்த்துக் கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளதாம்.

புதிய தாக்குதலை எதிர்கொள்ளவும், தாக்குதல் சமர் ஒன்றை நடத்தவும் புலிகளும் தயார் நிலையில் உள்ளனர். எனவே கள அமைதி நீடிக்கப் போவதில்லை.

எப்படியோ வன்னியில் போர் முழக்கம் விரைவில் கேட்கத்தான் போகிறது. அந்த முழக்கத்தை முதலில் எழுப்பப்போவது படைத் தரப்பா? புலிகளா? என்பதே கேள்வியாகும்.

●●●

**ம**லையகப் பெரும்தோட்ட தொழிற்துறை புலிகளது இலக்குகளில் ஒன்றாக மாறியுள்ளது.

மலையகமெங்கும் புலிகள் தமது இரகசிய மையங்களை அமைத்துள்ளனர். அவற்றில் ஒன்றுதான் கடந்த ஆண்டு கண்டியில் கண்டு பிடிக்கப்பட்டது.

வவுனியாவில் கைதான புலி ஒருவர் கூறிய தகவலை வைத்தே கண்டியில் உள்ள மறைவிடம் கண்டுபிடிக்கப்பட்டது.

மின்மாற்றிகள், நீர்த்தாங்கிகள், தொழிற்சாலைகள், தொலைத் தொடர்புகள் போன்றவற்றை தாக்கித் தகர்ப்பதே உடனடியான வேலைத் திட்டம்.

சமீபத்தில் பதுளையில் நீர்த்தாங்கி ஒன்றை தகர்க்கும் முயற்சி தோல்வி கண்டுள்ளது.

தொழில் நுட்பத் தவறால் குண்டு முன்கூட்டியே வெடித்து, கொண்டு சென்றவரை காட்டிக் கொடுத்துவிட்டது.

காயமடைந்து பலவீனமாக இருந்தவரிடம், தகவலை உடனே கறந்து மேலும் சிலரை பொலிசார் கைது செய்தனர்.

புலிகளுக்கு இது எதிர்பாராத விபத்து. குண்டுபொருத்தி காயமடைந்தவர் மட்டக்களப்பை சேர்ந்தவர்.

தகர்க்கப்பட இருந்த நீர்த்தாங்கி மூலமே பதுளையில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளுக்கு நீர்விநியோகம் நடைபெற்று வருகிறது.

அந்த நீர்த்தாங்கி தகர்க்கப்பட்டாலும் உடனடியாக வேறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். ஆனாலும் பாரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கும். தடங்கல்கள் தொடர்ந்து ஏற்படும் போது தொழிற்துறை நஷ்டமடையும்.

பதுளையில் நீர்த்தாங்கி தகர்ப்பு தோல்வி கண்டபின்னர், சரியாக ஒரு வாரத்தில் கண்டி கட்டுகஸ் தோட்டைப் பகுதியில் மின் மாற்றி ஒன்று தகர்த்தெறியப்பட்டுள்ளது.

பதுளை நீர்த்தாங்கியை தகர்க்கவும் 19.02.99 வெள்ளிக்கிழமை அதிகாலையிலேயே குண்டு வைக்கப்பட்டது. கண்டி மின்மாற்றிக்கும் மறுவாரம் 26.02.99 வெள்ளிக்கிழமையன்றே குண்டு வைக்கப்பட்டது.

இந்த மின்மாற்றித் தகர்ப்பால் சுமார் 7 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பகுதியை முற்றுகையிட்ட பொலிஸார் பலரை விசாரணை செய்தனர்.


குறிப்பிட்ட பகுதியில் குண்டு வைத்துவிட்டு, அங்கேயே குண்டு வைத்தோர் பதுங்கி இருப்பர் என்று நினைப்பதுதான் வேடிக்கை.

மலையகத்தில் தொடர்ந்தும் குண்டுவெடிப்புக்கள் நிகழ உள்ளதாகவே தெரிகிறது.

தொலைத் தொடர்புகளை சீர்குலைக்கவும் புலிகள் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தொலைத் தொடர்புகளை சீர்குலைப்பது தொழிற்துறைக்கு பலத்த சிரமங்களை ஏற்படுத்தும் என்று புலிகள் நினைக்கிறார்களாம்.

## புலிகளின் வானூர்தியும் புதுவையின் பாடலும்



**வி**டுதலைப் புலிகளிடம் வானூர்திகள் இருப்பது நாமறிந்த செய்தி. உறுதியான தகவல். ஆனால் அரச தரப்பு அதனை மறுத்துவருகிறது. தமது வானூர்திகள் பற்றி புலிகளது ஆஸ்தான கவிஞர் என்றழைக்கப்படும் புதுவை இரத்தினதுரை எழுதியுள்ள பாடலில் ஒரு பகுதி இது.

'இறக்கை முளைத்த தமிழனும், பறக்கத் துடிக்கும் புலவனும்' என்ற தலைப்போடு இக்கவிதை வெளியாகியுள்ளது.

..........................
..........................

*வானமேறிய முகிலை உடுத்திடும்*
*வாழ்வுனக்கென வானது; தெய்வமே!*
*காண நூறு கண் இல்லையே! நானதைக்*
*கைகளால் தொடவில்லையே! தமிழனே*
*தானகானதை தோமெனத் துள்ளியே*
*தமிழனேற்றிய ஊர்தியைப் பாரடா.*

*முந்தி இராவணன் ஏறிய 'புஸ்பகம்'*
*முகில் நுழைத்ததாம்; அதன் பிற கின்றுதான்*
*சொந்தமான வானூர்தியில் தமிழனும்*
*சோதி மின்னிட தோன்றினான்–ஆம் இது*
*விந்தை தானடா, போரிடையாடு மண்*
*விடியும் என்பதற்கான குறியுடன்*
*எநதை நாடினி எதற்கு மஞ்சாதென*
*இறக்கை கட்டிப் பறந்த பறப்படா!*

..........................

*மாரியாமடா தமிழரின் வாழ்விலே*
*மறக்க வொண்ணா பெருமகிழ்ச்சியின் நாளடா!*

நாரதர்

## அதிரடி அப்பாத்துரை



***கிருஷாந்தி விவகாரத்திலும்*** சனம் கொடுத்த தகவலும், முயற்சியும்தான் புதைக்கப்பட்ட உடல்களைக் கண்டுபிடிக்க காரணமாக இருந்தன. சமீபத்திய தலை வெட்டல் விவகாரத்திலும் சனம்தான் தகவல் கொடுத்ததாம். சனம் கொடுத்த நிர்ப்பந்தம் தான் தேடுதல், துருவலுக்குத் தூண்டியதாம். சீருடையினர் உடனடியாக தாமே நடவடிக்கை எடுத்திருந்தால் எப்பவோ மாட்டியிருக்கும். இப்பகூட சமீபத்தில் காணாமல் போயிருக்கும் மீதிப்பேரைக் கண்டுபிடிக்க முயற்சி எடுப்பதாகத் தெரியவில்லை என்று சனம் முணுமுணுக்குது.

***யாழ் குடாநாட்டில்*** தமிழ்க் கட்சிகளின் வாகனங்களை இனிமேல் பூதக் கண்ணாடி பிடிக்காத குறையாக அலசிப்பார்த்தே பயணம் செய்ய அனுமதிப்பினமாம். ஒரு கட்சி செய்த பிழைக்காக எல்லாக் கட்சிமீதும் எப்படி சந்தேகப்படலாம்? "சீருடையினர் சிலர் செய்த காரியங்களுக்காக சகல சீருடையினரையும் யாழில் நடமாட கட்டுப்பாடோ விதிக்கப்பட்டது?" என்று இந்தக் கட்சிகள் கேட்க வேண்டியதுதானே! சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சகல தமிழ்க் கட்சிகளையும் குட்டி வைத்திருக்கப் பார்க்கினம். அதுதான் உண்மை. ஒன்றும் நடக்காதபோதே 'டமில்' கட்சிகளுக்கு கட்டுப்பாடு போடத்தானே முயற்சிகள் நடந்தன. இப்ப சாக்குக் கிடைச்சிருக்கு. அவ்வளவுதான்.

***வன்னியை இரண்டு*** கல்வி வலயங்களாகப் பிரித்தபின்னர், ரெண்டு எழுத்தாரின் கட்டுப்பாட்டிலுள்ள கல்வி வலயத்திற்கு சேரவேண்டிய தளபாடங்களை மறு வலயத்தார் அனுப்பாமல் இழுத்தடிக்கினமாம்!

***தமது கட்டுப்பாட்டுப்*** பகுதியில் கல்வி வளர்ச்சிக்கு ரெண்டு எழுத்தார் முக்கியத்துவம் கொடுக்கிறார்களாம். உதவிகளும் செய்கிறார்களாம். அங்கிருந்து வந்த ஒருவர் கூறிப் புகழ்ந்தார். பெறுபேறுகள் நன்றாக வந்ததுக்கு அங்குள்ள ஆசிரியர்களின் உழைப்பும் ஒரு காரணம் என்றும் புகழ்ந்தார்.

***வன்னிப் பாடசாலை*** ஒன்றுக்கு அப்பகுதி ரெண்டு எழுத்து பொறுப்பாளர் சென்றாராம். "வரவுப் பதிவு இடாப்பைக் காட்ட முடியுமோ?" என்று கேட்டாராம். அதற்கு அதிபர்: "தம்பி! காட்டுங்கோ என்று நீர் கேட்டால் நான் காட்டியிருப்பேன். காட்ட முடியுமோ, என்று கேட்கிறீர். விதிப்படி காட்டுவது முறையல்ல. இல்லை, காட்டத்தான்வேணும் எண்டு சொன்னீர் என்றால் காட்டுகிறேன்!" என்றாராம். ரெண்டு எழுத்துப் பொறுப்பாளர் சற்று நேரம் யோசித்துவிட்டு எழுந்து போய்விட்டாராம்.

***தேர்தலுக்காக இணைந்து*** செயற்பட முன்வந்துள்ள ஆளும் அணியும், எதிரணியும் இனப்பிரச்சனை விடயத்திலும் இணைந்து செயற்பட மறுப்பது ஏன்? என்று கேட்டுள்ளார் நீலமான வெகுஜனப் பிரதிநிதி. இரண்டு அணியும் இணைந்து செயற்பட்டால் தேர்தலே தேவையில்லையே... ஹி.ஹி.ஹி... அவை படம் காட்டுகினம். நீலமானவர், 'சப்டைட்டில்' போடுகிறாராக்கும்!

***வெகுஜன சபைக்கு*** புதிய செயலாளர் வந்தது ஏன் தெரியுமோ? முன்பு இருந்தவர் பச்சை அணிக்கு சார்பானவர் என்று நீல அணிக்காரருக்குச் சந்தேகம். அதுதான் அவரை பதவிக்காலத்தை நீடிக்காது ஓய்வு கொடுக்கப்பட்டதாம். பார்த்தியளோ? ஒரு பக்கம் ஒத்துழைப்பு, சந்திப்பு, மறுபக்கம் வெட்டி விளையாட்டு!

***வெகுஜன சபைக்கு*** அங்கு ஏற்கனவே பணியாற்றும் அதிகாரிகளில் இருந்துதான் செயலாளர் நியமிப்பது மரபு. உள்ளிருப்பவை மேல் நம்பிக்கை இல்லாமல்தான் வெளியே இருந்து தமக்கு நம்பகமான செயலாளரைப் போட்டவையாம். அவர் பதவி ஏற்ற முதல் நாள் சபை சம்பிரதாயம் தெரியாமல் தடுமாறிப்போனாராம். சபைக்கு நாயகர் அமர முன்பாகவே செயலாளர் தன் நாற்காலியில் அமர்ந்துவிட்டாராம். ஒரே குழப்பம்தான் போங்கோ.

***மூத்த அம்மையாரின்*** மைந்தர் அதிகாரத்தில் உள்ள தனது உறவினர் ஒருவரை 'பூதம்' என்று திட்டியுள்ளார். "அடுத்த பிரதமர் பதவியைக் கைப்பற்றும் நோக்கம் கொண்ட பூதம் என் வீட்டை சோதனையிட ஏற்பாடு செய்தது!" என்று கூறியிருக்கிறார். அரசியல் விரோதத்துக்காக நாகரிகமற்ற வார்த்தைகளைத் துப்பலாமோ? உறவினர்களுக்குள்ளேயே சமரசம் ஏற்படுத்த முடியவில்லை. ஆளும் அணி-எதிரணி சமரசம் கனவில்கூட காணமுடியுமோ? சில அறிவுக்கொழுந்துகளுக்கு இது புரியவில்லைப் பார்த்தியளோ?

***தலைநகரில் போக்குவரத்துக்குப்*** பொறுப்பானவரின் புத்திரர்தான் பிரசாரத்தை முதலில் தொடங்கி ஆரவாரப்படுத்துகிறார். கிழக்கு தனித்துவக் கட்சியினரை இம்முறையும் வாகை சூடத்தான் திட்டமாம். இதுதான்(டா) பனிப்போர்.

***இவ்வாரம்*** 'கால் மாக்ஸ்' தந்த பொன்மொழி:

"அருகில் இருக்கும்போது
கோபுரங்கள்கூட
உயரமாகத் தெரிவதில்லை.
தூரத்தில் இருக்கும்போதே
பிரமாண்டமாகத் தெரிகின்றன!"



படிப்பகம்

www.padippakam.com



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

**223**

# புலனாய்வுக் குழுவுக்கு வந்த மர்மப் பொதி

ராஜீவ் கொலைக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளர் கிட்டு கூறியது பொதுவாக நம்பப்பட்டது.

சீக்கிய தீவிரவாதிகளா? விடுதலைப் புலிகளா? என்று ஏற்பட்ட சந்தேகம் வேறு திசைகள் நோக்கியும் திரும்பியது.

இந்திரா காந்தி கொலைக்கு அமெரிக்க சி.ஐ.ஏ.பின்னணியில் நின்றது. அதுபோல ராஜீவ் கொலைக்கும் சி.ஐ.ஏ. பின்னணியில் நின்றிருக்கலாம் என்று சில பத்திரிகைகள் சந்தேகம் தெரிவித்தன.

இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாமீதும் சந்தேகம் திரும்பியது.

இந்திய இராணுவத்தை கடுமையாக எதிர்த்தவர் பிரேமதாசா. ராஜீவ் மறுபடி வெற்றி பெற்று பிரதமரானால் மீண்டும் இந்தியத் தலையீடு ஏற்படலாம் என்று பிரேமதாசா நினைத்திருக்கலாம். அதனால் அவரே கொலையாளியை ஏற்பாடு செய்திருக்கலாம் என்று ஊகங்கள் கூறப்பட்டன.

இத்தகைய குற்றச்சாட்டால் பிரேமதாசாவே அரண்டு போனார். இதனால் இலங்கை அரசின் தேசிய புலனாய்வுத் துறை (என்.ஐ.பி) ராஜீவ் கொலை விசாரணைக்கு உதவ முன்வந்தது.

புலிகள்மீதான சந்தேகம் மெல்ல மறையத் தொடங்கியிருந்தது. புலிகளுக்கு சாதகமான முறையிலேயே இந்தியப் பத்திரிகைகள் பல செய்திகள் வெளியிட்டன.

ராஜீவ் காந்தியை புலிகள் சார்பாக காசி ஆனந்தன் சந்தித்தார். அந்தச் சந்திப்புக்கு இந்து பத்திரிகைக் குடும்பத்தைச் சேர்ந்த மாலினி பார்த்த சாரதி உதவினார் என்று முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.

## 'இந்து' செய்தி

ராஜீவ் காந்தி மறைந்த பின்னர் 28.05.91 அன்று வெளியான 'இந்து' அந்த இரகசிய சந்திப்புப் பற்றி செய்தி வெளியிட்டிருந்தது. எனினும் அச் சந்திப்பில் தமக்கிருந்த பங்கைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

'இந்து' வெளியிட்ட செய்தி இதுதான்;

"கடந்த மார்ச் 5ம் திகதி விடுதலைப் புலிகளின் மத்திய கமிட்டி உறுப்பினர்களில் ஒருவர் ராஜீவ்காந்தியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளிவரவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் முயற்சி எடுத்து இச் சந்திப்பு நடந்தது.

இந்தச் சந்திப்பு மூலம் புலிகள் இயக்கத்துக்கும், ராஜீவ் காந்திக்கும் இடையே நல்லுறவு உருவானது.

இந்திய அமைதிப் படையை ராஜீவ் அனுப்பிய பிறகு இப்போதுதான் முதன் முதலாக ராஜீவ் காந்தியும் விடுதலைப் புலிகளும் சந்தித்து நல்லுறவுகளை உருவாக்கிக் கொண்டனர்.

இந்த சந்திப்பு மிகவும் சுமுகமாக இருந்தது. ராஜீவ் காந்தியுடன் இரண்டு மாதங்களுக்கு முன்னர் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்ட நிலையில் ராஜீவ் கொலையை புலிகள் எவ்வாறு செய்திருப்பார்கள் என்பது கேள்விக் குறியாகியுள்ளது.

மாறிவரும் அரசியல், இராணுவ சூழல்களைத் தொடர்ந்து புலிகள் ராஜீவோடு சுமுகமாகப் போகும் முடிவை எடுத்தனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சனையில் இந்தியா தனது தலையீட்டை விலக்கிக் கொண்டதால், இலங்கை அரசின் இராணுவத் தாக்குதல்கள் அதிகரித்து வருவதாக புலிகள் கருதுகின்றனர்.

கடந்தகால கசப்பான சம்பவங்களை மறந்துவிடுவோம். நமது உறவில் புதிய அத்தியாயத்தை துவக்குவோம். எங்கள் இயக்கம் இந்தியாவுக்கு எதிராக ஒருபோதும் செயற்படாது என்று புலிகள் ராஜீவிடம் கூறினர். ராஜீவ் காந்தியும் இதற்கு முழுமையான ஆதரவு தெரிவித்தார்.

பிரபாகரனுக்கு தனது வாழ்த்துக்களைக் கூறுமாறு கூறிய ராஜீவ், போராட்டத்தை தொடர்ந்து நடத்துமாறும் பிரபாகரனிடம் தனது சார்பில் கூறுமாறு கேட்டுக் கொண்டார்.

ராஜீவ் காந்தி கூறிய கருத்துக்கள் உடனடியாக பிரபாகரனுக்கு தெரிவிக்கப்பட்டன. அவரும் மகிழ்ச்சி அடைந்தார்.

"இந்த நிலையில் ராஜீவை புலிகள் கொலை செய்திருப்பர் என்று கூறுவதற்கு அடிப்படை கிடையாது" என 'இந்து' தெரிவித்திருந்தது.

'இந்து' இவ்வாறு செய்தி வெளியிட்ட போது, அதே வாரத்தில் வெளியான ஃப்ரண்ட் லைன்' சஞ்சிகையும் அதே தகவலை வெளியிட்டது.

## 'ராம்' கண்ணோட்டம்

ஃப்ரண்ட் லைன்' ஆசிரியர் ராம். அவரும் 'இந்து' குடும்பத்தைச் சேர்ந்தவர். அப்போது புலிகளது தீவிர அனுதாபியாக இருந்தவர். ராஜீவ் கொலைக்கு புலிகள் காரணமாக இருக்க மாட்டார்கள் என்று ராம் நூற்றுக்கு நூறு நம்பினார்.

அதனால் ஃப்ரண்ட்லைன் பின்வருமாறு செய்தி வெளியிட்டது.

"ராஜீவ் காந்தி சந்திப்பின் பின்னர் காசி ஆனந்தன் 'றோ' உளவுத்துறை அதிகாரிகளையும் சந்தித்தார். இதன் விளைவாக இலங்கையில் போர்க்களத்தில் படுகாயமடைந்த விடுதலைப் புலிகளைத் தமிழகத்திற்கு கொண்டு வந்து சிகிச்சை அளிக்க அனுமதி தரப்பட்டது.

தமிழ் நாட்டில் அப்போது ஆளுநர் ஆட்சி இருந்தமை இதற்கு வசதியாக இருந்தது.

## மர்மப் பொதி

ராஜீவ், காசி ஆனந்தன் சந்திப்பைத் தொடர்ந்து, முன்னாள் பாதுகாப்புத்துறை இணை அமைச்சரும், ராஜீவ் காந்திக்கு மிக நெருக்கமான காங்கிரஸ் தலைவருமான ப.சிதம்பரம் 5.05.91 இல் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

"இலங்கையிலிருந்து அகதிகளாக வரும் தமிழர்களுக்கு பாதுகாப்பும், புகலிடமும் அளிப்பது நம்முடைய கடமை. காயமடைந்த போராளிகளுக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டியது அவசியமாகும்."

ராஜீவை சந்தித்த பின்னர் காசி ஆனந்தன் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்;

"விடுதலைப் புலிகள் இந்தியாவின் பக்கம் இருப்பார்கள். அதைப் போல இந்தியாவும் எங்கள் பக்கம் இருக்கும். நாங்கள் ஒருபோதும் இந்தியாவிற்கு எதிராக செயற்பட்டதில்லை".

இச் சந்திப்பை அடுத்து இலண்டனில் இருந்து கிட்டு விடுத்த அறிக்கையில்: "இலங்கைத் தமிழர் பிரச்சனைதீர இந்தியா முயற்சி செய்ய வேண்டும். இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையே பேச்சு நடக்கும் போது இந்தியா நடுவராக செயற்பட வேண்டும்" என்று கோரியிருந்தார்.

ப.சிதம்பரம், கிட்டு, காசி ஆனந்தன் ஆகியோர் விடுத்த அறிக்கைகளைக் கண்டு சிங்கள அரசு பதற்றம் அடைந்தது. ராஜீவ் காந்தி மீண்டும் பிரதமராவதற்கு வாய்ப்பு உருவாகுவது குறித்து அச்சமடைந்தது.

ராஜீவ் காந்தி மீண்டும் பிரதமரானால் இலங்கை, இந்திய உடன்பாட்டை தீவிரமாக அமுல் செய்வதற்கான முயற்சிகளை எடுப்பார் என்று சிங்கள அரசு கருதியது.

இலங்கையின் ஜனாதிபதியான பிரேமதாசா இந்த உடன்பாட்டை ஆரம்பம் முதலே எதிர்த்து வருபவர். உடன்பாடு கையெழுத்தான போது அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள மறுத்தவர்" என்று தெரிவித்திருந்தது ஃப்ரண்ட் லைன்.

பிரேமதாசாமீதே ஃப்ரண்ட்லைன் சந்தேகப் பார்வையை திருப்பியிருந்தது. இந்த சந்தேகங்கள் நியாயமானதாகவே பரவலாகக் கருதப் பட்டன.

தமிழ்க் கட்சி ஏதாவது ஒன்றின் துணையுடன் பிரேமதாசா ராஜீவ் கொலையை நடத்தி முடித்திருக்கலாம் என்று வெளிநாடுகளில் இருந்த புலிகளது வட்டாரங்களும் ஊகங்களை கிளப்பி விட்டிருந்தன.

## கடைசிப் பேட்டி

ஸ்ரீபெரம்புதூருக்கு காரில் வந்து கொண்டிருந்தபோது ராஜீவ் காந்தி இரண்டு பெண் நிருபர்களுக்கு பேட்டியளித்தார் அல்லவா.

அந்த நிருபர்களில் ஒருவர் அமெரிக்க 'நியூ டைம்ஸ்' நிருபர் பாப்ரா க்ரொசெட்.

ராஜீவ் காந்தியின் கடைசிப் பேட்டி என்று தான் எடுத்த பேட்டியை வெளியிட்டார் பாப்ரா.

அப் பேட்டியில் ராஜீவ் கூறிய கருத்துக்களும், அவரது கொலைக்கு வெளிநாட்டு சக்தி காரணமாக இருக்குமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டன.

அப்படி என்னதான் கூறினார் ராஜீவ் காந்தி?

"தென்னாசியப் பிராந்தியத்தில் சமாதானத்திற்கான பெரும் பங்கினை இந்தியா வகித்து வருகிறது. இதனால் இந்தியாவும், இந்தியத் தலைவர்களும் வெளிநாட்டுச் சக்திகளது இலக்காக மாறியுள்ளனர்" என்று ராஜீவ் கூறினார்.

"சி.ஐ.ஏ. பற்றித்தானே குறிப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டபோது ராஜீவ் பூடகமாக புன்னகை செய்தார்.

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஜியா கொல்லப்பட்டது எப்படி என்பது பற்றி தம்மிடம் தகவல்கள் உள்ளதாகவும், ஆனால் அதுபற்றி தாம் அதிகம் விபரிக்கப் போவதில்லை" என்றும் ராஜீவ் கூறினார். இதுதான் 'நியூடைம்ஸ்' வெளியிட்ட பேட்டி.

இப் பேட்டி வெளியானதும் புலிகளது தமிழ்நாடு ஆதரவாளர்கள் தமது கருத்தை உரத்து வலியுறுத்தத் தொடங்கினார்கள்.

ராஜீவ் கொலைக்கு வெளிநாட்டுச் சதிதான் காரணம் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தியத் தலைவர்களை சி.ஐ.ஏ. குறிவைத்திருப்பது ராஜீவ் காந்திக்கும் தெரிந்திருக்கிறது என்று கூறினார்கள்.





| | | |
|---|---|---|
| [illegible] | வெகுமதி | REWARD |
| [illegible] 5,00,000/- | [illegible] 5,00,000/- | Indian Rs. 500,000/- |

Indian Authorities has offered a Reward of Indian Rs. 500,000/- for any information leading to the identification of anyone of the persons appearing in the photograph, whom they suspect to have been involved in the assassination of Mr. Rajiv Gandhi, former Prime Minister of India.

All information will be kept strictly confidential and such information may be furnished to the following telephone numbers.

Indian High Commission in Sri Lanka
Telephone Nos.: 421605, 422787
C.I.D., Sri Lanka: 20141 to 20145, 422176
Madras Police: 830601, 830605

இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்ட அறிவித்தல். இந்த அறிவித்தல் வெளியான பிரசுரங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு இலங்கை விமானப்படை விமானங்கள் மூலம் போடப்பட்டன.

## எச்சரிக்கை

வெளிநாட்டு சதி என்ற குற்றச்சாட்டை மேலும் உறுதிப்படுத்துவது போன்ற இன்னொரு செய்தியும் கிடைத்தது.

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் தனது இந்தியப் பிரதிநிதி மூலம் ராஜீவ் காந்திக்கு தகவல் ஒன்றை அனுப்பியிருந்தார்.

ராஜீவ் காந்தியை கொல்வதற்கு மேற்கத்திய உளவு நிறுவனம் சதி செய்வதாக தனக்கு தகவல் கிடைத்ததாக அரபாத் தகவல் அனுப்பியிருந்தார்.

1991 பெப்ரவரி மாதம், அதாவது கொலை நடப்பதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் அரபாத்தின் பிரதிநிதி ராஜீவை சந்தித்து அத் தகவலை கூறினார்.

பின்னர் அரபாத்தே நேரடியாக ராஜீவ் காந்தியுடன் தொடர்பு கொண்டு எச்சரித்தார். இத்தகவலை ராஜீவ் கொலைக்குப் பின்னர் 1991 ஜூலையில் 'புரொப்' என்ற பத்திரிகையும் வெளியிட்டிருந்தது.

இவையெல்லாம் ராஜீவ் காந்தி கொலையில் புலிகளுக்கு சம்மந்தம் இல்லை என்ற கருத்தை பரவலாக உருவாக்கிக் கொண்டிருந்தன.

## பொதி

இவ்வாறான சந்தேகங்கள் மத்தியில் ராஜீவ் கொலை தொடர்பான சிறப்பு விசாரணைக் குழுவுக்கு மர்மப் பொதி ஒன்று வந்தது.

தமிழ்நாட்டில் விழுப்புரத்திலிருந்து அந்தப் பொதி அனுப்பப்பட்டிருந்தது.

அந்தப் பொதி ராஜீவ் கொலை மர்மத்தின் முடிச்சொன்றை அவிழ்க்க உதவியது.

அந்தப் பொதிக்குள் படப்பிடிப்பாளர் ஹரிபாபுவின் உடமைகள் சில இருந்தன.

பாக்கியநாதன் என்பவர் ஹரிபாபுவுக்கு எழுதிய கடிதங்கள், பிரபாகரனின் படம், இலங்கைக்கு அனுப்பப்பட இருந்த மருந்துப் பட்டியல் மற்றும் ஹரிபாபுவின் காதலியான சுந்தரி எழுதிய கடிதங்கள் என்பவை அதில் இருந்தன.

உடனடியாக சுந்தரி கைது செய்யப்பட்டார். பொதியை அவர் அனுப்பவில்லை. ஆனால் ஹரிபாபுவுக்கும் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாக சுந்தரி ஒப்புக்கொண்டார்.

ஹரிபாபுவின் காதலி சுந்தரி கைது. ராஜீவ் கொலை வழக்கில் திருப்பம்' என்று சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

ஆனால் சுந்தரிக்கு தகவல்கள் எதுவும் தெரிந்திருக்கவில்லை. அவருக்கு தெரிந்ததெல்லாம், ஹரிபாபுவுக்கும் புலிகளுக்கும் இடையே தொடர்பு இருந்தது என்பது மட்டும்தான்.

இதன்பின்னர் ஹரிபாபுவின் வீட்டை விசாரணைக்குழுவினர் சோதனையிட்டனர். அங்கு ஒரு பற்றுச்சீட்டுக் கிடந்தது. அந்தப் பற்றுச்சீட்டை ஹரிபாபுவின் தாய் தந்தையிடம் காட்டி விசாரித்தனர்.

அவர்களுக்கு ஹரிபாபு என்ன வாங்கினார் என்று தெரியவில்லை. ஆனால் அவர்கள் மூலம் தகவல் ஒன்று கிடைத்தது.

ஹரிபாபுவை சந்திக்க அடிக்கடி பாக்கியநாதன் வீட்டுக்கு வருவார் என்று கூறினார்கள்.

ஹரிபாபுவுக்கு பாக்கியநாதன் எழுதிய கடிதம் ஒன்றில், சங்கரி அக்காவின் வீட்டு 'எலெக்றிக் பில்' முருகன் கட்டுவார், என்று எழுதியிருந்தது. அதுவும் சந்தேகம் ஏற்படுத்தியிருந்தது.

இதற்கிடையே விசாரணைக் குழுவினர் ஹரிபாவுவின் வீட்டில் கண்டெடுத்த பற்றுச்சீட்டுக்குரிய கடைக்கு சென்று விசாரித்தனர். அங்கு மேலும் ஒரு தகவல் கிடைத்தது.

ஹரிபாபு வாங்கியது சந்தன மாலை. ராஜீவ் கொலை நடக்க முன்பாக எடுக்கப்பட்ட படத்தில் உள்ள பெண்ணும் கையில் சந்தன மாலைதான் வைத்திருந்தார் என்பது விசாரணைக் குழுவினருக்கு பளிச்சென்று நினைவுக்கு வந்தது.

அடுத்ததாக முருகன், பாக்கியநாதன், சங்கரி மூவரையும் வளைத்துப் பிடிக்க விசாரணைக் குழுவினர் ஆயத்தமாகினர்.

இந்தக் கட்டத்தில்தான் பழம் நழுவிப் பாலில் விழுவதுபோன்ற தகவல் ஒன்று கிடைத்தது.

தமிழ்நாட்டில் திருத்துறைப் பூண்டிப் பகுதியில் சங்கர் என்னும் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் பிடிபட்டார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவருடன் சங்கருக்கு ஏதோ தகராறு ஏற்பட்டது. அதனையடுத்து ஏற்பட்ட பிரச்சனையில் சங்கரை பொலிசார் கைது செய்தனர். அவர் புலி என்று தெரிந்ததும் சோதனையிட்டுள்ளனர்.

நளினிதாஸ் என்ற பெயருடன் தொலைபேசி எண் ஒன்று சங்கரியிடம் இருந்தது. வேறொரு விலாசமும் கிடைத்தது. இதனையடுத்து சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சங்கரின் தகவல்கள் புலன் விசாரணைக்கு பெரிதும் உதவப்போகிறது என்பது முதலில் தெரியாது விட்டாலும், அவரை சிறப்பு புலனாய்வுக் குழு தனது அலுவலகமான மல்லிகைக்கு கொண்டு வந்தது.

குறிப்பிட்ட தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டு விசாரித்தனர். அது ஒரு ஏற்றுமதி நிறுவனம்.

தாஸ் என்பவர் இலங்கைத் தமிழர் என்றும், அங்கு வேலை செய்பவர் என்றும், சில நாட்களாக அவர் கடைப்பக்கம் வரவில்லை என்றும் தகவல் கிடைத்தது.

சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு நம்பிக்கை பிறந்தது.

பாக்கியநாதனை கைது செய்ய வேண்டும் நளினி, முருகன் ஆகியோரையும் பிடிக்க வேண்டும்.

பாக்கியநாதன் எங்கிருப்பார்? என்று விசாரணைக்குழு மூளையைக் கசக்கிக் கொண்டிருந்தபோது, பாக்கியநாதன் வீட்டில்தான் சிவராசனும், சுபாவும் தங்கியிருந்தனர்.

(தொடர்ந்து வரும்)

## புலிகளுக்கு கொலை நோக்கம் இல்லை
### ஏ.பி.வெங்கடேசுவரன் பேட்டி

இந்திய வெளியுறவுத் துறையின் செயலாளராக இருந்தவரான திரு.எ.பி.வெங்கடேசுவரன் கொழும்பில் இருந்து வெளிவரும் 'வீரகேசரி' இதழுக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தது இது:

**கேள்வி: ராஜீவ் காந்தி கொலையில் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக இந்தியாவிலுள்ள பல அரசியல்வாதிகள் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக ஊர்சிதப்படுத்தப்படுமானால் தென்னிந்தியாவிலேயே இலங்கைத் தமிழர்களுக்கெதிரான உணர்வுகள் கிளம்புமா?**

பதில்: அது ஒரு கசப்பான நிலைமையாகவே இருக்கும். இலங்கையிலே இந்திய அமைதி காக்கும் படை இருந்த போது வடக்கு-கிழக்கு மாகாணங்களிலே இடம் பெற்ற நடவடிக்கைகள் குறித்து இந்தியா பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது என்பதை பலர் உணர்வார்கள் என்பது நிச்சயம். ஏனென்றால், ராஜீவ் கொலை போன்ற சம்பவத்தை தேவைக்கு அதிகமாக மிகைப்படுத்தி விவகாரங்களை பார்க்க கூடாது. அக்கொலை ஒரு படுபாதக குற்றச் செயலே. ஆனால் போரிலே ஈடுபட்டு ஆயிரக்கணக்கான மக்களை பலி கொடுத்த நாடுகள் மீண்டும் சமாதானம் செய்து கொண்டிருப்பதை அரசுகளுக்கிடையிலான உறவுகளில் நாம் கண்டிருக்கிறோம். இதை நாம் மறுத்தலாகாது. ராஜீவ் காந்தி கொலையில் புலிகளுக்கு சம்பந்தம் இருக்கிறது என எண்ணி நிலைமைகளை அளவுக்கு அதிகமாக பெரிதுபடுத்தக்கூடாது.

**கேள்வி: ராஜீவ் காந்தியைக் கொலை செய்வதற்கு புலிகளுக்கு ஏதாவது நோக்கம் இருந்தது என நீங்கள் நினைக்கிறீர்களா?**

பதில்: சூழ்நிலைகளை அவதானிக்கும்போது காந்தியைக் கொலை செய்வதற்கு புலிகளுக்கு நோக்கம் எதுவும் இருப்பதாக தோன்றவில்லை. ஏனென்றால் அவர்கள் ராஜீவ் காந்தியுடன் பேச்சுவார்த்தையில் இறங்கியிருந்தனர். ராஜீவ் காந்தியுடன் மார்ச்சில் பேச்சு நடந்தது எமக்குத் தெரியும். அத்துடன் அவர் புலிகளுடனான தொடர்புகளை புதுப்பிப்பதில் சாதகமான பதிலை அளித்துமிருக்கிறார்.

**கேள்வி: அத்தகைய சந்திப்பொன்று இடம் பெற்றதற்கான பதிவுச் சான்று எதுவும் இல்லையென்று தோன்றுகிறது. புலிகள் தான் சந்திப்பு இடம்பெற்றதாக சொல்லியிருக்கிறார்கள்?**

பதில்: இந்தியாவில் பெரிதும் மதிக்கப்படும் செய்திப் பத்திரிகைகளில் ஒன்றான "இந்து" இதை ஊர்சிதப்படுத்தியிருக்கிறது. ராஜீவ் காந்திக்கும் புலிகளுக்குமிடையே சந்திப்பு நடந்ததாகவே அது திட்டவட்டமாக கூறுகிறது. அதையே நாம் ஏற்க வேண்டியிருக்கிறது.

**கேள்வி: ஆனால் புலிகள் இயக்கம் "துரோகப் பேர்வழியின் கும்பல்" என ராஜீவ் காந்தி வர்ணித்திருந்ததாக நான்கு நாட்கள் கழிந்து "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை செய்தியொன்று வெளியிட்டிருந்ததே?**

பதில்: தனது கருத்தைக் கூறுவதற்கு காந்தி உரித்துடையவர். ஆனால்எனக்கு தெரிந்த வரை எந்தவொரு விவகாரத்திலுமே நிலையான அபிப்பிராயம் ஒன்றைக் கொண்டிருந்தவரென்ற பெயரை ராஜீவ் பெறவில்லை. மேலதிகமாக நான் எதையும் கூற விரும்பவில்லை. ஏனென்றால் இறந்து போனவரைப் பற்றி நாம் விரோதமாக பேசுவதில்லை. அவர் மரணமடைந்த பின்னர் அவருக்கு செய்யப்பட்ட பல புகழ் அஞ்சலிகள் இந்திய அரசியலுக்கு அவர் செய்த பங்களிப்புகள் பற்றிய அர்த்தமுடைய மதிப்பீடுகளின் அடிப்படையில் அமைந்தவையென்பதிலும் பார்க்க, நல்லெண்ணங்களை அடிப்படையாகக் கொண்டவையாகவே கூடுதலாக அமைந்திருந்தன.



படிப்பகம்

www.padippakam.com

# சர்வமத தூதுக்குழு விஜயமும் சந்திரிக்கா அரசின் தோல்வியும்

அலசுவது - இராஜதந்திரி

சர்வமத தூதுக்குழுவின் வன்னி விஜயம் பிரதான செய்திகளில் ஒன்றாக மாறியுள்ளது.

விடுதலைப் புலிகளை மதத்தூதுக்குழுக்கள் சந்தித்து பேசுவது இது முதல் முறையல்ல. தற்போது சர்வமத தூதுக்குழுவில் சென்று வந்துள்ளவர்களில் வணக்கத்துக்குரிய பேராயர் கெனத் பெர்னாண்டோவும் ஒருவராவர். இவர் 1992ம் ஆண்டு ஜனவரி மாதத்திலும் யாழ்ப்பாணம் சென்றிருந்தார்.

பேராயர் கெனத் பெர்னாண்டோ, ரீஜென்ஜி பெரேரா, யாழ் கத்தோலிக்கப் பேராயர் தோமஸ் சவுந்தரநாயகம், யாழ் தென்னிந்திய திருச்சபைப் பேராயர் அம்பலவாணர், ஜெபநேசன், இம்மானுவேல் ஆகியோரைக் கொண்ட கிறிஸ்தவ மதகுருமார்களது தூதுக்குழு 11.01.1992 அன்று யாழ் நகரில் புலிகளது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை சந்தித்தது.

அத் தூதுக்குழுவிடம் வேலுப்பிள்ளை பிரபாகரன் மிகவும் அழுத்தம் திருத்தமாக தமிழ் பேசும் மக்களது தாயகக் கோட்பாட்டை வலியுறுத்தியதோடு, "வடக்கு கிழக்கை பிரிப்பதற்கு ஒருபோதும் இடமளியோம்!" என்றும் கூறியிருந்தார்.

1992 ஜனவரி 15ம் திகதி கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடாத்திய கிறிஸ்தவ மதகுருமார்களின் தூதுக்குழுவினர், வேலுப்பிள்ளை பிரபாகரனுடனான தமது சந்திப்புத் தொடர்பாக விளக்கமளித்தனர்.

இதனையடுத்து 1992 ஏப்ரல் மாதத்தில் பௌத்த மதகுருமார்களது தூதுக்குழு ஒன்றும் யாழ்ப்பாணம் சென்று புலிகளை சந்தித்தது.

இக் கால கட்டத்திலும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படப் போவது போன்றும், மதகுருமார்களது தூதுக்குழுக்கள் அரசுக்கும், புலிகளுக்கும் இடையே சமாதானப் பாலத்தை நிறுவப்போவது போன்றும் செய்திகளும், எதிர்பார்ப்புக்களும் எழுந்திருந்தன.

பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாக இடம்பெற்ற பின்னர் சிறிது காலத்தில் அச்செய்திகள் தணிந்து போனதோடு, தூதுக்குழுக்களும் அமைதியாகிப் போயின.

1994ம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிக்கா பதவிக்கு வந்த பின்னரும் பேராயர் கெனத் பெர்னாண்டோ உட்பட பல மதகுருமார்கள் யாழ் சென்று புலிகளை சந்தித்து வந்தனர். அரச தரப்பினரையும் சந்தித்தனர்.

இவர்களில் பேராயர் கெனத் பெர்னாண்டோ பத்திரிகைச் செய்திகளில் பிரபலமாக இடம்பெற்று வந்தவர்.

பொதுஜன முன்னணி அரசுக்கும் புலிகளுக்கும் இடையே பேச்சு முறியும் தறுவாயில், பேராயர் கெனத் பெர்னாண்டோ ஜனாதிபதி சந்திரிக்காவின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களில் ஒருவராக மாறியிருந்தார்.

பேராயர் கெனத் பெர்னாண்டோ, முன்னாள் யாழ் அரச அதிபர் லயனல் பெர்னாண்டோ போன்றோரை ஜனாதிபதி சந்திரிக்கா புலிகளிடம் அனுப்பியிருந்தார்.

இக்காலகட்டத்தில்தான் பேராயர் கெனத் பெர்னாண்டோவின் நடவடிக்கைகள் குறித்து விடுதலைப் புலிகள் சந்தேகம் கொண்டதோடு, இவர்களை சந்திக்கவும் வேலுப்பிள்ளை பிரபாகரன் மறுத்துவிட்டார்.

'பேராயர் கெனத் பெர்னாண்டோ சமாதானத் தூதராக வந்திருக்கிறாரா, சந்திரிக்காவின் தூதராக வந்திருக்கிறாரா?' என்று புலிகள் பகிரங்கமாகவே தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தனர்.

சந்திரிக்கா அரசுக்கும் புலிகளுக்கும் இடையே போர் மூண்டபின்னர் பேராயர் கெனத் பெர்னாண்டோ உட்பட, சமாதான ஆர்வம் காட்டித் திரிந்த மதகுருமார்களும் மற்றும் குழுக்களும் எங்கு போயின என்பதே தெரியாமலிருந்தது.

முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கையின்போது யாழ் குடாநாட்டில் நவாலி கிறிஸ்தவ தேவாலய பகுதியில் நடைபெற்ற விமானத் தாக்குதல்கள் முதற்கொண்டு, வன்னியில் கிறிஸ்தவ தேவாலயம் தாக்கப்பட்டது உட்பட பல்வேறு அனர்த்தங்கள் தொடர்பாக பேராயர் கெனத் பெர்னாண்டோ கண்டனம் தெரிவிக்க முன்வரவில்லை.

பொதுமக்கள் வாழும் பகுதியில் மேற்கொள்ளப்படத் தக்கதல்லாத மூர்க்கமான இராணுவ நடவடிக்கை சூரியக்கதிர் என்ற பெயரில் யாழ் குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

அதன்பின்னர் வன்னியில் பல்லாயிரம் மக்களை இடம்பெயரச் செய்யக்கூடிய 'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கை ஒன்றரை வருடமாக அதே பெயரில் தொடர்ந்தது.

'விடுதலைப் புலிகளை ஒழித்தல்' என்பதே இலக்கு என்று கூறப்பட்டபோதும், தமிழ் பேசும் தரப்பின் பேரம் பேசும் பலத்தை தகர்த்தெறிந்துவிட்டு, அரைகுறைத் தீர்வுப் பொதியை திணிப்பதே உண்மையான இலக்காக கொள்ளப்பட்டது.

இத்தகைய இராணுவத் தீர்வை முனைப்பாக முன்னெடுக்குமாறு பௌத்த மதகுருமார்களில் 95 வீதத்துக்கு மேற்பட்டோர் அரசை வலியுறுத்தியதோடு, பூரண ஆதரவையும் நல்கி நின்றனர்.

மாகாணசபைத் தேர்தல்களை தள்ளி வைப்பதற்கும் பௌத்த மதகுருமார்கள் ஆதரவு தெரிவித்திருந்தனர். போரைத் தொடர வசதியாக தேர்தலை பின்போட ஒத்துழைக்குமாறு பௌத்த மதகுருமார்களிடம் சந்திரிக்கா அரசு கோரியிருந்தது.

அரசும், பௌத்த பேரினவாத சக்திகளும் ஒன்றுபட்டு இராணுவத் தீர்வு முனைப்பை தூக்கிப் பிடித்தபோது, சமாதான தூதுக்குழுக்களோ, சமாதானம் பற்றிப் பேசுகின்ற மதகுருமார்களில் எவருமோ அதற்கு எதிராகத் தம் குரலை உயர்த்தத் தவறியிருந்தனர். மூர்க்கமான இராணுவத் தீர்வை தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும், அதனை நியாயப்படுத்தும் பௌத்த பேரினவாத சக்திகளை அம்பலப்படுத்தவோ கண்டிக்கவோ எவரும் முயற்சிக்கவில்லை.

சமாதானத்திற்கான போர் என்ற பெயரில் இனப்பிரச்சனைக்கான இராணுவத்தீர்வை அரசு முன்னெடுத்தது. இதனை சர்வதேச சமூகமும் அப்போது சமாதானப் போராகவே நம்பியிருந்தது.

அத்தருணத்தில் தமிழ் பேசும் தரப்பு சார்பாக உண்மையை உரைத்து நிற்க தென்னிலங்கையில் எவராவது முன்வந்திருப்பார்களேயானால் அது என்றென்றும் நினைவு கூரத்தக்கதாக அமைந்திருக்கும்.

அப்போதெல்லாம் தலைகாட்டாதிருந்த மதகுருமார்களும், சமாதானக் குழுக்களும் தற்போது மறுபடி அரங்கில் தோன்றியுள்ளன.

'சூரியக் கதிர்', 'ஜயசிக்குறுய்' உட்பட இராணுவத் தீர்வு முனைப்புக்கள் பலவற்றை முகம் கொடுத்து, தமது பலத்தை புலிகள் உலகறிய நிரூபித்த பின்னரே இக் குழுக்கள் மறுபடி தலைகாட்டியுள்ளன.

விடுதலைப் புலிகளை சந்திப்பது, பின்னர் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு நடத்தி, 'புலிகளும் அரசும் பேசவேண்டும்' என்று கூறுவது போன்ற முன்னைய நிகழ்வுகளை மறுபடியும் அரங்கேற்றத் தொடங்கியுள்ளனர்.

"புலிகளை முற்றாக ஒழிப்போம்" என்றும், "புலிகளுடன் பேச்சு என்ற பேச்சுக்கே இடமில்லை" என்றும் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் சந்திரிக்கா அரசின் முக்கிய அமைச்சர்கள் சூளுரைத்தனர்.

விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாகவும் அரசு தடைவிதித்தது.

இவ்வாறான தருணங்களிலும் இன்று சர்வமத தூதுக்குழுவில் சென்றுவந்தவர்கள்கூட மௌனமாகவே இருந்திருக்கின்றனர்.

எனவே, தமிழ் பேசும் தரப்புக்கு மிகத் தேவையான தருணங்களிலோ, மாபெரும் நெருக்கடிகளை முகம் கொடுக்கும்போதோ இத்தகைய சர்வமதக் குழுக்களும் கைகொடுக்க முன்வருவதில்லை.

ஏனெனில் இலங்கையில் பௌத்த மதகுருமார்களில் குறைந்தது 95 வீதமானோர் இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்கின்ற பேரினவாத மேலாதிக்க கண்ணோட்டத்தையே கொண்டுள்ளனர்.

சிங்கள மக்களுக்குள்ளும் பெரும்பாலானவர்கள் தமிழ்பேசும் தரப்பு அதிக சக்திமிக்கதாக இருப்பதை உள்ளூர விரும்பவில்லை. இவ்வாறான மக்களில் ஒருபகுதியினரிடம் தமிழர் விரோத உணர்வு இல்லாவிட்டாலும்கூட, தமிழர்கள் பலம் பொருந்திய சக்திகளாக மாறிவிடக்கூடாது என்கின்ற தம் இனநல உணர்வு காணப்படுகிறது.

தமிழ் மக்களோடு நட்பாக இருக்கலாம், என்று கருதினாலும், தமது இனம், தமது படைகள் மேலானதாக இருக்க வேண்டும் என்ற அடிமன ஆதங்கம் கொண்டோராகவே விளங்குகின்றனர்.


1992ல் பிரபாகரனுடன் பேராயர் கெனத்பெர்னாண்டோ

அதனால்தான் யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றி வெற்றிவிழா கொண்டாடியபோது தென்னிலங்கையில் பட்டாசுச் சத்தங்கள் ஓயாமல் கேட்டன. இன்னொரு நாட்டை வெற்றி கொண்டதுபோன்ற மனோபாவத்திற்கே பெரும்பாலான மக்கள் ஆளாகியிருந்தனர்.

எனவே அரசும் அதன் படைகளும் வெற்றிகளைக் குவித்துக்கொண்டே இருக்குமானால், பௌத்த பேரினவாதம் மட்டுமன்றி, சாதாரண சிங்கள மக்கள்கூட போருக்கு எதிரான உணர்வுகளை வெளிப்படுத்துவதை காணமுடியாதிருக்கும்.

மாறாக, அரச துருப்புக்கள் பின்னடைவை எதிர்நோக்கும் காலகட்டத்திலும், போரில் வெற்றிபெற முடியாது என்பது உறுதியாகும் போதுமே 'போர் வேண்டாம்' என்ற கோஷங்களுக்கு சாதாரண சிங்கள மக்கள் செவிசாய்க்க ஆரம்பிக்கின்றனர்.

ஐ.தே.கட்சி அரசாங்கம் யுத்தத்தில் பெற்ற தொடர் தோல்விகளே, 1994ல் சந்திரிக்கா பண்டாரநாயக்காவின் சமாதான பேச்சுக்களுக்கு சிங்கள மக்களை செவிசாய்க்க வைத்திருந்தது.

அதேபோல யாழ் குடாநாட்டில் சூரியக்கதிர் மூலம் சந்திரிக்கா அரசு பெற்ற இராணுவ வெற்றியானது, இராணுவத் தீர்வு முயற்சிக்கு ஆதரவான மனப்போக்கை சிங்கள மக்களிடம் ஏற்படுத்தியிருந்தது.

அந்த நேரத்தில் சர்வமத தூதுக்குழு புலிகளுடன் பேசப் புறப்பட்டிருந்தால் அரசும் அனுமதித்திருக்காது. சிங்கள மக்களிடமும் வரவேற்பு இருந்திருக்காது. சிங்கள வெகுஜன தொடர்பு சாதனங்கள் இனத்துரோகிகளாக அவர்களை வர்ணித்திருக்கவும் கூடும்.

'ஜயசிக்குறுய்'க்கு எதிரான புலிகளது சமரும், தாக்குதல் நடவடிக்கைகளுமே சந்திரிக்கா அரசு உருவாக்கிய இராணுவத்தீர்வுக்குச் சாதகமான மனோநிலையை படிப்படியாக பலவீனப்படுத்தியுள்ளன.

எனவே, தற்போதுதான் சமாதான முழக்கங்களும், சர்வமத தூதுக்குழு விஜயங்களும் மறுபடி தோன்றியுள்ளன.

ஒருவேளை அரசு நினைத்தபடி போரில் வென்று புலிகளை ஒழித்துக்கட்டியிருந்தால் தமிழ்பேசும் மக்களுக்காக பேசுவதற்கு இக் குழுக்கள் முன்வந்திருக்கப்போவதில்லை.

ஏனெனில், 'தமிழ் பேசும் மக்களுக்கு பொதியில் தீர்வு உண்டு. புலிகளை ஒழித்துக் கட்டினால் பிரச்சனைகள் தீர்ந்துவிடும்' என்று கூறியே அரசு போரை நடத்தியது. இன்று சர்வமத தூதுக்குழுவில் சென்ற மதகுருமார்கள் எவரும் அன்று அரசின் கூற்றை மறுக்கத் துணியவில்லை.

எனினும் அதற்காக சர்வமதத் தூதுக்குழுவில் அங்கம் வகிப்பவர்கள் அனைவரும் தவறானவர்கள் என்று கூறுவதாக அர்த்தமாகாது. பேரினவாதத்துக்கு அப்பாற்பட்ட சிலர் அதில் அங்கம் வகிக்கின்றனர் என்பதை மறுத்தலாகாது.

ஆனால், தென்னிலங்கையில் சிங்கள பௌத்த மேலாதிக்க அலை வீசியடிக்கும்போது, அதற்கு எதிராக செயற்படத்தக்க சக்திகளாக இவர்கள் திகழ்ந்தது இல்லை.

எனவே, இந்த சர்வமதத் தூதுக்குழு இன்று சமாதானம் பற்றிப் பேசுவதற்கும், அரசும், புலிகளும் பேச வேண்டும் என்று கூறுவதற்கும் எதிர்ப்பு ஏற்படாது இருப்பதற்கு புலிகளது பலமே காரணமாகும். அரசின் இராணுவத்தீர்வு முயற்சிகளில் சிங்கள மக்களிடையே ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனமே காரணமாகும்.

எனவே, தமிழ் பேசும் தரப்பு பலமாக இருந்தால்தான் சமாதானவிரும்பிகள்கூட தேடிவருவர் என்பதையே நன்குணர முடிகிறது.

வன்னிச்சமர் ஆரம்பமாகி இரண்டு வருடமாகப் போகிறது. புலிகள் ஒழித்துக் கட்டப்பட்டிருந்தால், வன்னிக்கு சர்வமத தூதுக்குழு செல்ல வேண்டியிருக்காது.

வன்னியில் பௌத்த சிங்கள மன்னர்களது சரித்திர தொடர்புகளை அகழ்வாராய்ச்சி செய்து, புனித பூமி திட்டத்தை முன்னெடுக்கப்போவதாக பௌத்த மதகுருமார் குழு சென்றிருக்கவும்கூடும்.

எப்போதுமே ஒடுக்கப்படும் தேசிய இனத்திற்கு பலம் என்பது அத்தியாவசியமாகும். அது ஆயுத பலமாகவும் இருக்கலாம். அரசியல் பலமாகவும் இருக்கலாம். அதனை அந்தந்த நாட்டின் சூழலே தீர்மானிக்கிறது.

சர்வமத தூதுக்குழுவை அரசுதான் வன்னிக்கு செல்ல அனுமதித்துள்ளது. அரசின் மேல்மட்ட கண்ணசைப்பும் கிடைத்திருக்கிறது.

இக் குழுவில் சென்றவர்களில் ஒருவரான பேராசிரியர் திஸ விதாரன கைத்தொழில் விஞ்ஞான அமைச்சின் செயலாளர். தேசிய சமாதானப் பேரவையின் முக்கியஸ்தர் என்ற தோரணையில் தூதுக்குழுவோடு போய் வந்துள்ளார்.

சர்வமதத் தூதுக்குழுவை வன்னி செல்ல அரசு அனுமதித்ததும், மறைமுகமாக உதவியதும் புலிகளுடன் பேசும் ஆர்வத்தினால் அல்ல.

இலங்கைக்குள் இனப்பிரச்சனையை தீர்க்க முடியாது என்பது வெளியுலகின் முன்பாக மிகத் தெளிவாக அம்பலமாகிவருவதால், சில நாடகக் காட்சிகள் தேவையாக உள்ளன.

இங்கு இனப்பிரச்சனை தீர்வுக்கான முயற்சிகள் நடந்து வருவதாக காண்பித்தால்தான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கைக்கான ஆதரவு பெருகுவதை கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

அதுமட்டுமன்றி, மற்றொரு யுத்த நடவடிக்கையை ஆரம்பிக்க முன்பு புலிகளை ஆழம்பார்க்கும் முயற்சியாகவும் இந்த சர்வமத தூதுக்குழுவை அரசு பயன்படுத்த எண்ணியிருக்கிறது.

இந்த சர்வமத தூதுக்குழுவை புலிகள் சந்திக்க மறுத்திருந்தால், புலிகளை சமாதான விரோதிகளாக சித்தரிக்க வாய்ப்புக் கிட்டியிருக்கும்.

சமாதானம் பேசுவதற்கு தாம் தயாராக இல்லை என்றோ வேறு பிடிவாதமான கருத்துக்களையோ புலிகள் கூறியிருந்தால் சர்வமத தூதுக்குழு ஊடாகவே புலிகளை போர் வெறியர்களாக உலகின் முன் நிறுத்தியிருக்கலாம்.

அதன் காரணமாகவே, குறிப்பிட்ட தூதுக்குழுவில் அரச சார்பான சிலர் வருவது தெரிந்திருந்தும்கூட, புலிகள் அதனை அறியாதது போலக் காட்டிக்கொண்டதுடன், தமது கருத்தைக்கூறி அனுப்பியுள்ளனர்.

சர்வமத தூதுக்குழுவில் உள்ள சிலர் உண்மையாகவே சமாதானத்தின்மீது ஆர்வம் கொண்டவர்களாக இருப்பது மெய்தான். ஆனால் அவர்கள் தம்மையறியாது அரசியல் சதுரங்கக் காய்களாக மாற்றப்பட்டுள்ளனர் என்பது புலனாகின்றது.

வன்னியில் அரசு மேற்கொள்ளப்போகும் அடுத்த கட்ட சமர்வரை இந்த சர்வமத தூதுக்குழுவினர் சமாதானம் பற்றி பேசிக்கொண்டிருக்கலாம்.

இலங்கையில் இனப் பிரச்சனைக்கான சகல தீர்வு முயற்சிகளையும் சீர்குலைக்க முன்னின்றவர்கள் பௌத்த மதகுருமார்களேயாகும். 95 சதவீதமான அந்த மதகுருமார்கள்தான் அரசுமீதும் செல்வாக்கு செலுத்தி வருகின்றனர்.

எனவே, சர்வமத தூதுக்குழுவில் உள்ளோரில் உண்மையாகவே சமாதானத்தில் அக்கறையுடைய சில மதகுருமார்களால் அரசிடம் மனமாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பதே உண்மையாகும்.

ஆனால், சர்வமத தூதுக்குழு வன்னி சென்று புலிகளை சந்திக்க அனுமதி கொடுத்தது மூலம், புலிகள் பயங்கரவாத இயக்கம் என்ற தனது நிலைப்பாட்டில் தன்னால்கூட நிலையாக நிற்கமுடியவில்லை என்பதை அரசே ஒப்புக்கொண்டமாதிரியாகி விட்டது. நிலவரங்களுக்கு மாறான நிலைப்பாடுகள் இவ்வாறான முன்னுக்குப் பின் முரண்பாடான நிகழ்வுகளுக்கு காரணமாகிவிடுகின்றன. அரசியல் ரீதியில் இது சந்திரிக்கா அரசுக்கு ஏற்பட்டுள்ள தோல்வியேயாகும். ●

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

ஜனாதிபதி சந்திரிக்கா சமீபத்தில் இந்தியா சென்றபோது தமிழக முதல்வர் மு. கருணாநிதியை சந்திக்க விரும்பியிருக்கிறார்.

தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்து, தமிழக முதல்வரைச் சந்தித்து அதனை அதிரடிச் செய்தியாக்க விரும்பியிருக்கிறார் அம்மையார்.

ஆனால் கலைஞர் கருணாநிதி சந்திக்கவோ, அதற்கான நேரம் ஒதுக்கவோ மறுத்துவிட்டார்.

இத் தகவல் மிகத் தாமதமாக வெளிவந்துள்ளது. இலங்கையின் இந்தியத் தூதர் மங்கள முனசிங்க மூலமே இது தெரியவந்துள்ளது.

தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உட்பட எவருமே ஜனாதிபதி சந்திரிக்காவை சந்திக்க மறுப்பதாகவும் முனசிங்க கூறியிருக்கிறார்.

இலங்கையிலிருந்து இந்தியப் படை நாடு திரும்பியபோது முதல்வராக இருந்தவர் கலைஞர் கருணாநிதி.

சென்னை துறைமுகத்தில் அதனை வரவேற்கப்போகாது புறக்கணித்தார். இதனால் அப்போது தமிழக சட்டசபையில் காங்கிரஸ் உறுப்பினர்கள் பிரச்சனை கிளப்பியிருந்தனர்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிக்காவை சந்திக்க மறுத்ததுக்காக தமிழ்நாட்டில் யாரும் பிரச்சனை கிளப்பவில்லை.

குறிப்பிட்ட சஞ்சிகையின் பேட்டி வந்தபின்னர் கூட அதுபற்றி யாரும் எதுவும் கூறவில்லை.

இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்தால், அதனை இலங்கை அரசு தமக்கு சாதகமான பிரசாரமாக்கிவிடும் என்று கருதியே கலைஞர் சந்திக்க மறுத்ததாக தெரிகிறது.

-★-

சென்றவார தலைப்புச் செய்தி இதுதான். ஜனாதிபதி சந்திரிக்கா, ரணில் சந்திப்பு. தேர்தல் நடைமுறை தொடர்பாக கலந்தாலோசனை.

இச் செய்தியைப் பார்த்துவிட்டு 'அடடே...

### சந்திப்பும் சிந்திப்பும்

இனப்பிரச்சனைத் தீர்விற்கும் இப்படி ஒத்துழைக்கக் கூடாதா?' என்று தமிழ்க் கட்சி ஒன்றின் தலைவரும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

எந்தளவுக்கு அரசியல் வறுமையில் இவர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு இந்த வாய்பிளப்பும் ஒரு உதாரணம்.

வடமேல் மாகாணசபைத் தேர்தல் முறைகேடுகளால் அரசுக்கு பலத்த அடி. இப்படி ஒரு அபகீர்த்தி நேரும் என்பதை நினைத்தே பார்க்கவில்லை.

இதனால் கடனுதவி வழங்கும் நாடுகள் உட்பட வெளிநாட்டு முதலீட்டார்களும் அதிருப்தி தெரிவித்தனர்.

அதுமட்டுமல்ல, ஏனைய மாகாணசபைத் தேர்தல்கள் பற்றியும் சந்தேகங்கள் தோன்றிவிட்டன.

இவ்வாறான நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு நகர்த்தப்பட்ட காய்தான் எதிரணித் தலைவரை சந்திக்கும் முடிவு.

தேர்தல் ஊழல் இன்றி நடக்கும், நியாயமான தேர்தலில் ஜனாதிபதிக்கு அக்கறை உண்டு என்று உள்ளூரிலும், உலகிலும் காண்பிக்கும் முயற்சி.

ரணில் இந்த அழைப்பை மறுத்திருக்கலாம். மறுத்திருந்தால்கூட பொ.ஜ.முன்னணிக்கு நன்மைதான். நியாயமான தேர்தல் ஒன்றை நடத்த யோசனை கேட்டோம். கூடிப் பேச அழைத்தோம். மறுத்தனர். இவர்களுக்கு நீதியான தேர்தலில் அக்கறை கிடையாது. வெறுமனே பொய்யான புகார்களை வீசுகிறார்கள் என்று கூறியிருக்கும் பொ.ஜ.முன்னணி.

தேர்தல் முடிந்த பின்னர் ஐ.தே.க. புகார்கள் கூறும் போதும், ஜனாதிபதி அழைத்ததையும், ரணில் மறுத்ததையும் பெரிதுபடுத்தி கூறுவார்கள்.

அதனால் அம்மையாரின் அழைப்பை ஏற்பதாக முடிவு செய்த ரணில், தந்திரத்தை தந்திரத்தால் வெல்ல வேண்டும் என்று தனது சகாக்களுக்கு கூறியுள்ளாராம்.

ஜனாதிபதி சந்திரிக்காவுடன் விரோதம் கிடையாது. தேர்தல் நீதியாக நடக்க ஒத்துழைக்க தயாராக உள்ளோம் என்பதை நிரூபிக்க இச் சந்திப்பு உதவும்.

பொ.ஜ.முன்னணியின் முறை கேடுகளைப் பற்றி இனிமேல் புகார் செய்யும்போது நாம் ஒத்துழைக்க நினைத்தும், அவர்கள் ஒத்துழைக்கவில்லை என்பதையும் வெளிப்படுத்தலாம் என்று திட்டமிட்டுள்ளது ஐ.தே.கட்சி.

ஆக, சந்திப்பிலும் இருதரப்புக்கும் உள்ள சிந்திப்பு ஒருவரை ஒருவர் ஓரம் கட்டுவதுதான்!

நடைபெறப்போகும் தேர்தலும் அதையொட்டிய இருகட்சிகளது புகார்களும் அதனை உறுதி செய்யும். இது புரியாது இந்தச் சந்திப்பையிட்டு புல்லரித்து நிற்கும் குறிப்பிட்ட தமிழ்க் கட்சி தலைவர் போன்றோர் தாமும் முட்டாளாகி, மற்றோரையும் முட்டாள்களாக்கப் பார்க்கின்றனர்.

இதற்கிடையே இன்னொரு விஷயம், அரசு தீர்வுப் பொதியை முன்வைத்தபோது ஜனாதிபதி சந்திரிக்கா ரணிலை அழைத்திருந்தார். சந்திப்பு நடந்தது. 'ஒத்துழைப்போம்' என்று ரணில் கூறியதாக செய்திகள் வந்தன. ஆக, சந்திப்புக்கள் புதுமையுமல்ல. புதிதுமல்ல. பழைய அனுபவங்களை மறந்தோருக்கு அல்லது மறப்பதுபோல நடிப்போருக்கு புதுமையாகத் தெரியலாம். ■



படிப்பகம்

www.padippakam.com

# இடி அமீன்

## உண்மைத் தொடர்

### அதிர் இடி 51

**கடந்தவாரம்**

**கார்லோஸ் குழுவினரால் கடத்தப்பட்ட பயணிகள் விமானத்தை மீட்க தனது கொமாண்டோக்களை அனுப்புகிறது இஸ்ரேல். இடி அமீன் போன்ற ஒருவரை திறந்த ஜீப்பில் கொண்டு செல்கின்றனர். இடி அமீன் என்று நம்பி விமானநிலைய அதிகாரிகள் சல்யூட் பண்ணுகிறார்கள். ஒரு அதிகாரிக்கு சந்தேகம் வருகிறது.....**

**இனி....**

'இடி அமீன் வருவதாக இருந்தால் முன்கூட்டியே தகவல் தெரிந்திருக்கும். அப்படியே தெரிவிக்காது இருந்தாலும், பிரிட்டிஷ் சரக்கு விமானத்தில் இடி அமீன் வருவதற்கு சந்தர்ப்பம் இல்லையே' என்று நினைத்த பாதுகாப்பு அதிகாரி, துணிச்சலான ஒரு காரியம் செய்தார்.

போலி இடி அமீன் சென்று கொண்டிருந்த திறந்த ஜீப்பை நிறுத்துமாறு சைகை செய்தார்.

போலி இடி அமீன் சென்ற ஜீப்பின் பின்னால் லாண்ட்ரோவரில் ஷொன்றோனும் அவரது அணியினரும் இருந்தனர்.

பாதுகாப்பு அதிகாரி ஜீப்பை நிறுத்துமாறு கூறுவதாக ஜீப் சாரதி வோக்கி டோக்கி மூலம் ஷொம்ரோனுக்கு தெரியப்படுத்தினார்.

"நிறுத்தாதே போ" என்று உத்தரவிட்ட ஷொம்றோன் தனது வாகனத்தில் இருந்த கொமாண்டோக்களுக்கும் பின்னால் வாகனத்தில் வந்த கொமாண்டோக்களுக்கும் துரித உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

"வேட்டுச் சத்தம் கேட்குமானால் வாகனங்களை விட்டுக் குதியுங்கள். எதிரிகளை சுட்டுத் தள்ளியபடி விமான நிலையத்துக்குள் பிரவேசிக்க வேண்டியிருக்கும்!"

ஷொம்ரோன் உத்தரவிட்டுக் கொண்டிருக்கும்போது போலி அமீன் சென்ற ஜீப் வண்டி பாதுகாப்பு அதிகாரியின் சைகையை அலட்சியம் செய்தபடி விமான நிலையக் கட்டடத்தை நெருங்கியது.

பாதுகாப்பு அதிகாரிக்கு சந்தேகம் வலுத்து விட்டது. அடுத்தடுத்து இரண்டு லாண்ட்ரோவர்களில் செல்பவர்களை பார்த்ததும் சந்தேகம் உறுதியானது.

லாண்ட்ரோவர்களில் இருப்பவர்கள் இஸ்ரேலிய கொமாண்டோக்கள் என்பதை ஊகிப்பது கஷ்டமாக இருக்கவில்லை.

விமான நிலைய வாயில் பக்கமாக, பாதுகாப்புக் கோபுரம் அருகே நின்றுகொண்டிருந்த சிப்பாய்க்கு உத்தரவு பறந்தது.

"அந்த வாகனங்களைத் தடுத்து நிறுத்து!"

சிப்பாய் உஷாராக முன்பே ஜீப் அவனைத் தாண்டிவிட்டது.

அடுத்து வந்த லாண்ட்ரோவரை நோக்கி துப்பாக்கியை நீட்டிக் குறிபார்த்தான்.

சாரதி ஆசனத்திற்கு அருகில் அமர்ந்திருந்த ஷொம்ரோனை நோக்கி அவனது துப்பாக்கி ரவையைப் பாய்ச்சத் தயாரானது.

அந்த சிப்பாய் வைத்த குறி எட்டியிருந்தால், இஸ்ரேல் தனது சிறந்த தளபதிகளில் ஒருவரை இழந்திருக்கும். 'ஒப்பரேசன் என்டபே' நடவடிக்கையும் படு தோல்வியில் முடிந்திருக்கும்.

ஆனால் சகல திசைகளையும் தங்கள் விழிகளால் அலசிக் கொண்டிருந்த கொமாண்டோக்களில் ஒருவர், சிப்பாய் குறிவைப்பதைப் பார்த்துவிட்டார்.

மிகத் துரிதமாக கொமாண்டோவின் துப்பாக்கி அந்தச் சிப்பாயை நோக்கிச் சீறியது.

மிக மிகத் துல்லியமான குறி. சிப்பாய் சுருண்டு விழுந்தான்.

'ஒப்பரேசன் என்டபே' நடவடிக்கையின் முதல் வேட்டோசை அதுதான்.

வேட்டோசை விமான நிலையமெங்கும் எதிரொலித்தது.

இஸ்ரேல் கொமாண்டோக்கள் தங்கள் வாகனங்களில் இருந்து தரைக்கு உதிர்த்தனர். தாமதிக்காமல் முன்நோக்கிப் பாய்ந்தனர். அவர்களது துப்பாக்கிகள் ரவைகளைப் பாய்ச்சிக் கொண்டிருந்தன.

கடத்தல் விமானத்திற்கு பாதுகாப்பாக நின்ற உகண்டாத் துருப்புகள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர்.

வேட்டுச் சத்தங்கள்கூட அவர்களின் தூக்கத்தைக் கலைக்கவில்லை.

பணயக்கைதிகளான பயணிகளும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர்.

அவர்களுக்குக் காவலாக கார்லோஸ் குழுவினரில் இருவர் மட்டுமே விழிப்பாக இருந்தனர்.

வேட்டுச்சத்தம் கேட்டதும் தமது குழுவினரில் தூங்கிக் கொண்டிருந்தோரை தட்டி எழுப்பினர்.

உகண்டா துருப்புக்களையும் கார்லோஸ் குழுவினர்தான் தட்டி எழுப்ப வேண்டியிருந்தது.

துருப்புக்களின் தூக்கக் கலக்கம் கலைவதற்கு முன்னரே இஸ்ரேல் கொமாண்டோக்கள் புயல் வேகத்தில் அவர்களை நெருங்கிவிட்டனர்.

உகண்டா துருப்பினர் நூறுபேர் வரை அங்கிருந்தனர். கார்லோஸ் குழுவினர் பதின்மூன்றுபேர் இருந்தனர்.

இஸ்ரேல் கொமாண்டோக்களை நோக்கி உகண்டா துருப்பினரும், கார்லோஸ் குழுவினரும் தாக்கத் தொடங்கிய போது நிலமை அவர்களது கைமீறிப் போயிருந்தது.

கொமாண்டோக்களது துப்பாக்கிகள் உகண்டா துருப்புகள் பலரது உயிர்களைச் சுவைத்துக் கொண்டிருந்தன.

தங்கள் சகாக்கள் தரையில் விழுந்து கொண்டிருப்பதைக் கண்டதும் உகண்டா துருப்பினரில் பலர் துப்பாக்கிகளைப் போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர்.

கார்லோஸ் குழுவினர் மட்டும் இறுதிவரை தாக்கிக்கொண்டிருந்தனர்.

கார்லோஸ் குழுவினரின் தாக்குதலில் இஸ்ரேலிய கொமாண்டோக்களை முன்நின்று வழிநடத்திய லெப்டினண்ட் கேனல் ஜோனிக்கு படுகாயம் ஏற்பட்டது.

அவரது கழுத்தை துப்பாக்கி ரவை பதம் பார்த்தது.



அப்படியே சரிந்த யோனியை கொமாண்டோக்கள் சிலர் சூழ்ந்து கொண்டு நின்று, கார்லோஸ் குழுவினரை நோக்கித் தங்கள் துப்பாக்கிகளால் சடசடத்தனர்.

எல்லாமே துரிதமாக நடந்து முடிந்தன.

விமான நிலையத்திற்குள் 15 நொடிகள் மட்டுமே சண்டை நடந்தது.

அதற்குள் விமான நிலையம் முழுவதும் இஸ்ரேலிய கொமாண்டோக்களின் கட்டுப்பாட்டில் இருந்தது.



காயமடைந்த லெ.கேர்ணல் ஜோனி



விமான நிலையம் தமது பூரண கட்டுப்பாட்டில் வந்ததும் ஷொம்ரோன் தகவல் அனுப்பினார். "விமானங்களை அனுப்புங்கள்!" மீட்கப்பட்ட பயணிகளை ஏற்றிச் செல்ல இரண்டு விமானங்கள் ஒன்றன் பின் ஒன்றாக தரையிறங்கின.

தரையிறங்கிய விமானங்களில் மருத்துவக் குழுவும் ட்றக் வண்டிகளும் வந்து இறங்கின.

ட்றக் வண்டிகள் விமான நிலையத்துக்குள் சென்று பயணிகளை ஏற்றி வந்தன. மருத்துவக் குழு காயப்பட்ட கொமாண்டோக்களுக்கு விமானத்தில் வைத்து சிகிச்சையளித்தது.

நூறு பணயக்கைதிகளில் 99 பேர் மீட்கப்பட்டனர். ஒரே ஒரு வயோதிப மாது சுகவீனம் காரனமாக உகண்டா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சகல நடவடிக்கைகளையும் முடித்துக் கொண்டு இஸ்ரேலிய கொமாண்டோக்களின் முதல் விமானம் புறப்படும்போது நேரம் சரியாக இரவு 11.48.

உகண்டா விமான நிலையத்தின் பாதுகாப்புக் கோபுரங்களையும் கொமாண்டோக்கள் தீமூட்டிவிட்டே புறப்பட்டனர்.

சகல நடவடிக்கைகளும் 57 நிமிடங்களில் முடிவடைந்தன.

கார்லோஸ் குழுவினரில் 13 பேரும், உகண்டா துருப்புக்களில் 35 பேரும் கொல்லப்பட்டனர். 65 உகண்டா துருப்புக்கள் ஒடித் தப்பினார்கள்.

இஸ்ரேலிய கொமாண்டோக்கள் எவரும் உயிரிழக்கவில்லை. லெப்டினன்ட் கேனல் ஜோனி உட்பட ஆறு பேர் காயமடைந்தனர்.

உகண்டா என்டபே விமான நிலையத்திற்குள் இஸ்ரேல் கொமாண்டோக்கள் சண்டையிட்டுக் கொண்டிருக்கையில், போயிங் 707 விமானம் ஒன்று விமான நிலையத்தின் மேலே வட்ட மிட்டுக் கொண்டிருந்தது.

அந்த விமானத்தில் இஸ்ரேலியப் பாதுகாப்பு அதிகாரிகள் இருந்தனர்.

விமான நிலையத்திலிருந்து வெளியே தொடர்பு கொள்ள முடியாதபடி சகல தொடர்புகளும் கொமாண்டோக்களால் துண்டிக்கப்பட்டிருந்தன.

'ஒப்ரேஷன் என்டபே' முடிந்து ஐந்து நிமிடத்தின் பின்னர்தான் உகண்டா இராணுவத் தலைமையகத்திற்குத் தகவல் தெரிந்தது.

இடி அமீனின் மாளிகையில் கறுப்பு அழகியைக் கட்டி யணைத்தபடி கிடந்த கார் லோஸை, தொலைபேசி அவசர மாக அழைத்தது.

தன்மீது கிடந்த கறுப்பழகியின் காலை விலக்கிவிட்டு, எழுந்து ரீசிவரை எடுத்த கார்லோசுக்கு அந்தச் செய்தி இடியாக விழுந்தது.

அவன் தன்னை மறந்து இஸ்ரேலியர்களை மிக மோசமான கெட்ட வார்த்தைகளால் திட்டிக் கத்தினான்.

அவன் போட்ட சத்தத்தில் கறுப்பழகியின் தூக்கமும் கத்தரிக்கப்பட்டது. விம்மும் மார்புகள் பயத்தில் மேலும் விம்மித் தணிய அவள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

ஆபிரிக்க நாடுகளது மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற இடி அமீனுக்குப் பயந்து, பயந்து தகவலைக் கூறினார் இராணுவ அதிகாரி.

இடி அமீனுக்கு இரத்தம் கொதித்தது. அவனுக்கு இஸ்ரேலியர்கள்மீது ஏற்பட்ட கோபத்தைவிட, தனது துருப்புக்கள் பயந்தாங்கொள்ளிகளாக இருந்ததை நினைக்கத்தான் பயங்கரக் கோபம் வந்தது.

ஆபிரிக்க நாடுகளது மாநாட்டில் இருந்து பாதியிலேயே புறப்பட்டான்.

### தருவது ரசிகன்

என்டபே விமான நிலையத்தில்தான் அமீன் சென்று இறங்கினான்.

சென்று இறங்கியதும் அமீன் கேட்ட முதல் கேள்வி:

**"உயிர் தப்பிய அந்த நாய்கள் எங்கே?"**

தாக்குதலின்போது தப்பியோடிய துருப்பினர் 65 பேரில் எவரும் மறுபடி வேலைக்குத் திரும்பவில்லை.

சம்பவம் நடந்தபோது பொறுப்பிலிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் சிலரும் தலைமறைவாகியிருந்தனர்.

இடி அமீனின் குணம் தெரிந்தே அவ்வாறு செய்திருந்தனர்.

அதே வேளையில் உலகெங்கும் இஸ்ரேலிய கொமாண்டோக்கள் நடத்திய அதிரடித் தாக்குதல் பற்றிய செய்திகள் பரபரப்பாக வெளியாகி இருந்தன.

இஸ்ரேலிய லெட் விமான நிலையத்தில் கொமாண்டோக்களை இஸ்ரேலிய துணைப் பிரதமர் வரவேற்கும் காட்சியும் வெளியாகி இருந்தது.

அமீனுக்கு அச் செய்திகள் விமான நிலையத்திலேயே கூறப்பட்டன.

காலால் தரையைப் பலமாக உதைத்த அமீன் தன் காரில் போய் ஏறிக்கொண்டான்.

"மருத்துவமனைக்கு போ!" என்றான். அவன் முகத்தில் குரூரமான எண்ணம் உதித்திருந்தது.

**இடி தொடரும்**

# விஜயசாந்தி நாளைய முதல்வர்?

தெலுங்கு படவுலக சூப்பர் ஸ்டாரினி விஜயசாந்தி. பாரதிய ஜனதா கட்சியின் பிரசார பீரங்கி. அப்படியிருந்தும் பாரதிய ஜனதா கட்சியின் இளைஞரணி செயலாளராக நடிகை கவுதமி நியமிக்கப்பட்டார்.



டில்லியில் உள்ள சில பெரும் தலைகளுடன் கவுதமிக்கு உள்ள நெருக்கமே அந்தப்பதவி கிடைப்பதற்கு காரணமாம். இதனால் விஜயசாந்திக்கு லேசான வருத்தம்.

ஆந்திர மாநிலத்தில் வரப்போகும் சட்டமன்றத் தேர்தலில் முதல்வர் பதவிக்கு விஜயசாந்தியை பாரதிய ஜனதா நிறுத்தலாம் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் விஜயசாந்தி இந்தியப் பத்திரிகைகளுக்கு அளித்துள்ள பேட்டியில் என்ன கூறியிருக்கிறார் பார்ப்போம்.

**கே: நடிகை கவுதமிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். அரசியலில் அவரைவிட நீங்கள்தானே பிரபலம்?**

**வி:** எனக்கு பதவி கொடுக்காதது குறித்து எதுவும் கூறவிரும்பவில்லை. எனக்கு பதவி முக்கியம் இல்லை.

**கே: முழுநேர அரசியலில் ஈடுபடுவீர்களா?**

**வி:** படத்தில் நடிப்பதைவிட்டு முழுநேர அரசியலில் ஈடுபடும் எண்ணம் தற்போது கிடையாது. பின்னர் ஏற்படும் சூழ்நிலைக்கு ஏற்ப என் முடிவும் மாறக்கூடும்.

**கே: ஆந்திர சட்டமன்ற தேர்தலில் உங்களை முதல்வராக முன்னிலைப் படுத்தினால் ஏற்பீர்களா?**

**வி:** இதுபற்றி நான் எதுவும் கூறவிரும்பவில்லை. தேர்தல் பிரசாரத்திற்கு அழைத்தால் செல்லுவேன்.

# சாமியாரும் விபரீதமும்



பிரேமானந்தா பாணியில் தாய்லாந்தில் புகுந்து விளையாடியுள்ளார் ஒரு சாமியார்.

கிறிஸ்தவ மதபோதகரான டாவோ யுவான் என்பவர் பெண்கள் விஷயத்தில் மகா ஜொள்ளர். இவரது ஜொள்ளு விவகாரங்கள் தெரியவந்ததால் தேவாலயத்திலிருந்து நீக்கம் செய்யப்பட்டார்.

இதனால் தானே சொந்தமாக தேவாலயம் ஒன்றை ஆரம்பித்தார். அங்கு சில பெண் சீடர்களையும் வைத்துக் கொண்டார்.

தேவாலயத்திற்கு வரும் இளம் பெண்களுக்கு வலை வீசி தன் ஆசைக்கு இணங்க வைத்திருக்கிறார். சீடர்களாக சேர்ந்த பெண்களையும் தன் ஆசைக்கு பணியவைத்திருக்கிறார்.

பாதிக்கப்பட்ட சில பெண்கள் பொலிசில் புகார் செய்தனர். அதன் பின்னர் விசாரணை நடத்தியபோது திடுக்கிடும் உண்மைகள் பல அம்பலமாகின.

ஏறக்குறைய 200 பெண்களை தன் காம வேட்டைக்கு பலியாக்கியுள்ளார்.

இதனையடுத்து இவர்மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. சாமியார் அசரவில்லை. "என் பெண் சீடர்களுக்கு மார்பக அறுவைச் சிகிச்சையை தவிர்ப்பதற்காக 'மசாஜ்' செய்து விட்டேன்." என்று கூறியிருக்கிறார். விசாரணைகள் தொடர்ந்து நடக்கின்றன.

# வீரப்பன் மீது மனைவி புகார்



சந்தனக் கடத்தல் மன்னன் வீரப்பனின் மனைவி பெயர் முத்துலட்சுமி. இவரை பொலிஸ் பிடித்து சிறையில் போட்டது. பின்னர் சமீபத்தில் விடுதலை செய்தது.

தற்போது 'மில்' ஒன்றில் கூலிவேலை செய்து தன் வாழ்க்கையை நடத்துகிறார் முத்துலட்சுமி.

இவருக்கு ஒரு பெண் குழந்தையும் உண்டு. அதன் பெயர் வித்யாராணி. வீரப்பனின் உறவினர் வீட்டில் வித்யாராணி வளர்ந்து வருகிறாள்.

"இன்னொரு குழந்தை பிறந்தது. அப்போது பொலிஸ் தொல்லை இருந்ததால் அக் குழந்தை பிறந்த உடனேயே காட்டில் புதைத்துவிட்டோம்" என்று நெஞ்சை அதிர வைக்கும் உண்மையை இப்போதுதான் கூறுகிறார் முத்துலட்சுமி.

குழந்தை அழும் சத்தத்தை வைத்து பொலிஸ் மோப்பம் பிடித்துவிடும் என்று கருதித்தான் புதைக்குமாறு கூறினாராம் வீரப்பன். அதுவும் பெண் குழந்தைதான்.

முத்துலட்சுமியுடன் பொலிசார் பாலியல் வல்லுறவு கொண்டிருக்கலாம் என்று நினைக்கும் வீரப்பன், அவளை காட்டுக்கு வரவேண்டாம் என்றும் தன்னைச் சந்திக்க வேண்டாம் என்றும் கூறிவிட்டானாம்.

பொலிசார் தன்னிடம் பாலியல் வல்லுறவு கொள்ளவில்லை என்பதை முத்துலட்சுமி வீரப்பனுக்கு தெரியப்படுத்தியும் அவன் நம்பவில்லையாம்.

இவ்வாறுதான் முத்துலட்சுமி பத்திரிகைகளுக்கு கூறுகிறார். ஆனால் இது வீரப்பனும் முத்துலட்சுமியும் பொலிசை ஏமாற்றுவதற்கு நடத்தும் நாடகம்.

காட்டில் முத்துலட்சுமிக்கு பாதுகாப்பில்லை என்பதால், குழந்தை வித்யாராணியை கவனித்துக் கொண்டு, காட்டுக்கு வெளியே நிம்மதியாக இருக்கட்டும் என்று நினைக்கிறார் வீரப்பன்.

தன்னுடன் தொடர்பில்லை என்று தெரிந்தால் தான் பொலிசார் அவளுக்கு தொல்லை கொடுக்க மாட்டார்கள் என்பதால்தான், இப்படி நாடகம் ஆடச் சொல்லியிருக்கிறான் என்றும் சந்தேகம் இருக்கிறது.

# கிருமிப்போர்

பிரிட்டனும், அமெரிக்காவும் ஈராக்குக்கு போதனை நடத்த முற்படுவது தெரிந்த கதை. ஈராக் விஷ ஆயுதங்கள் வைத்திருப்பதாக குற்றம் சாட்டியும் வருகின்றன.

அதே பிரிட்டன் 1980ம் ஆண்டு முதல் ஆபத்தான கிருமிகளைப் பரப்பும் ஆயுதங்களை தயாரித்து வருகிறது.

பக்டீரியா போன்ற கிருமிகளைக் கொண்ட இந்த ஆயுதங்களை வைத்து அண்மையில் ஒத்திகை நடத்தியுள்ளது.

தமது குடியிருப்புகளுக்குள் கிருமிகள் புகுந்துவிடுமோ என்று பிரிட்டிஷ் மக்கள் பயந்து போயுள்ளனர்.

நச்சு ஆயுதங்களை வைத்திருக்கும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகள் உலகுக்கு மட்டும் சமாதானம் போதிக்கின்றன.

# பொருட் காட்சி



அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் வித்தியாசமான பொருட்காட்சி நடைபெற உள்ளது.

இதனை நிறுத்துமாறு சிலர் குரல் கொடுத்துள்ளனர். அதனை நடத்துமாறு வேறு சிலர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்த சர்ச்சைக்குரிய பொருட்காட்சியின் பெயர், 'செக்ஸ் எக்ஸ்போ'.

நான்கு நாட்கள் நடைபெற உள்ள இந்தக் கண்காட்சியில் வயது வந்தோர் கண்டுகளிக்கக்கூடிய வீடியோ படங்கள், கருத்தடை சாதனங்கள், மற்றும் செக்ஸ் சம்பந்தப்பட்ட நூல்கள், சில கருவிகள் போன்றவை காட்சிக்கு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும்.

இந்தக் கண்காட்சியில் 45 ஆயிரம் விற்பனையாளர்களும், பார்வையாளர்களும் பங்கு கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செக்ஸ் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவே இந்தப் பொருட்காட்சி என்று விளக்கம் கொடுக்கிறார்கள் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்.

இது விழிப்புணர்வை ஏற்படுத்தாது. செக்ஸ் உணர்வையே தூண்டும் என்கிறார்கள் எதிர்ப்பாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# கடல் இராட்சதன்



தைரியமில்லாதவர்களைப் பார்த்து முதுகெலும்பில்லாதவர்கள் என்று சொல்லுவார்கள். முதுகெலும்பே இல்லாத பிராணிகளும் இருக்கின்றன. ஆனால் முதுகெலும்புள்ள பல பிராணிகளைப் பார்க்கிலும் இவை நல்ல பலமுள்ளவவாகவும், தைரியமுள்ளனவாகவும் இருக்கின்றன.

அத்லாந்திக் சமுத்திரத்தில்-'அத்லாந்திக் இராட்சசன்' என்ற பெயரில் காணப்படும் ஒரு வகை மீனைத்தான் இங்கு பார்க்கிறீர்கள்.

கணவா மீன் இனத்தைச் சேர்ந்த இவை மிகப் பெரிய அளவினதாகவும் எடைகூடியதாகவும் காணப்படுகின்றன.

யானையின் துதிக்கை போன்ற பத்துக் கைகளைக் கொண்ட பிராணி இது. அந்தப் பத்து கைகளிலும் இரண்டு மிக நீளமாக இருக்கும். இரையைக் கண்டதும் இத் துதிக்கைகளைப் பரப்பி ஒரே அமுக்காக அமுக்கிப் பிடித்து உணவாக உட்கொண்டு விடும். இதனை அணுகும் இதன் எதிரிகளின் பாடும் அதோகதிதான்.

கனடாவைச் சேர்ந்த நியூஃபவுண்ட்லாந்தின் திம்பின் ரிக்கின் குடாக்கடலில் 1878 நவம்பர் 2ம் திகதியன்று 'அத்லாந்திக் இராட்சசன், ஒன்று பிடிபட்டது இதன் உடலின் நீளம் 6.1 மீட்டர் (20 அடி) மட்டுமே. ஆனால் இதன் 'துதிக்'கை ஒன்றின், நீளம் எவ்வளவு தெரியுமா? 10.7. மீட்டர் (35 அடி) இப்பிராணியின் மொத்த நீளத்தை நீங்களே கணக்குப் பார்த்துக் கொள்ளலாம். அத்திலாந்திக் இராட்சத மீன்களில் இது தான் உலக சாதனை மீனாக கணிக்கப்பட்டுள்ளது.

பச்சோந்தி போன்று இவை இடத்துக்கேற்றமாதிரி தமது உடலின் வர்ணத்தையும் மாற்றிக் கொள்ளுகின்றன. இவற்றை விழுங்கி ஏப்பமிட, பெரும்பாலும், திமிங்கிலங்கள் துரத்தும். இவ்வேளைகளில் கடும் கறுப்பு வர்ண திரவம் ஒன்றைப் பாய்ச்சி, தன் இருப்பிடம் தெரியாது மறைத்துவிடும்.

நவீன ரக 'ஜெற்' விமானங்களின் வேகத்தைப் போன்றே இம்மீன்கள் கடலில் வேகமாய் பயணம் செய்கின்றன. இவற்றின் உடலில் துவாரங்கள் உள்ளன. இவற்றின் மூலம் நீரை வேகமாக உள்ளிழுத்து, பின்புறமுள்ள ஒரு துவாரத்தின் மூலம் வெளியேற்றுகின்றன. இதனால் தான் இவை கடலில் 'ஜெற்' வேகத்தில் உலா வருகின்றன.

யானையின் பலம் மட்டுமல்ல, இந்த இராட்சத மீனின் பலமும் துதிக்கைகளில்தான்.

# உலக அவசியம்



இது உலக அதிசயக் காட்சியல்ல. உலக அவசியக் காட்சி.

இன்று உலகில் மிகப் பயங்கரமான ஆட்கொல்லி நோய் எய்ட்ஸ். எய்ட்ஸ் நோய்க்கு எதிரான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த பல முயற்சிகள் நடந்து வருகின்றன.

ஃபிரான்ஸ் நாட்டில் முக்கிய நகரங்களில் எய்ட்ஸ் முறிவுச் சின்னமான சிவப்புக் குறியை இவ்வாறு பிரமாண்டமாக செய்து தொங்கவிட்டனர்.

அனைவரது கவனத்தையும் இது கவர்ந்தது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இவ்வாறான விழிப்புணர்வு பிரசாரங்கள் நடந்து வருகின்றன. இதனால் எய்ட்ஸ் நோயாளர் எண்ணிக்கை முன்பைவிட 40 வீதம் குறைந்துள்ளதாம்.

இத்தகைய விழிப்புணர்வு விளம்பரம் உலகெங்கும் அவசியம்தானே!

# இளம் அம்மா



மிக அவலமான செய்தி இது. ஹங்கேரி நாட்டில் பதினொரு வயதான சிறுமி கர்ப்பமாகி, குழந்தை ஒன்றுக்கு தாயாகிவிட்டாள். இவளது பெயர் கிளாரா.

ஹங்கேரி நாட்டு சட்டப்படி 12 வயதுக்கு கீழ்ப்பட்ட பெண்ணோடு உறவு வைப்பது தண்டனைக்குரிய குற்றம். அதனால் இந்தச் சிறுமியை தாயாக்கியவன் கம்பி எண்ணுகிறான். அவனுக்கு 17 வயது.

இந்த சோதனை மத்தியிலும் ஹங்கேரியில் இளவயது தாய் இவள்தான் என்றும், தேசியசாதனை என்றும் அங்குள்ள பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. சோதனை ஒரு புறம் சாதனை மறுபுறம். நிரந்தர வேதனை அவளுக்குத்தான்.

# நீட்டி நிமிர இடமில்லை

பரந்த பாரத தேசத்தில் மிக உயர்ந்த மனிதர் இவர்தான். இவரது பெயர் ஜிதேந்திரசிங். பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர்.

இவரது உயரம் 7 அடி 11 அங்குலம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உலக சாதனை உயர மனிதராக கின்னஸில் பதியப்பட்டுள்ளவர் பாகிஸ்தானைச் சேர்ந்த நசீர் அகமட். அவரது உயரம் 7 அடி 7 அங்குலம்.

ஜிதேந்திரசிங்கின் உயரம் கின்னஸில் உறுதி செய்யப்படவில்லை. ஜிதேந்திரசிங்கின் உயரத்திற்காகவே டாட்டா கம்பனியில் வேலை கிடைத்துள்ளது. இவரது எடை 120 கிலோ.

சமீபத்தில் விபத்தொன்றில் சிக்கிவிட்டார். காலில் அடி. சிகிச்சை பெற மருத்துவமனைக்கு போயிருக்கிறார். இவர் நீட்டி நிமிர்ந்து படுக்கக்கூடிய நீளமான கட்டில் இன்றி மருத்துவமனை ஊழியர்கள் மெத்தச் சிரமப்பட்டனராம்.



# தகவல் பெட்டி

# மகா சப்பாத்து



இது மிக பழைமையான சப்பாத்து! 1840ம் ஆண்டு ரொபேர்ட் கில்மௌர் என்பவர் பயன்படுத்திய சப்பாத்து இது.

இதில் என்ன விசேஷம் தெரியுமா? உலகில் உயர்ந்த மனிதராக இருந்தவர் கில்மௌர். அவர் 8 அடி உயரம். அவரது பாத அளவு 17 அங்குலம். அவருக்காக சொல்லிச் செய்யப்பட்ட சப்பாத்து இது.

அருகில் உள்ள பெண் அணிந்துள்ள சப்பாத்தைப் பாருங்கள். இதன் பிரமாண்டம் புரியும்.

# கமராவின் பயணம்

அடடே... பிரமாண்டமான கமராவா? என்றுதானே நினைக்கிறீர்கள். அதுதான் இல்லை.

கமரா வடிவத்தில் தத்ரூபமாக செய்யப்பட்ட உண்மையான கார்.

இதற்குள் ஒரே ஒருவர் மட்டும் அமர்ந்திருந்து செலுத்தலாம். மணிக்கு 40 கி.மீட்டர் வேகத்தில் ஓடுகிறது. 60 சி.சி எஞ்சின் பொருத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஹைதராபாத்தைச் சேர்ந்தவர் கார் வடிவமைப்பாளர் கே.சுதாகர். அவர்தான் இதனை உருவாக்கி உள்ளார். ஏற்கனவே வெவ்வேறு வடிவங்களில் 48 கார்களை உருவாக்கியுள்ளார்.

அடுத்து இவர் தயாரிக்கப்போகும் கார்களின் வடிவங்கள்: ஹெல்மெட் கார், பைனாகுலர் கார், யானைக் கார்.

இவை எதுவும் விற்பனைக்கல்ல. கண்காட்சிகளில் மட்டும் ஓட்டிக் காண்பிக்கப்படும். சுதாகரின் பெயர் இன்னமும் கின்னஸில் உலக சாதனையாளராக இடம்பெறவில்லை!






படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 93

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# மொழிமாற்றலும் வெட்டி ஒட்டலும் படப்பிடிப்பாளரின் மிரட்டல்

சமீபத்தில் சக நிருபர் ஒருவர் கூறிய தகவல் இது. அதனை அவர் பணியாற்றும் சினிமா இதழுக்கும் எழுதியுள்ளார்.

அண்மையில் வெளியாகி தோல்வி கண்டுள்ள படம் 'மன்னவரு சின்னவரு'. இப்படம் தமிழில் முழுக்க முழுக்க எடுக்கப்பட்டதாக பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தனர்.

ஆனால் நடந்தது என்ன தெரியுமா? அர்ஜுனும், நாகேஸ்வரராவும் நடித்த தெலுங்குப் படம் ஒன்றை வாங்கினார்கள். அதில் நாகேஸ்வரராவ் தோன்றும் காட்சிகளையெல்லாம் கத்தரித்தனர்.

நாகேஸ்வரராவ் நடித்த பாத்திரத்தில் சிவாஜியை நடிக்க வைத்தனர். அர்ஜுன் செளந்தர்யா ஆகியோர் நடித்த காட்சிகள் ஏற்கனவே தெலுங்குப் படத்திலும் இருந்த காட்சிகள்தான். அவர்களோடு சிவாஜி தோன்றும் காட்சிகள் மட்டும் புதிதாக சேர்க்கப்பட்டன.

இதனால் பல இலட்ச ருபாய்கள் செலவு மிச்சம். இதனை வெளியே கூறாமல் முழுக்க முழுக்க தமிழில் புதிதாக தயாரானதுபோல விளம்பரங்கள் செய்திருந்தனர்.

இதனையடுத்து பிரகாஷ்ராஜ் சொந்தமாகத் தயாரிக்கும் படம் ஒன்றிலும் இதே உத்தியை கையாளப்போகிறார்கள்.

தெலுங்கில் பிரகாஷ்ராஜ் நடிக்கும் காட்சிகள் தமிழில் அப்படியே இடம்பெறும். தெலுங்கு வாயசைப்புக்கு ஏற்ப தமிழில் பிரகாஷ்ராஜ் குரல் கொடுத்தால் போதும். பிரகாஷ்ராஜுடன் பிரபல தெலுங்கு நடிகர் ஒருவர் நடிக்கவுள்ளார்.

தமிழில் அந்த நடிகருக்கு பதிலாக பார்த்திபன் நடிக்கிறார். எனவே அந்த தெலுங்கு நடிகர் நடித்த காட்சிகளை வெட்டிப் போட்டுவிட்டு, பார்த்திபன் நடிக்கும் காட்சிகளை மட்டும் தமிழில் புதிதாக எடுத்தால் போதும்.

நகைச்சுவைக் காட்சிகளை தமிழ் நகைச்சுவை நடிகர்களை நடிக்கவைத்து எடுப்பார்கள். அதனை படத்தோடு செருகிவிடுவார்கள். இது பழைய உத்தி.

– ●●● –

## மொடலிங் செய்தவர்

தற்போது பிரபலமாக இருக்கும் ஐந்தெழுத்து நடிகை. பெரிய திரையில் நடிக்க வருவதற்கு முன்னர் பெங்களூரில் விளம்பரப் படங்களுக்கு மொடலிங் செய்து வந்தவர்.

சினிமாவில் காதல் கவிதைகளில் நடித்து பிரபலமான இந்த நடிகை இப்போது புகழின் உச்சியில் இருக்கிறார்.

இவருக்கு சமீபத்தில் ஒரு பிரச்சனை. மொடலிங் செய்த காலத்தில் ஓவியக் கல்லூரி மாணவர்களுக்காக நிர்வாணமாக போஸ் கொடுத்திருக்கிறார்.

ஓவியக் கல்லூரியில் இது சகஜம். நிர்வாணமாக ஆண், பெண்களை அமரவைத்து ஓவியம் வரைவதும் ஒரு பயிற்சி. இதனை யாரும் கேவலமாக கருதுவதில்லை. குறிப்பிட்ட நடிகை இப்போது பணத்தோடும் புகழோடும் இருப்பதால்தான் பிரச்சனையே ஆரம்பம்.

நடிகை நிர்வாணமாக போஸ் கொடுத்தபோது எப்படியோ புகைப்படம் எடுத்து வைத்த ஒரு கமராக்காரரின் உருவில் பிரச்சனை வந்திருக்கிறது.

அந்தப் புகைப்படத்தை வெளியிட்டுவிடுவேன் என்று மிரட்டி பல இலட்சம் ருபாய்களை கறந்துள்ளாராம் அந்த கமராக்காரர்.

இரண்டு மூன்று தடவைகள் மிரட்டலுக்கு பயந்து பணம் கொடுத்த நடிகை மீண்டும் மீண்டும் அவன் தொல்லை கொடுத்ததால், நடிகர் ஒருவர் ஊடாக தமிழகத்தின் வி.ஐ.பி. ஒருவரை அணுகியுள்ளார்.

உதவி செய்வதற்காக நடிகை அந்த வி.ஐ.பிக்கு பிரதியுபகாரம் செய்யவேண்டியிருக்குமாம். இதனை அந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்த நடிகரே தன் நெருங்கிய வட்டாரங்களிடம் கூறியிருக்கிறார்.

–★–

## அமைச்சரின் ஆசை

இந்திப் படவுலகில் முதலிடத்தில் உள்ள நடிகை அவர். வயதான ஓவியர் ஒருவரையே பைத்தியம் பிடிக்க வைத்த நளின உடல் நாயகி.

அவர் சமீபத்தில் அருணாச்சலப் பிரதேசத்திற்கு சுற்றுலாபோனார். அங்கு அமைச்சர் ஒருவரை சந்தித்திருக்கிறார். அமைச்சர் விருந்து கேட்டிருக்கிறார். நடிகையும் மறுக்கவில்லை. இந்திய அரசியலின் பிரபல புள்ளிகள் பலரை கையில் வைத்திருப்பவராச்சே அந்த நடிகை. குறிப்பிட்ட அமைச்சரையும் மறுப்பின்றி குளிர்வித்திருக்கிறார்.

முற்றாக குளிர்ந்துபோன குறிப்பிட்ட அமைச்சர் அந்த நடிகையையே திருமணம் செய்யுமளவுக்கு பைத்தியமானார். நடிகையோ மறுப்புத் தெரிவித்துவிட்டார். அவர் விடாது தொல்லைப்படுத்தியதால் குறிப்பிட்ட அமைச்சருக்கு மேலே உள்ளவருக்கே நடிகை நேராக புகார் கொடுத்தார். அந்த அமைச்சர் வாலைச் சுருட்டிக் கொண்டார்.

இந்த நடிகையிடம் குட்டி நடிகர்கள் நெருங்கவே பயப்படுவர்கள். இயக்குநர்களும் வம்பு பண்ணமாட்டார்கள். பிரபல நடிகர்களுடன் மட்டுமே நட்பு வைத்திருப்பார்.

இந்த நடிகையின் செல்வாக்கு மும்பாயில் மட்டுமல்ல, புதுடில்லியிலும் கொடிகட்டிப் பறக்கிறது.

இந்தியில் பிரபல நடிகர் அமிதாப்பச்சனைக் கூட இவர் மதிக்காது நடந்த கொண்டதாக கூறப்பட்டது. ஆனாலும் இவர்மீது ரசிகர்களும் பைத்தியமாக இருப்பதால், இயக்குநர்கள் இவரையே நாடுகிறார்கள்.

# ஜோடிக்கு மாறிய இசை
# ரகுமானுக்கு உதவி

'கண் எதிரே தோன்றினாள்' வெற்றிப் பட ஜோடியான பிரசாந்த்- சிம்ரன் இருவரும் இணைந்து நடிக்கும் படம் 'ஜோடி'. இது முன்பே சொன்ன செய்தி.

ஜோடி படத்திற்கு இசை ஏ.ஆர்.ரகுமான். இப்படத்தின் பாடல்களுக்காக மூளையைக் கசக்காமல் சுருக்கமாக ஒரு ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டார்.

'காதலுக்கு மரியாதை' இந்தியில் தயாரானபோது இசையமைத்தவர் ரகுமான். படம் இந்தியில் தோல்வி. அக்சய் கன்னா, ஜோதிகா இந்தியில் நடித்திருந்தனர்.

'காதலுக்கு மரியாதை' தோல்வி கண்டதால், அப்படத்தின் பாடலுக்கான இசையை அப்படியே ஜோடி படத்திற்கு பயன் படுத்துகிறார் ரகுமான். ஜோடி படத்தில் மொத்தம் ஆறு பாடல்கள்.

இன்னொரு செய்தி, 'என் சுவாசக் காற்றே' படம் 26.02.99 அன்று திரைக்கு வந்துள்ளது. இப்படத்திற்கான இசையும் ஏ.ஆர். ரகுமான்தான்.

இப்படத்திற்கு பின்னணி இசை அமைத்துக் கொண்டிருந்தபோது, திடீரென்று வெளிநாடு செல்ல வேண்டிய சூழ்நிலையில் இருந்தார் ரகுமான்.

தான் போட்டு வைத்திருந்த பின்னணி இசைக் குறிப்புக்களை வேறொரு இசை அமைப்பாளரிடம் கொடுத்து, ஆலோசனைகளும் கூறிவிட்டுப் போனார் ரகுமான். அந்த இசையமைப்பாளரும் குறிப்புக்களுக்கு ஏற்ப கச்சிதமாக இசையமைத்திருந்தார். அவர் யார் தெரியுமா? இசையமைப்பாளர் தேவாவின் சகோதரர் முரளி.

# விக்ரமன் இயக்க விஜயகாந்த் நடிக்கிறார்

'புது வசந்தம்', 'பூவே உனக்காக', 'சூர்யவம்சம்', 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' இத்தனையும் சூப்பர் ஹிட்டான படங்கள். இவற்றை இயக்கியவர் விக்ரமன்.

விக்ரமனின் வீடு தேடிச் சென்று, தனக்கு ஒரு படம் இயக்குமாறு கேட்டார் விஜயகாந்த். பந்தா இல்லாது விஜயகாந்த் வீடு தேடி வந்தது விக்ரமனுக்கு பிடித்திருந்தது. உடனே ஒப்புக் கொண்டார்.

படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்: 'வானத்தைப் போல' இப்படத்தில் விஜயகாந்த் அண்ணன், தம்பியாக இரட்டை வேடத்தில் தோன்றுகிறார்.

கதாநாயகிகள் முடிவாகவில்லை. ஆனந்தராஜ், ரமேஷ் கண்ணா, மதன் பாப் ஆகியோரும் நடிக்கவுள்ளனர். இசை: எஸ்.ஏ. ராஜ்குமார்.

# வந்தார் ரஞ்சித[...]

இராணுவவீரர் ஒருவரை காத[...] கைப் பிடித்துக் கொண்டு புதுடில்[...] போனவர் ரஞ்சிதா. இப்போது மறுப[...] திரையுலகில் வாய்ப்புத் தேடுகிறார்.

தனக்கு நெருக்கமான கதாநாயகர்[...] துரத்தி வாய்ப்புக் கேட்கிறாராம். சில[...] திரையிலும் சில இயக்குநர்கள் புண்ணிய[...] வாய்ப்புத் தேடியிருக்கிறார்.

திரையுலகில் நிலைக்கவேண்டுமான[...] கதாநாயகர்களையும், இயக்குநர்களை[...] அனுசரித்துத்தான் போகவேண்டும் எ[...] உண்மையாகக் கூறிவிட்டுப் போனவ[...] ரஞ்சிதாதான்.

மணம் முடித்த பின்னர் நடிக்க மா[...] டோம் என்று கூறிய நடிகைகள் எல்லாம் மனம்மாறி நடிக்கவருவது புதுமையல்ல. ஆடிய காலும், பாடிய வாயும் சம்மா இருக்குமா?

# மின்சார கண்ணா விஜய்

'படையப்பா' படத்தில் 'மின்சாரக் கண்ணா...' என்று தொடங்கும் பாடல் ஒன்று இடம்பெறுகிறது.

'படையப்பா' முடிந்ததும் கே.எஸ். ரவிக்குமார் இயக்கும் படத்தில் விஜய் நடிப்பதாக கூறியிருந்தோமல்லவா.

அப்படத்திற்கு 'மின்சாரக் கண்ணா' என்று பெயர் சூட்டியுள்ளனர். 'சின்ன ரஜினி' என்று விஜய் அழைக்கப்படுகிறார். ரஜினி ரசிகர்களை மேலும் கவருவதற்கு ரஜினியின் படப் பாடலின் முதல் அடியை விஜய் படத்திற்கு சூட்டிவிட்டனர்.

விஜய் அப்பா எஸ்.ஏ. சந்திரசேகர் தன் மகனை ரஜினிக்கு பின்னர் சூப்பர் ஸ்டாராக்கியே தீருவேன் என்று உறுதியாகக் கூறிவருகிறாராம்.

"ரஜினி மேலும் இரண்டு, மூன்று வருடங்கள்தான். அதன் பின்னர் ரஜினியின் திரையுலக வாரிசு என் மகன்தான்." என்று கூறுகிறார் சந்திரசேகரன்.

ரஜினியின் பாணியில் தனது படங்களில் சில ஸ்டைல்களையும் செய்து காட்டி வருகிறார் விஜய். தனது படுக்கை அறையிலும் ரஜினியுடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை பிறேம் போட்டு வைத்திருக்கிறார்.

# 'விக்' ரஜினி

'படையப்பா'வில் ரஜினி தன் தலையில் விக் வைத்துக் கொண்டு நடிக்கிறார் என்பது தெரிந்த செய்தி. இங்குள்ள படத்தில் ரஜினியின் தலையை கூர்ந்து பார்த்தால் 'விக்' மகிமை தெரியும்.

'படையப்பா' படத்தில் ரஜினி மிக இளமையாகத் தெரிகிறாராம். 'அருணாச்சலம்' படத்தில் ரஜினியை சொதப்பிவிட்டார்கள் என்று ரசிகர்கள் அதிருப்திப்பட்டனர். அந்தக் குறையை படையப்பாவில் போக்கி இருக்கிறார் இயக்குநர் கே.எஸ். ரவிக்கும[ார்].



ரம்பா

"வாள் கண்டேன் வாளே கண்டேன் வட்டமிடும் விழிகள் கண்டேன்"




ரஜினி
படம்: படையப்பா

# மினி சினி

* கார்த்திக் நடித்த 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படத்தில் கெளரவ வேடத்தில் நடித்த அஜித்குமார், தற்போது பார்த்திபன் நடிக்கும் 'நீ வருவாய் என' என்னும் படத்தில் கெளரவ வேடத்தில் நடிக்கிறார்.

* பிரபு தேவாவின் ஜோடிகளில் ஒருவராக 'டைம்' படத்தில் நடித்து வரும் ராதிகா செளத்ரி அடுத்து விஜயகாந்த் ஜோடியாக புதிய படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.

* சத்யராஜின் அண்ணன் மகன் சத்யன் கதாநாயகனாக அறிமுகமாகும் 'இளையவன்' படத்தில் சத்யனுக்கு ஜோடியாக கௌசல்யா நடிக்கவிருக்கிறார்.

* 'பூமணி', 'கிழக்கும் மேற்கும்', 'பூந்தோட்டம்' படங்களை இயக்கிய மு. களஞ்சியம் வில்லனிக் ஹீரோவாக புதிய படமொன்றில் நடிக்கவுள்ளார்.

* 'சங்கமம்' படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகும் விந்தியாவிற்கு, அப்படம் வெளிவருமுன்னரே 3 புதிய படங்களில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

* ஜெயராம்-முகேஷ் இணைந்து நடிக்கும் 'ஃபிரெண்ட்ஸ்' என்ற மலையாளப் படத்தில் மீனா கதாநாயகியாக நடித்து வருகிறார்.

* வேலுபிரபாகரன் இயக்கும் 'சிவன்' படம், வான்டாம் நடித்த 'யுனிவேர்ஸல் சோல்ஜர்' என்ற ஆங்கிலப் படத்தில் உல்டா என்று கூறுகிறார்கள்.

* கே.டி. குஞ்சுமோன் தயாரிக்க அவரது மகன் எபி நடிக்கும் 'கோடீஸ்வரன்' படத்தை இயக்கும் மு.நந்தகுமார் அடுத்து கார்த்திக் நடிக்கும் படத்தை இயக்கத் திட்டமிட்டுள்ளார்.

* விஜய் நடித்து தற்போது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'துள்ளாத மனமும் துள்ளும்' படம் இந்தியில் தயாராகப் போகிறது.

* 'மருதநாயகம்' வெளிவருவதற்கு முன் கமல் இயக்கி நடிக்கும் புதிய படம் 3 மொழிகளில் தயாராகவுள்ளது. இப்படத்தில் கமலுக்கு ஜோடி யாக 'குச் குச் ஹோதா ஹை' இந்திப்பட நாயகி ராணி முகர்ஜி நடிக்கவுள்ளார்.

# நடிப்பில்லாத நடிகை

'காதல் கவிதை', 'என் சுவாசக் காற்றே' இரண்டும் வெளியாகி நல்லபடியாக ஓடுவதால் இஷா கோபிகருக்கு சந்தோஷம்.

தமிழ் சினிமா உலகில் இஷாகோபிகருக்கு நண்பர்களே கிடையாதாம். அது ஏன்? அவரே சொல்கிறார் இப்படி:

"படப்பிடிப்புக்கு போனோமா, நடித்தோமா, திரும்பி வந்தோமா என்றிருப்பவள் நான். இங்கே நான் வந்தது நடிப்பதற்கு மட்டும்தான். வேறெதற்கும் அல்ல. நட்புக் கொள்ளவும் அல்ல." என்று கூறுகிறார் இஷா.

இஷா இதுவரை எந்தக் கிசுகிசுவிலும் சிக்காமல் இருப்பதன் மர்மம் அதுதானோ?

www.padippakam.com

சுவாச நடிகைக்கு கட்டழகான ஆண்களைக் கண்டால் போதும். கொக்கி போட்டு பிடித்துவிடுவார். இந்துக் கடவுள் ஒருவரது பெயரில் தயாராகும் முன்றெழுத்து படத்தில் நடிக்கிறார் நடிகை. பழம் தமிழ் மன்னர் ஒருவரது பெயரை தன் பெயரோடு இணைத்து வைத்துள்ள நடிகரின் கட்டழகில் மயங்கினார் நடிகை. அந்த நடிகர் இப்போது கிளின் போல்ட்.

# காதோடு சொல்லுகிறோம்

எதிரும் புதிருமான படத்தில் சிம்ம நடிகை கவர்ச்சி நடனம் ஆடிவிட்டு போகிறார். அவரது காதலரான நடன இயக்குநர்தான் அப்படத்தின் நடன இயக்குநர். காதலரது ஆசைக்காகவே ஆடினாராம் நடிகை.

நேரத்துக்கு ஆங்கிலத்தில் என்ன? அந்தப் படத்தின் பெயர் அதுதான். அப்படத்தில் நடனப் புயலுக்கு மும்பை அழகிகள் இருவர் ஜோடியாக நடிக்க வந்தனர். திடீரென்று அதில் ஒருவர் தூக்கியெறியப்பட்டார். அந்த இடத்திற்கு 'சிம்ம' நடிகை நடிக்கிறார். நடனப் புயலின் சகோதரரான நடன இயக்குநர்தான் சிம்ம நடிகைக்கு சிபாரிசு. சகோதரரின் காதலியோடு டூயட் பாடப்போகிறார் நடனப் புயல்.

'எப்போதும் காதல்' என்பதை பல விதமாகக் கூறலாம். அவ்வாறு கூறிப் பார்த்தால் அந்தப் படத்தின் பெயர் வரும். இளம் முன்னணி நாயகர் நடித்துள்ள அந்தப் படத்தை வெளியிடுவதில் படத் தயாரிப்பாளருக்கும் நடிகரின் தந்தைக்கும் இடையே தகராறு. நடிகருக்கான ஊதியப் பாக்கி உட்பட பணம் வரவேண்டியிருக்கிறதாம். அதனைத் தந்தால்தான் படத்தை வெளியிட அனுமதிப்பேன் என்கிறார் நடிகரின் தந்தை. பாக்கி எவ்வளவு தெரியுமா? அதிகமில்லை, 50 இலட்சம் ரூபாய்.

## வையாபுரி பூரிப்பு

'துள்ளாத மனமும் துள்ளும்' வெற்றி நடை போடுகிறது. நம்நாட்டிலும் வீடியோக் கடைகளில அப்படக் கொப்பிகளுக்கு பலத்த கிராக்கி.

இப்படத்தில் அலி போன்ற தோற்றத்தில் நடித்துள்ளார் வையாபுரி. அதனால் இவரை பலரும் கேலி செய்கிறார்களாம். உண்மையாகவே அலியாக இருக்குமோ என்று சந்தேகப் பட்டவர்களும் இருக்கிறார்களாம்.

ஆனால் வையாபுரி கவலைப்படவில்லை. "என் நடிப்பு எடுபட்டிருக்கிறது. பாத்திரத்தோடு கலந்து நடித்திருக்கிறேன். அதனால்தானே என்னை ஒரு அலி என்றே நம்பியிருக்கிறார்கள்" என்று பூரித்துப் போகிறார்.



வடிவேலு-விசித்ரா
படம்: பொன் மானைத் தேடி



விஷால்-புதுமுகம் ஊர்வசி
படம்: காமா

## இருவர் இயக்கும் படம்

கிருஷ்ணன்-பஞ்சு அந்தக் காலத்தில் பெயர் பெற்ற இரட்டை இயக்குநர்கள். பராசக்தி போன்ற வெற்றிப் படங்களை இணைந்து இயக்கியவர்கள். அதற்கு முன்னரும் பின்னரும் இரட்டை இயக்குநர்கள் பலர் தமிழ் சினிமாவில் இருந்துள்ளனர்.

சமீபகாலத்தில் இரட்டை இயக்குநர்கள் அரிதாகி விட்டனர். அந்தக் குறையைப் போக்க வருகிறார்கள் ரவி-ராஜா. இவர்கள் இணைந்து இயக்கும் படத்திற்கு 'கண்மணி உனக்காக' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

இந்தப் படத்தில் கதாநாயகனாக இஷாக் உசைனி நடிக்கிறார். ஜோடியாக நடிப்பவர் சுவலட்சுமி. பிரபல கராட்டி வீரரும் 'மை இந்தியா' பட நாயகனுமான உசைனியின் சகோதரர்தான் இஷாக் உசைனி. படத்திற்கு இசை: பிரதீப் ரவி. ஆனந்தராஜ், மன்சூரலிகான், செந்தில், வடிவுக்கரசி, விசித்ரா, பேபி ஜெனிபர் ஆகியோரும் நடிக்கின்றனர்.

## காமா-02

சமீபத்தில் விற்பனையான படங்களில் முதலிடத்தில் இருப்பது படையப்பா. அதற்கு அடுத்த இடத்தில் இருப்பது 'காமா'.

வெளிநாடுகளிலும் இதன் உரிமையை போட்டி போட்டு வாங்கியுள்ளனர். படு சூடான காட்சிகளுடன் தணிக்கைக் குழுவுடன் போராடி வெளிவரப் போகும் படம்: காமா.

## தாராள சுவாதி

'எங்க மாப்பிளே' படம் தெலுங்கில் இருந்து தமிழுக்கு மொழி மாற்றப்பட்டுள்ளது. இப்படத்தில் சுவாதி தாராளமாக அதிர்ச்சியூட்டும் கவர்ச்சிக் காட்சிகளில் நடித்திருக்கிறார்.

தெலுங்குப் படவுலகில் சுவாதிக்கு ஏகப்பட்ட நண்பர்கள். சமீபத்தில் தமிழில் வெளியான 'ஹவுஸ்புல்' 'உன்னைத் தேடி' ஆகிய படங்களில் தன்னை நன்கு பயன்படுத்தவில்லை என்ற கடுப்பிலும் இருக்கிறாராம் சுவாதி.

## இழுத்தடிப்பு

சரத்குமாரை கதாநாயகனாக முன்னுக்கு கொண்டுவந்தவர் இயக்குநர் மணிவாசகம். இப்போது சரத். முன்னணி நாயகர். மணிவாசகத்தின 'வீரமுத்து' படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டார் சரத். முற்பணமாக 13 இலட்சம் வாங்கினார். படப்பிடிப்புக்கு திகதி கொடுக்காது இழுத்தடிக்கிறாராம்.



## கனகா தேய்கிறார்

மார்க்கெட் சரிந்த நடிகைகள்தான் இலங்கை, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் நட்சத்திர விழாக்களுக்கு சென்று 'சேவை' செய்து வருகிறார்கள். சமீபத்தில் இலங்கைக்கு 'கலைச் சேவை' செய்ய வந்து போனவர் கனகா.

தமிழ் நாட்டில் இருந்தபடியே 'கலைச் சேவை' செய்யவேண்டுமானால், மார்க்கெட் நிலவரம் சரியாக இருக்க வேண்டும். அப்போதுதான் பிரபல புள்ளிகள் கலைச்சேவைக்கு அழைப்பார்கள். மார்க்கெட் இல்லாத நடிகைகளை தமிழக பிரபலங்கள் சேவைக்கு அழைக்க மாட்டார்கள்.

அதனால்தான் கனகா போன்ற நடிகைகள் உலகம் சுற்றி கலைச் சேவை செய்ய புறப்படுகிறார்கள். இருக்கும் இடத்தில் சம்பாதிக்க முடியாதுபோனால்,நாடு நாடாக நட்சத்திர விழா என்ற பெயரில் கலைச்சேவை செய்து சம்பாதிக்க வேண்டியதுதான்.

தற்போது 'விரலுக்கு ஏற்ற வீக்கம்' படத்தில் கனகாவுக்கு ஜோடி வடிவேலு. கனகாவின் நிலையைப் பார்த்தீர்களா?

கதாநாயகியாக இருந்தவர் கவர்ச்சி நடிகையாக 'தலைமுறை' படத்தில் தோன்றினார். இப்போது நகைச்சுவை நடிகையாக மாறிவிட்டார்.

பொறுத்திருந்து பாருங்கள், நகைச்சுவை கதாநாயகியாக கலக்கிக் காட்டுகிறேன் என்கிறாராம் கனகா. இந்த சவால் தானே வேண்டாமென்கிறது.



தாமு-வையாபுரி
படம்: துள்ளாதமனமும் துள்ளும்

## புதியவர்கள், பழையவர்கள் ரம்பாவுக்கு பேதமில்லை

காதலர் தினம் படத்தில் ஒரே ஒரு பாடல்காட்சியில் குலுக்கல் நடனம் ஆடுகிறார் ரம்பா. பேட்டி ஒன்றில் ரம்பாவே அதற்கு விளக்கம் கூறுகிறார்:

**கே: காதலர் தினம் படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் மட்டுமே நடனம் ஆடியுள்ளீர்களே?**

ர: ஏன் நான் மட்டும்தான் ஆடியிருக்கிறேனா. இது அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது. காதலர் தினத்தில் ஏ.ஆர். ரகுமான் இசையில் அந்தப் பாடல் அற்புதமாக அமைந்துள்ளது. அந்தப் பாடலுக்கான உடையும் பிரமாதம். இதுவரை நான் அணியாத உடை. படம் வந்ததும் பார்த்துவிட்டுக் கூறுங்கள்.

**கே: 'என்றென்றும் காதல்' 'பூமகள் ஊர்வலம்' படங்கள் பற்றிக் கூறுங்களேன்?**

ப: இரண்டும் பெரிய கம்பனிப் படங்கள். என்றென்றும் காதல் மிக நன்றாக வந்துள்ளது. அதில் நவீனப் பெண்ணாக நடித்துள்ளேன். 'பூ மகள் ஊர்வலம்' படத்தில் மென்மையான பாத்திரம். பிரசாந்துடன் முதன் முதல் இணைந்து நடிக்கிறேன். பண்ணையாரின் மகளாக வருகிறேன்.

**கே: புது நடிகர்களுடன் இணைந்து நடிக்கிறீர்களே?**

ர: எனக்கு புதியவர்கள், பழையவர்கள் என்ற பாகுபாடெல்லாம் கிடையாது. நல்ல பாத்திரம், நல்லகதை, திறமையான இயக்குநர் இருந்தால் நடிப்பேன்.

www.padippakam.com

# அந்தநாள் ஞாபகம்





நேற்று நாட்டிய நாயகன்
இன்று நடிப்புலக நாயகன்

பார்த்ததுமே தெரிந்திருக்கும்–பரத நாயகனாய்க் காட்சிதருபவர் கமல் என்று. நடிப்புலகில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான கமல், பரதநாட்டியம் உட்பட பல கலைகள் கற்ற சகலகலா வல்லவர். அவரது உடல் அழகின் இரகசியமும் அதுதான்.

'களத்தூர் கண்ணம்மா' முதல் 'காதலா காதலா' வரை கமல் அடைந்திருக்கும் வளர்ச்சிக்குக் காரணம் என்ன தெரியுமா? ஈடுபாடு!–தனது துறையில் அவருக்குள்ள ஈடுபாடு.

# நீதான்!

கனவுகளை
நினைவுகளாக்கி
என் நெஞ்சத்துள்
ஏற்றிவைத்த–
நிலா– நீ!
••
காதலுக்கு வரைவிலக்கணம்–
கவிதையிலானால்
கண்ணீரும்–
வருமென்பதுதானுண்மை:
••
காதலில்
கண்ணீர்தான்
அதிகமென்பது–எனது
காதலின்
அனுபவம்!
••
எத்தனை
இரவுகளைத் தாண்டி
ஒரு–புதருக்குள்
ஞாபகம்–
புதையுண்டு போனபின்பும்!
கன்னிக்காதல் என்பதாலோ
எனக்குள்– வேறொன்று...
ஊற்றெடுப்பதில்லை!
••
கண்ணீரை
விழிகளால்–வடித்து
வேறொன்றுக்காய்
நிர்ப்பந்தித்த இரவுகள் கூட
எனக்குள்–
புயலாயின...!
••
அன்பே–!
எத்தனை இரவுகள்
இறந்து போனாலும்
எனக்குள் நீதான்....!

கவிப்பிரியன்– நேரியகுளம்.

# தேன் கிண்ணம்

## மடலொன்று எழுது...!

உன் எழுத்தையும்
எண்ணத்தையும் பார்க்க,
பல நாள் எனக்கோர்
நப்பாசை...!
–o–
முடிந்த காலத்தில்
மூடிவைத்த நிகழ்வுகளெல்லாம்
அழியாமல் இன்னும் மனசுக்குள்
அழகாக...!
–o–
உயிரோடு
அறிப்போன உறவே!
என் வானத்தில் நீ
அஸ்தமித்தாலும்,
இன்னுமோர வானத்தில்
உதிக்க வேண்டுமென்றே,
படுக்கையறை இரகசியமாக
இன்னும் நம்முறவை
எனக்குள் மட்டும்....!
–o–
நான்
முகத்தை மறக்கவில்லை;
முகவரியையும்
தொலைக்கவில்லை;
முட்கள் குத்திடுமோ என்று
முத்திரையும் ஒட்டவில்லை....!
–o–
நீயாவது
மடலொன்று
எழுது!
–o–

கதிர்– பிட்டியகந்தை.

# காதல் மந்திரம்

என்னவளே!
உன்னை
மறக்க
நினைக்கிறேன்!
ஆனால் நினைவுகள்
உன்னைச்
சுற்றியே வட்டம்
இடுகிறது!
••
உன்னைச்
சந்திப்பதை
தவிர்க்கிறேன்!
ஆனால் மனம்
உன்னை
காண துடிக்கிறது!
••
நீ வருவாய்
என்று எதிர்பார்த்து
ஏங்குகிறேன்!
இதயம்
சுருங்குகிறது!
உன்னை மறக்க
முடியாதபடி
நீ மந்திரமா செய்து
விட்டாய்?
••
காதலில் வீழ்ந்தவர்கள்
அதில் இருந்து
மீளவே முடியாது!
••
காதல் என்ற
மந்திர முடிச்சு
அவிழ்க்க
முடியாதது!
••

சாய்ந்தமருது– பைறோஸ்.

# இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'காண்'

07.03.99 முதல் 13.03.99வரை

**மேடம்:**
எண்ணிய காரியத்தால் வெற்றி. எடுத்த காரியங்கள் சீராக நடைபெறும். சகோதரர் உதவி, குடும்ப மகிழ்ச்சி கிரக நிலைகள் அனுகூலமாக உள்ளதால் நற்சிறப்பு, உடலில் சிற்சில நோய்துன்பம் ஏற்பட வாய்ப்புண்டு.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள், எண் : 7
அதிஷ்ட திகதிகள் : 8, 10.

**இடபம்:**
வியாழனின் 11ம் இடமும் கிரக நிலை அமைப்பும் இவ்வாரம் ஓரளவு நல்ல– தீய சமபலன்களை எதிர்பார்க்கலாம். குடும்ப உறவினர்களின் உதவி கிட்டும், அயலவர்களின் சிக்கல்கள் ஏற்படப் பார்க்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை, எண் : 2
அதிஷ்ட திகதிகள் : 9, 12

**மிதுனம்:**
குடும்ப மகிழ்ச்சி, பிரயாணம் அல்லது இடமாற்றம் நண்பர்களின் உதவியும் கிடைக்கும். சொந்த உறவினர்களுடன் பிரச்சனை, மனக்கஷ்டம் ஏற்படலாம். பண வருவாய் உண்டு.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை, எண் : 6.
அதிஷ்ட திகதிகள் : 9, 11.

**கடகம்:**
குடும்பசுகம். எதிர்பார்த்த விடயமும் உதவியும் நன்னிலை பெறும். குடும்பப் பொறுப்புடன் செயல்பாடு, துணிச்சலான காரிய வெற்றி ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி
அதிஷ்ட நிறம் : றோஸ், இளம் சிவப்பு.
எண் : 5
அதிஷ்ட திகதிகள் : 10, 12.

**சிம்மம்:**
தடைப்பட்ட கருமங்கள் கைகூடும். தூர தேச நல்ல செய்திகள் கிட்டும், பிரயாண ஆரம்பம், குடும்ப மகிழ்ச்சி, ஒருசில செய்திகளால் மனதில் வேதனை ஏற்பட வாய்ப்புண்டு.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இள மஞ்சள், எண் : 9
அதிஷ்ட திகதிகள் : 10, 12

**கன்னி:**
மனவேதனை, உடலில் ரோகம், திடீர் என்று மனமாற்றம், குடும்ப யோசனை, சகோதரர்களின் உதவி, கல்விச் சிறப்பு என்பன ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : மண் நிறம், எண் : 8
அதிஷ்ட திகதிகள் : 10, 13.

**துலாம்:**
எதிர்கால வாழ்வு பற்றிய யோசனை, காதலில் ஈடுபடல், சகோதரர் ஒத்துழைப்பு, கல்வி ஊக்கம், வேலை செய்வதற்கு புதிய முயற்சி, மனத்தைரியம் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, புதன்.
அதிஷ்ட நிறம் : இள நீலம், எண் : 1
அதிஷ்ட திகதிகள் : 12, 9.

**விருட்சிகம்:**
குடும்ப ஒத்துழைப்பு, மனதில் இருந்த கஷ்டங்கள் நீங்கும், திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும், கல்வி, தொழில் என்பன சீராகச் சிறப்புடன் விளங்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : ஊதா, எண் : 3
அதிஷ்ட திகதிகள் : 12, 7

**தனுசு:**
தடைப்பட்ட திருமண முயற்சிகள் கைகூடும். கல்வியில் முன்னேற்றம், நண்பர்களினால் கெடுதி, வீண் சிக்கல்கள் என்பனவும் உறவினர் வழியில் உதவியும் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி
அதிஷ்ட நிறம் : சிவப்பு, எண் : 4
அதிஷ்ட திகதிகள் : 7, 10

**மகரம்:**
உடலில் நோய் துன்பங்கள் ஏற்படல், குடும்பத்தில் தகராறு, பிரயாண அலைச்சல், வேலைப் பளு என்பனவற்றுடன் தொழில் நன்றாக அமையும், வெளிநாடு பயணத்திற்கான எதிர்காலத் திட்டம் உருவாகும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி
அதிஷ்ட நிறம் : நீலம், எண் : 2
அதிஷ்ட திகதிகள் : 11, 9.

**கும்பம்:**
வழக்கில் வெற்றி, குடும்பஸ்தான பலம், மனைவி வழியில் உதவி, பிள்ளைகளின் முன்னேற்றம், நற்தொழில் பலன் என்பதை கிரக நிலை இவ்வாரம் காட்டுகின்றது.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்
அதிஷ்ட நிறம் : வெள்ளை, எண் : 1
அதிஷ்ட திகதிகள் : 10, 9

**மீனம்:**
சனி காலமாகையால் கருமத்தில் சுணக்கமும் மனதில் சங்கடமும் குடும்ப அமைதியின்மையும் குடும்ப உறவினர்களின் உதவியும் நற்தொழில் பேறும் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்
அதிஷ்ட நிறம் : ஒரேஞ் வர்ணம், எண்: 3
அதிஷ்ட திகதிகள் : 9, 12.

# பேனா நண்பர்கள்



பெயர்: ரி. முகுந்தன்.
வயது: 19
முகவரி: 2ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
பொழுது போக்கு: வானொலி.



பெயர்: வி. ரம்யா.
வயது: 20
முகவரி: 47, களனி வீதி, கொழும்பு -02
பொழுது போக்கு: வழமையானவை.

# நில்-கவனி-முன்னேறு

நடு நிலைமை தவறிச் செய்து கொள்ளப்படும் பிரார்த்தனைகள் இறைவன் செவியில் விழுவதில்லை என்பதற்கு கிரிக்கெட் ஆட்டமே ஒரு சான்று.

யார் சிறந்து விளையாடுகிறார்களோ, அவர்கள் ஜெயிக்கிறார்கள்.

ஆனால் பிரார்த்தனை செய்து கொள்கிறவர்கள் "நாம் எப்படியாவது ஜெயித்துவிட வேண்டும்!" என்று வேண்டிக் கொள்கிறார்கள். "உண்டியலில் காசு போடுகிறேன்," "இத்தனை தேங்காய் உடைக்கிறேன்," என்றெல்லாம் கிரிக்கெட் சீஸனில் இந்திய வெற்றிக்காக நேர்ந்து கொள்கிறார்கள் பலர்.

இது பிரார்த்தனையின் நம்பிக்கையைக் குறைக்கும் நடவடிக்கையே தவிர, அதற்குச் சிறப்புத் தருவதாகாது.

வேண்டிக்கொண்ட பிறகும் நமது அணி தோற்றுவிடுகிறதே என்று வைத்துக் கொள்வோம். அப்போது அணியினரின் திறமைக் குறைவைவிட 'இறைவனால் நம்மைக் காப்பாற்ற முடியவில்லை,' என்று இறைவனின் சக்தி மீதுதான் நமக்கு அவநம்பிக்கை ஏற்படுகிறது.

பிரார்த்தனைகள் செய்து கொள்ளலாம்; தப்பில்லை. ஆனால் இரு சார்பான பிரார்த்தனையாக இல்லாமல், எது ஜெயிக்க வேண்டிய தகுதி படைத்திருக்கிறதோ அது வெற்றி பெறட்டும்! மொத்தத்தில் விளையாட்டு சுவாரசியமானதாக அமையட்டும். இயற்கை ஊறுபாடுகளான மழை, முட்டம் இவை வந்து பாதிக்காமல் இருக்கட்டும் என்று பொதுவாக வேண்டிக் கொள்ளட்டும்.

"டெண்டுல்கர் டபிள் செஞ்சுரி போட வேண்டும்!", "ஸ்ரீநாத் இத்தனை விக்கெட் வீழ்த்த வேண்டும்", "எதிர் அணியினர் படு கேவலமாகத் தோற்கவேண்டும்.."

இப்படிப்பட்டப் பிரார்த்தனைகள் அர்த்தமற்றவை.

"நமக்கு வெற்றியோ தோல்வியோ முடிவு எப்படி இருப்பினும் அதனால் நான் பாதிக்கப் படலாகாது. அதற்குரிய மனநிலை தந்து சுவையாக ஆட்டத்தை இரசிக்கும் மனப்பாங்கு தந்தருள்..." என்று பிரார்த்திப்பதே விவேகமானது. அத்தகைய பிரார்த்தனைகளை இறைவன் நிறைவேற்றுவார் என்று நம்புவதில் தப்பில்லை. ஆனால் அவை நடுநிலையானவை என்று எண்ணிக் கொள்வதுதான் தவறு. நடுநிலையற்ற பிரார்த்தனைகளைக் கடவுள் முன் வைப்பது நம் நேரத்தை விணடிப்பதாகும். நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு காயப்படுத்திக் கொள்கிறோம்.

அதைவிடப் பிரார்த்தித்துக் கொள்ளாமலிருப்பது நல்லது.

(நன்றி- பிகரஸ்பதி- இந்தியா)

# இருக்கிறார்களா...?

பஸ்ஸில் ஏறிக் கொண்டிருக்கும் பொழுதே பின்னால் வேறு பஸ் வருகிறதா என்று பார்க்காதவர்கள்-





பொலிஸ்காரரை அருகில் கண்டதும் முகத்தை நல்லவர் போல் வைத்துக் கொள்ளாதவர்கள்.

ஹோட்டலில் சூடாக என்ன இருக்கிறது? என்று கேட்காதவர்கள்.





வங்கியில் பணம் எடுத்ததும் பாஸ் புக்கை புரட்டிப் பார்க்காதவர்கள்.

"தேனீர் குடியுங்கள்" என்று சொன்னதும், "இப்பதான் குடித்தேன்" என்று சொல்லாதவர்கள்.



# ஹலோ டாக்டர்!

**மெலிந்திருப்போர் பருமனாக முடியுமா?**

உடல் மெலிந்திருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. முக்கியமாகப் பரம்பரை, உடல் கோளாறுகள், உணவுச் சத்துப் பற்றாக்குறை, உடற் பயிற்சியின்மை-இப்படி அவற்றை வரிசைப்படுத்தலாம்.

பரம்பரை காரணமாக உடல் மெலிந்திருந்தால் அதற்குச் சிகிச்சை இல்லை. உடல் கோளாறுகள் காரணம் என்றால் அவற்றிற்குச் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் சத்துள்ள உணவு, கொழுப்புச் சத்து நிறைந்த பால், முட்டை, நெய், பாலாடை, இறைச்சி, ஈரல், கேக், ஐஸ்கிறீம் போன்றவற்றை அடிக்கடி உண்ண வேண்டும்.

இறுதியாக- தினந்தோறும் போதிய அளவுக்கு உடற்பயிற்சிகள் செய்யவேண்டும். உடற் பயிற்சிகள் பசியை அதிகப்படுத்தும்; அதிகமாக உணவு உண்பதற்கு அவை வழிவகுக்கும். இதனால் விரைவிலேயே உடல் பருமனாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## தண்ணீர் பருகுவது எப்படி?

நம்மில் பெரும்பாலானோர் போதிய அளவு தண்ணீர் அருந்துவதில்லை. ஒரு சிலர் உணவோடு ஒரு டம்ளர் தண்ணீரைப் பருகிவிட்டு அதுவே போதுமானது என்று இருந்துவிடுகிறார்கள். தண்ணீர் ஏன் குடிக்க வேண்டும் என்பதன் பொருளையே இன்னும் பலர் உணரவில்லை.



சிலர் ஒருவாய் சோறும், ஒருவாய் தண்ணீருமாய் உண வருந்துவதைப் பார்த்திருப்பீர்கள். அது முற்றிலும் தவறான ஒரு பழக்கம். உணவுடன் தண்ணீர் குடிக்கக் கூடாது.

இன்னும் சிலர் கோப்பி, தேனீர் போன்ற பானங்களையே குடித்து பொழுதைப் போக்குகிறார்கள். இவர்களுக்குப் போதிய தண்ணீர் உடம்பில் சேராததால், அவர்களது உடலில் உள்ள திசுக்கள் சரியாகக் கழுவப்படுவதில்லை.

அடிக்கடி ஏற்படும் தாக உணர்வே போதிய வழிகாட்டியாக அமைகிறது. இதை நாம் அதிகமாக அலட்சியப்படுத்துவதால் அதைத் துல்லியமாகக் கண்டறிய முடியாமல் போகிறது. தண்ணீரைத் தாராளமாக அருந்த வேண்டும். ஆனால் ஒரே மூச்சில் அல்ல.

ஒரு தடவைக்கு ஒரு டம்ளர் தண்ணீர் குடித்தாலே போதும். ஒரே நேரத்தில் அதிகமாகத் தண்ணீர் குடித்தால் வயிறு பெரிதாகி நிரந்தரமாகப் பழுதடைந்து விடும். அடிக்கடி இவ்வாறு தண்ணீர் அருந்தும் பழக்கம் இருக்குமானால் அதைத் தவிர்க்க வேண்டும்.

ஒரே தடவையில் குளிர்ந்த தண்ணீரை அதிகமாகக் குடித்தால் அது ஆபத்தை விளைவிக்கும். கடினமான உடலுழைப்புக்குப் பின் களைத்திருக்கும்போது இவ்வாறு குடிப்பதும் ஆபத்தை விளைவிக்கும்.

குளிர்ந்த நீரைப் பருக விரும்பினால், மடக் மடக்கென்று குடிக்காமல் ஒவ்வொரு முறையும் கொஞ் சம் கொஞ்சமாக உறிஞ்சி மெல்ல மெல்ல இறக்க வேண்டும்.

70 பாகை ஃபாரன்ஹைட் சூட்டிலிருக்கும் தண்ணீரை பருகுவது நல்லது. காய்ச்சலில் அவதிப்படுபவர்கள் ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவை தண்ணீர் குடிக்க வேண்டும்.

உப்புத் தண்ணீர் குடிப்பதற்கு ஏற்றதல்ல. நல்ல தண்ணீரே நல்லது. அதிக உப்புள்ள தண்ணீர் உடலுக்குக் கேட்டையே விளைவிக்கும். தூய்மையான நீரையே பருக வேண்டும். 15 நிமிடங்கள் கொதிக்கவைக்கப்பட்டு ஆறிய நீரைப் பருகுவது பாதுகாப்பானது.

உணவுடன் கோப்பி, தேனீர் போன்ற பானங்களையும் அருந்தக்கூடாது. அவை எமது நரம்பு மண்டலத்தைக் கெடுத்துவிடும். உணவில் உள்ள பொருட்கள் செரிக்கப் படுப்படும்போது இவை அதைத் தடுக்கின்றன.

சாதாரணமாக ஒருவேளை உணவிலுள்ள மாப்பொருளை செரிக்க விடாமல் தடுப்பதற்கு அரை கோப்பை தேனீர் போதும்.

## முடி உதிர்வது ஏன்?

பெண்களுக்கு அழகு தரும் அம்சங்களுள் ஒன்று தலைமுடி. நீள நீளமாய் கஷ்டப்பட்டு வளர்த்த தலைமுடி, திடீரென்று கொட்டத் தொடங்கி, பெண்களைக் கண்ணீரைக் கொட்ட வைத்து விடும்.



தினமும் நம் தலையில் இருந்து 50 முதல் 100 முடிகள் வரை உதிரக்கூடும். இதைப் பற்றிக் கவலைப் படத் தேவையில்லை. நம் தலையில் கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் முடிகள் உள்ளதாக விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர். உதிர்ந்த இடம் நிரப்பப்பட்டுக்கொண்டே வரும்.

எண்ணெய்ப் பிசுக்கு அதிகம் சேர்வதாலும், அதிகமான பொடுகு தோன்றுவதாலும், பேன்கள் தொல்லை அதிகம் ஏற்பட்டாலும், முடி உதிரத் தொடங்கும். உடம்பைக் குறைப்பதாகக் கூறிப் பட்டினி கிடக்கும் பெண்களுக்கும் முடி எக்கச்சக்கமாகக் கொட்டும்.

தரமில்லாத சவர்க்காரம் மற்றும் ஷாம்பூக்களை உபயோகித்தால் இளநரையோடு, முடி உதிர்தலும் நடக்கும்.

என்ன காரணத்தால் முடி உதிர்கிறது என்பதை முதலில் ஆராய வேண்டும். உணவிலே சத்துக் குறைவென்றால் அதைச் சுலபமாய் நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

நிறைய பழங்கள், பச்சைக் காய்கறிகள், இறைச்சி, மீன், முட்டை, பால் ஆகியவை ஊட்டம் மிகுந்த உணவு வகைகளில் சில. கீரை வகைகளை நிறைய உண்ன வேண்டும்.

பேன் தொல்லை அதிகம் இருந்து, முடி உதிர்ந்தால் வாரம் மூன்று தடவை முழுகி சாம்பிராணிப்புகை காட்டினால் பேன்கள் ஒழியும். தலையும் மணத்துடன் இருக்கும். முடியும் கொட்டாது.

பொடுகினால் முடி உதிர்ந்தால், ஒரு தேக்கரண்டி வெள்ளை மிளகை அம்மியில் இட்டு மைபோல் அரைக்க வேண்டும். பின் அதை பால் விட்டுக் கலக்கி, பொடுகுள்ள இடங்களில் மயிர்கால்களில் படும்படி அழுந்தத் தேய்த்து, அரை மணி நேரம் ஊறவிட வேண்டும். பிறகு சீயக்காய் வைத்து முழுகி வர பொடுகு நீங்கும். தலைமுடி உதிர்தலும் நிற்கும்.

மஸாஜ் செய்வதன் மூலம் முடி உதிர்வதைத் தடுக்கலாம்.

அடிக்கடி டென்ஷன் ஆகுபவர்கள் அதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். முடி உதிராது.

எப்படிப்பட்ட கூந்தல் இருந்தாலும், இரவில் நன்றாக வாரி விட்டு காற்றோட்டமாகத் தளரவிட்டுப் படுக்க வேண்டும். இதனால் இரத்த ஓட்டம் சீராகத் தூண்டப்பட்டு, முடி ஆரோக்கியமாக இருப்பதுடன், அமைதியாகத் தூங்கவும் முடியும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



**மகளிர் மட்டும் மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FI

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்:........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 13-03-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## கண்ணீரில் கரைந்த இரவுகள் 77

புவனா

டாக்டர் ஹஸ்னட்கானுடன் உறவு முறிந்த பின்னர் டயானாவை மறுபடி தனிமை சூழ்ந்து கொண்டது.

உறவு முறிந்த சோகத்தில் இருந்து மீள்வதற்கு பல நாட்கள் சென்றன.

"நான் சந்தோஷமாக இருப்பது ஆண்டவனுக்கே பிடிக்கவில்லை. எனக்கு சிறகு முளைத்து வானில் பறக்கும் போதெல்லாம், அந்தச் சிறகுகளை வெட்டிப் போட்டுவிடுகிறான்," என்று தன் சிநேகிதிகளிடம் சிரித்தபடி கூறினார் டயானா.



அந்தச் சிரிப்பிற்குள் புதைந்து கிடந்த சோகத்தை அவரால் மறைக்க முடியவில்லை.

அவரது சிநேகிதிகளில் ஒருவரான லீமா என்பவர், "அரச குடும்ப உறவைத் துறந்தது பற்றி இப்போது கவலை கொள்கிறாயா? நீ சந்திக்கும் ஆண்கள் எல்லோருமே சாள்ஸ் போலவே ஏமாற்றுக்காரர்களாக இருக்கிறார்கள். அதனால் சாள்ஸே பரவாயில்லை என்று எப்போதாவது நினைத்ததுண்டா?" என்று கேட்டார்.

அதற்கு டயானா கூறிய பதில்: "இல்லை; ஒருபோதும் நினைத்ததில்லை. அரச குடும்ப வாழ்க்கை மிகக் கொடூரமானது. வேண்டாம் இனி எந்த ஜென்மத்திலும் அப்படி ஒரு வாழ்க்கை வேண்டவே வேண்டாம்!" என்றார்.

அரச குடும்பத்தின் சலிப்பான வாழ்க்கை பற்றியும் தனது சிநேகிதிக்கு விவரித்தார். அதில் சுவாரசியமான பல சங்கதிகள் இருந்தன.

### சந்திப்புகள்

"பிரிட்டிஷ் அரச குடும்பம் என்பது ஏனைய சாதாரண குடும்பங்களைப் போன்றதல்ல; இக்குடும்ப உறுப்பினர்கள்- உறவு முறையுடன் ஒருவரை ஒருவர் சந்திப்பதென்பது அபூர்வம்.

அவ்வாறான சந்திப்புகளும்கூட அரச கடமையுடன் ஒட்டியதாகவே இருக்கும். ஒருவருக்கொருவர் தொடர்புகளும் மிகமிகக் குறைவு. எத்தகைய தொடர்பும் சீட்டு எழுதிக் கொடுத்துத்தான்- சந்திப்பதற்கான காலத்தைக் குறிப்பிட்டுத்தான்- நடைபெறுவதுண்டு.

## அரண்மனைப் புழுக்கம்



பெரும்பாலும் அவரவர்களுடைய பிரத்தியேகக் காரியதரிசிகள் மூலம்தான் ஒருவருடைய கருத்தை மற்றவர் தெரிந்துகொள்ள முடியும்.

விடுமுறை நாட்களில் குடும்ப உறுப்பினர்கள் எங்காவது-ஏற்கனவே திட்டமிடப்பட்ட இடத்தில்- ஒன்று கூடுவர். ஒன்றாக இருந்து கலந்துரையாடி விருந்து உண்பர். அதுவும் விழாக்களாக இருந்தால்- அதற்கும் ஏற்கனவே விதிக்கப்பட்ட முறைகளைத்தான் அனுசரித்துப் போக வேண்டியிருக்கும்.

குடும்பத்தவர் எவரும் தம்மிஷ்டப்படி எக்காரியத்திலும் ஈடுபட சுதந்திரம் கிடையாது. ஏற்கனவே வகுக்கப்பட்ட விதி முறைகளை மீறி எவரும் சுயவிருப்புடன் இயங்க முடியாது. இது மகாராணியாரும் கடைப் பிடிக்க வேண்டிய ஒரு பரம்பரை நியதி.



இளவரசர் சாள்ஸின் அன்றாட வாழ்க்கையும் ஒரு வரையறைக்குள் அடக்கமானது.

அவருடைய உணவு தயாராக இருக்கும். அன்றாடம் அணிய வேண்டிய துணிகள் எடுத்து வைக்கப்பட்டிருக்கும். அவருடைய விளையாட்டுக்களும்-காலம் குறிப்பிட்டு-எப்பெப்போ என்னென்ன விளையாட்டுகளில் அவர் ஈடுபட வேண்டும் என்பதும் ஒருவருடத்துக்கு முன்னாலேயே பட்டியலில் தயாரிக்கப்பட்டிருக்கும்.

அரசு முறை நடவடிக்கைகள்-கடமைகள் ஆகியவையும் திகதிவாரியாக முன்னதாகவே அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கும்.

அவருக்கான உத்தியோக பூர்வ வாசஸ்தலம் பக்கிங்ஹாம் அரண்மனையிலுள்ளது. இங்கிலாந்தின் பல பகுதிகளிலும் அவருக்கு இல்லங்கள் இருக்கின்றன.

பிரிட்டனுக்கு வெளியேயும் அவர் விரும்பிய இடங்களில் மாளிகைகள் உள்ளன.

விடுமுறையைக் களிக்க அவர் எங்கே செல்ல விரும்புகிறாரோ-அதனை முன்கூட்டியே தனது உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து தேர்ந்தெடுத்து விடுவார்.

### தனிக்கப்பல்

வேண்டிய அளவு வகை வகையான குதிரைகள், நாய்கள் சாள்ஸிடம் உள்ளன. அவருடைய கட்டளைக்காகக் காத்திருக்கும் ஹெலிக்கொப்டர்கள், விமானம் ஆகியனவற்றுடன் அவருடைய சொந்தப் பொறுப்பில் 'ரோயல் யாட்' என்ற - சகல வசதிகளுடன் கூடிய அரச கப்பலும் இருக்கின்றன. ஏராளமான கார்களும் அவரிடம் இருக்கின்றன.

சாள்ஸ் காலையில் எத்தனை மணிக்கு எழுந்திருக்கவேண்டும்; என்னென்ன நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்பன போன்ற சகல கடமைகளும் ஆறு மாதங்களுக்கு முன்பே 'டயறி'- நாட்குறிப்பில் எழுதப்பட்டு-எப்போதும் அவர் பார்வையில் படக்கூடியதாக வைக்கப்பட்டிருக்கும். "இது ஒரு துரதிஷ்டமான வாழ்க்கை!" என்று அவர் சில தடவைகளில் சலித்துக் கொண்டதுமுண்டு.

சாள்ஸ் மூன்று வயதுப் பாலகனாக இருந்தபோது-பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மகாராணியாக சாள்ஸின் தாயார் மகுடம் ஏற்றார். அப்போதிருந்து சாள்ஸின் தலைவிதி இவ்வாறாக அமைந்துவிட்டது.

சாள்ஸை சுற்றி-பழைய சம்பிரதாயங்களைக் கடைப்பிடிக்கும்- பெரும்பாலும் வயதானவர்களே அதிகம் காணப்பட்டனர்.

நவீன யுகத்துக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ள அவர் ஆசைப்பட்ட போதிலும், அதற்கு அவரால் முடியவில்லை. தன்னுடன் பழகும் நவீன உலக இளைஞர்களைப்போல் தானும் ஓரளவு சுதந்திரமாகத் திரிய முடியவில்லையே என்ற ஆதங்கம் அவரிடம் இருக்கவே செய்தது.

சாதாரண வாழ்க்கையின் கஷ்டங்களை சாள்ஸ் அனுபவித்திருக்கவில்லை. பொருட்கள் வாங்க கடைகளின் முன் கியூவிலோ கூட்டங்களில் நெரிபட்டோ சிறிது அனுபவமும் அவருக்கு இல்லை. பஸ் பயணத்தில் அல்லது ரயில் பயணத்தில் மக்கள் படும் அவஸ்தை பற்றி எதுவும் அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

இளவரசர் வேளைக்கு வேளை குணாதிசயங்களைத் திடீரென மாற்றிக்கொள்வார். முற்கோபமும் அதிகம். தனது பணியாளர்கள் ஒரு சிறு தவறு விட்டாலும் பொறுக்கமாட்டார்.

ஆனால் வேறு சில சந்தர்ப்பங்களில் ஏதாவது தவறு நடந்தாலும், அதனை நகைச்சுவையுடன் ஏற்று ஏனையோரையும் சிரிப்பிலாழ்த்துவார்.

நேரத்துக்கு நேரம் அவருடைய மனத்தன்மை எப்படி இருக்கும் என்பதை அவருடன் நெருங்கிப் பழகுபவர்களும் சில நண்பர்களும் தெரிந்து வைத்திருந்தனர். இருந்த போதிலும் சிலர் காலம் தெரியாமல் ஏதாவது செய்து சங்கடப்பட்டுள்ளனர்.

சாள்ஸை எப்போதும் சீண்டி வேடிக்கை பார்ப்பவர்கள் அவருடைய இரு புதல்வர்களும் தான். அவர்கள் விடும் கேலிகளையும், கிண்டல்களையும் மகிழ்ச்சியுடன் சாள்ஸ் ஏற்றுக் கொள்வார்."

டயானா இவற்றை விபரித்தபோது அரச குடும்ப வாழ்க்கையில் அவருக்கு வெறுப்பும், சலிப்பும் ஏற்பட்டதில் ஆச்சரியம் இல்லை என்று தானும் நினைத்ததாக லீமா கூறுகிறார்.

இக்கால கட்டத்தில்தான் டயானா டோடி ;பயட்டை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. டயானா வாழ்க்கையில் அடுத்த கட்டம் ஆரம்பமானது.

**(அடுத்த வாரமும் வரும்)**


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**புத்தளம் வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் ☞ **திருமதி தி. பாக்கியலட்சுமி,**
இல.30, சேவிஸ் வீதி,
புத்தளம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்





பஞ்சத்தும் நோய்களிலும்
பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத்தும் கண்ணாற் கண்டும்! –
கிளியே!
சோம்பிக் கிடப்பாரடீ!
– சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# செக்கு போட்ட குட்டி

புலவர் ஒருவர் தம்மிடம் இருந்த குதிரைக் குட்டி ஒன்றை வறுமை காரணமாக விற்பதற்காக அடுத்த ஊருக்குக் கொண்டு சென்றார். நீண்ட தூரம் நடந்து வந்ததால், அடுத்த ஊரை அடைந்ததும் குதிரைக்குட்டியை அருகில் இருந்த செக்கில் கட்டி விட்டுத் தூங்கிப் போனார்.

சிறிது நேரத்தின்பின் கண் விழித்ததும் குதிரைக் குட்டியைப் பார்த்தார். செக்கில் கட்டியிருந்த குதிரைக் குட்டிக்கு ஒருவர் புல்லுப் போட்டுக் கொண்டிருந்தார். அவரின் அருகில் சென்ற புலவர்,

"ஐயா! பசியோடிருக்கும் என் குதிரைக்குட்டிக்கு புல்லுப் போட்டதற்கு மிகவும் நன்றி!" என்று கூறினார்.

இதைக் கேட்டதும்," என்னது! உமது குதிரைக்குட்டியா? இது என்னுடையது. நான் இந்த ஊர் வியாபாரி. என் செக்கு இந்தக் குதிரைக் குட்டியைப் போட்டது," என்றான்.

இந்த வியாபாரியுடன் வாக்குவாதப் பட்டால் ஒரு பயனும் இல்லை என்று நினைத்த புலவர், நேராக அந்த ஊர்த் தலைவரிடம் வியாபாரியையும் கூட்டிக் கொண்டுசென்றார். அங்கு அவரிடம் நடந்தவற்றைக் கூறினார்.

இவற்றைக் கேட்ட ஊர்த் தலைவர் புலவரிடமும், வியாபாரியிடம் தீர்ப்புக்கூறும் ஆலமரத்தடிக்குச் செல்லும்படியும், தான் பின்னால் வருவதாகவும் கூறினார்.

உடனே புலவரும் வியாபாரியும் ஆலமரத்தடிக்குச் சென்றார்கள். இவர்கள் இருவரையும் கண்ட ஊர் மக்களும் ஆலமரத் தடியில் கூடிவிட்டனர்.



ஆனால் வெகுநேரமாகியும் தீர்ப்புக் கூறும் தலைவர் வரவில்லை. நீண்ட நேரத்திற்குப் பின் வந்தார். தலைவரைக் கண்ட ஊர் மக்கள் பதறியடித்தபடி,

"ஏன் தலைவரே தாமதமாகியது?" என்று கேட்டார்கள்.

அதற்குத் தலைவர் சிரித்துக் கொண்டே,

"வரும் வழியில் குளம் ஒன்று தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. அதை அணைத்து விட்டு வர நேரமாகிவிட்டது," என்றார்.


இதைக் கேட்ட ஊர் மக்கள்,

"எங்காவது குளத்தில் தீப்பிடிக்குமா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டனர்.

"எம் ஊரில் செக்கு குட்டி போடும் போது, குளத்தில் தீப்பிடிக்காதா?" என்று கேட்டார் ஊர்த் தலைவர். பின் வியாபாரி, அயலூர் புலவரை ஏமாற்றியதை ஊர் மக்களுக்கு விளக்கமாகக் கூறினார்.

இதனை அடுத்து குதிரைக் குட்டியை வரவழைத்து, ஏழைப் புலவரிடம் கொடுத்து, புலவரை ஏமாற்றியதற்காக வியாபாரியிடம் நூறு வெள்ளிக் காசுகளை வாங்கி புலவரிடம் கொடுத்தார் ஊர்த்தலைவர்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.03.1999.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 287
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 285

பரிசுக்குரியவர்:
சுந்தரமணி கமலினி,
பாரதி தமிழ் மஹா வித்தியாலயம், வத்தேகம.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஆர். சுரதிஸ், க/ கலாபொக்க த.வி, மடுல்கெல. | பாத்திமா மின்னா உசைன், ஆமினா தேசிய கல்லூரி, மாத்தளை. |
| மொஹமட் றம்ஸி, க/ஸ்ரீ சுமங்கல கல்லூரி, கண்டி. | மா. பிரசன்னா, மட்/ கிரான் ம.வி, கிரான். |
| ம. ஹரிபிரசாத், விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13. | பாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்‌போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. |
| சந்திரமோகன் கிஷாந், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை. | எஸ். மாதங்கி, இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி, கொழும்பு-4. |
| செல்வன் ஜெ. பிரணவன், தெகிவளை தமிழ் வித்தியாலயம், தெகிவளை. | ச. ரேகா, கல்வியற் கல்லூரி, வவுனியா. |

# விடுகதைகளும் விடைகளும்

1. கழுத்திருக்கும் தலையிருக்காது.
அது என்ன?
2. கண்டதைப் பதிக்கும், பதித்ததைக் கொடுக்கும்.
அது என்ன?
3. நாலு கால் ராஜா, நாளெல்லாம் பாதுகாப்பான்.
யார் அவன்?
4. தொட்டுப் பார்க்கலாம், எட்டிப் பார்க்க முடியாது.
அது என்ன?
5. அவள் என்னைத் தொடுவாள், அவளை நான் தொடமுடியாது.
யார் அவள்?
6. முதுகெல்லாம் கூனல், வயிறெல்லாம் பல்.
அது என்ன?
7. வெள்ளை ராஜாவுக்கு கறுப்பு உடை.
அது என்ன?
8. தேடி வந்தவன் ஓடிப் போகிறான்.
யார் அவன்?
9. மாமா போட்ட பந்தல் மறுபடி பிரிச்சா கந்தல்
அது என்ன?
10. இருந்த இடத்தில் இருந்தே ஆடும், ஓடும்.
அது என்ன?

### விடைகள்


1. போத்தல் 2. கமெரா
3. வீடு 4. முதுகு
5. காற்று 6. அரிவாள்
7. உழுந்து 8. கடல் அலை
9. சிலந்தி வலை 10. ஊஞ்சல்

தொகுப்பு: ஏ. அகல்யா.

# குட்டிச் செய்திகள்

❖ வாத்து தூங்கிக்கொண்டே நீரில் நீந்தக் கூடியது.
❖ அனெப்லஸ் என்ற மீனுக்கு 4 கண்கள் உள்ளன.
❖ சிப்பியில் முத்து விளைவதற்கு 15 வருடங்கள் பிடிக்கும்.
❖ பாம்பைப் போல் பல்லியும் செட்டை உரிக்கும்.
❖ 'கிளிப்ஸ் பிரிங்கர்' என்ற மான் 25 அடி உயரம் எம்பிக் குதிக்கும்.
❖ ஒட்டகத்தின் பால் கறந்ததும் கெட்டியாகி விடும்.
❖ சிங்கப்பூரில் வசிக்கும் மக்களில் 76 சதவீதம் பேர் சீனர்கள்.
❖ யானை 40 வருடம் வரை வளர்ச்சியடையும்.
❖ உலகில் சிறந்த பருத்தி எகிப்து நாட்டில் விளைகிறது.
★ சவுதி அரேபியாவில் ஆறுகளே கிடையாது.


# அதிசயம் – ஆனால் உண்மை!



சீனாவில் 18ம் நூற்றாண்டில் துணிமணிகள் வாங்க பட்டுத்துணியாலான நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. இந்த நாணயத்தில் எத்தனை மடிப்புக்கள் இருக்கிறதோ அத்தனை பட்டுத்துணிகள் வாங்கலாம்.



இங்கிலாந்தில் உள்ள கென்ற் மாநிலத்தில் இருக்கும் நோல் அரண்மனையில் உள்ள 12 முற்றங்கள் மாதங்களையும், 52 படிக்கட்டுகள் வருடத்தில் உள்ள வாரங்களையும், 365 ஜன்னல்கள் வருடத்தில் உள்ள நாட்களையும் குறிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.



டென்மார்க் நாட்டில் உள்ள கோபன்ஹேகன் நகரில் 1815 முதல் 1865 வரை பயன்படுத்தப்பட்ட தபால் கோச்சு வண்டியின் அமைப்பு பலூன் போன்று இருந்தது.

# உலோகக் கவசம்



எகிப்தியர்களைப் போலவே, இறந்தவர்கள் மீண்டும் உயிர்த்தெழுவார்கள் என்ற நம்பிக்கை சீனர்களிடையே இருந்தது. எகிப்தியர்கள் இறந்தவர்களின் உடலைப் பதப்படுத்தி கெட்டுப்போகாதவாறு புதைத்தனர். இதை அவர்கள் 'மம்மி' என்று கூறுவர். இதேபோல் சீனர்கள் இறந்தவர்களின் உடலைச் சுற்றி உலோகத்தால் கவசம் செய்து புதைத்தனர்.

சீனாவை ஆண்ட மன்னர்களில் முக்கியமானவர் லியூ ஷெங். இவர் இறந்தபோது, அவர் பயன்படுத்திய பொருட்களோடு, பெரும்புதையலையும் கல்லறையில் வைத்தனர். அதுமட்டுமன்றி உலோகத் தகட்டால் கூடுபோல் அமைத்து, தங்க இழைகளால் பிணைத்து, அதனுள் அவரது உடலை வைத்துப் புதைத்தனர்.

அவரது மனைவி இறந்தபோதும் அவருக்கும் இதே போல கூடு அமைத்து, மன்னருக்கு அருகிலேயே புதைத்தனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு- 1968ல் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், இவர்களது கல்லறையைத் தோண்டினர். புதைக்கப்பட்ட பொருட்களையும், புதையலையும், மன்னர் மற்றும் அவரது மனைவியை வைத்துக் கட்டிய கூடுகளையும் எடுத்தனர். அவற்றை சீனாவில் உள்ள அருங்காட்சியகத்தில் வைத்துள்ளனர்.

# ஏன் தெரியுமா?

உலகில் பாம்புகளே இல்லாத நாடு எது என்று கேட்டால், அயர்லாந்து என்று எல்லாரும் சொல்வார்கள். சரி, இங்கு பாம்புகள் இல்லாததற்கு என்ன காரணம் என்று தெரியுமா?



ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அயர்லாந்து நாட்டில் ஏற்பட்ட பனியுகம், அயர்லாந்தை ஏனைய ஐரோப்பிய நாடுகளின் தட்பவெட்ப நிலையில் இருந்து முற்றிலுமாக மாறுபடச் செய்து விட்டது.

அந்தத் தட்ப வெப்ப நிலை பாம்புகளின் வாழும் சூழ்நிலைக்கு ஏற்றதாக இருக்கவில்லை. அதனால் அப்போது அங்கிருந்த பாம்புகள் அழிந்து போயுள்ளன, என்று இலண்டனில் உள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தினர் அதிகாரபூர்வமாக விளக்கம் கூறியுள்ளனர்.

## ஒற்றுமை

ஜப்பான், ஸ்பெயின், ஹொங்கொங், சுவிற்ஸர்லாந்து, கோஸ்டாரிக்கா, அன்டோரா, சுவீடன், கிறீஸ், இஸ்ரேல், ஐஸ்லாந்து ஆகிய இந்த 10 நாடுகளுக்கும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. என்ன தெரியுமா?


உலகில் நீண்ட ஆயுளுடன் உயிர் வாழ்பவர்கள் இந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள்தான்.

# விசித்திர உணவுப் பழக்கம்



நட்சத்திர மீன், சிப்பிகளில் உள்ள சதைப்பற்றான பகுதியை விரும்பி உண்ணும் அதேவேளை இது சிப்பியை மிக நூதனமான முறையில் உடைத்துச் சாப்பிடுகிறது. சிப்பியின் அருகே நட்சத்திர மீன் நகர்ந்து சென்று, தனது நீண்ட தந்துகி கைகளால் பிடித்து அப்படியே சிப்பியைத் தன் வயிற்றுப் பகுதிக்குக் கொண்டு வரும்.

பின்பு அப்படியே சிப்பியின் சதைப் பகுதியை உறிஞ்சிச் சாப்பிட்டுவிடும். முற்றாக உண்டபின் வெறும் சிப்பியை விட்டுவிடும்.



'அர்ச்சர் ஃபிஷ்' எனப்படும் மீன், நீர் மட்டத்திற்கு மேலே வந்து பூச்சிகளைப் பிடித்துச் சாப்பிடும். இது பூச்சிகள் பறக்கும்போது தன் வாயில் இருந்து ஒரு கெட்டியான திரவத்தை பாய்ச்சியடித்து பூச்சிகளைக் கீழே விழச் செய்து, இம்மீன் தன் இரையைப் பிடிக்கிறது.



'பிராசியோடா' என்பதும் ஒரு கடல் உயிரினம்தான். இது 'பிராசியா' எனப்படும் தனது கைகளால் தண்ணீரில் அலைகளை ஏற்படுத்தி, தன் வாய்ப்பகுதி இருக்கும் இடத்திற்கருகே இரையைக் கொண்டு வந்து விடும். இந்தப் பிராணி இப்படி நீரலையை உண்டுபண்ணும் போதும் அது வெளியேற்றும் கழிவுகளும் வெளியேறுகின்றன.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

**முன்கதை சுருக்கம்**

**பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான். சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார். நித்தியன் பணிவதாக நடிக்கிறான். இந்நிலையில் சாந்தா காணாமல் போகிறாள்.**

**இனி......**

**மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்**

# டிசம்பர் பௌர்ணமி

## 19



**கிரைம் சக்கரவர்த்தி**

## ராஜேஸ்குமார்

**வி**ஜயராகவன் கோபத்தில் இரைந்து கொண்டிருக்க விசாலி இறுக்க மான முகத்தோடு அவருக்குப் பக்கத்தில் வந்து நின்றாள்.

"அப்பா..."

அவர் நிமிர்ந்தார்.

"கொஞ்ச நேரம் பேசாம இருக்கீங் களா?" கையமர்த்தியவள் தொடர்ந்தாள்: "நீங்க அங்கிள் மேல கோபப்படறதுல அர்த்தமே இல்லேப்பா... இப்போதைய பிரச்சனை என்னோட கல்யாணம் இல்லை. சாந்தா எங்கே... சாந்தாவுக்கு யாரால பிரச்சனை ஏற்பட்டிருக்குன்னு யோசிக்க வேண்டியது முக்கியம்...!"

"அதைப் பத்தி எனக்கு எந்த அக்கறையும் கிடையாது. இது எனக்கு எவ்வளவு பெரிய அவமானம் தெரியுமா?"

"அப்பா ப்ளீஸ்... அங்கிள் ஏற்கனவே டென்ஷன்ல இருக்கார். நீங்க வேற ஏதேதோ பேசி டார்ச்சர் பண்ணாதீங்க. உங்களை இங்கே வரவழைச்சது அங்கி ளைத் திட்டி பிரச்சனையைப் பெரிது படுத்தறதுக்காக அல்ல. அவருக்கு ஏதாவது ஒரு வகையில ஆறுதல் சொல்லத்தான்... இனிமே எனக்கும் நித்தியனுக்கும் கல்யாணம்ங்கிற பேச்சுக்கே இடம் கிடையாது!"

விஜயராகவன் வியப்பாய் அவளைப் பார்த்தார்.

"அம்மா விசாலி! நீயா இப்படி பேசிட்டிருக்கே..? நித்தியனை கல்யாணம் பண்ணிக்க நீ எவ்வளவு ஆர்வமாயிருந் தேன்னு எனக்குத்தானே தெரியும்! தூங்கற நேரத்தைத் தவிர, மத்த எல்லா நேரமும் நீ நித்தியனைப் பத்தித்தானே பேசிட்டிருப்பே. நான்கூட, ஒரு நாள் விளையாட்டுக்கு நித்தியன் உன்னை கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிட்டா என்னம்மா பண்ணு வேன்னு கேட்டதுக்கு- நீ என்ன பதில் சொன்ன தெரியுமா?"

"என்ன சொன்னேன்?"

"அவர் என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லமாட் டார். அப்படி ஒரு வேளை அவர் பதில் சொல்லிட்டா, ஹாலில் மாட்டியிருக்கிற என்னோட போட்டோவுக்கு தினசரி ஒரு ரோஜா மாலையைப் போட வேண்டியது தான்னு- இந்த வார்த்தைகளை நீ சொல்லலை."

விசாலி சிரித்தாள் மெல்ல... "அய்யோ அப்பா! அதெல்லாம் ஒரு எமோஷனில் சொன்னது! இப்ப! அதை நினைச்சுப் பார்த்தா சைல்டிஷ்ஷா இருக்கு. என்னை விரும்பாத ஒருவரை நான் எப்படி கல்யாணம் பண்ணிக்கிட்டு குடும்பத்தை நடத்த முடியும்?"

"அம்மா! நீ இப்படிப் பேசறது எனக்கு ஆச்சரியமா இருக்கு. இப்ப பேசிட்டிருக்கிறது நீதானான்னு பிரமிப்பா வும் இருக்கு."

"அப்பா! சாந்தாங்கிற பெண்ணை நித்தியன் காதலிக்கிறதா எந்த நிமிஷம் எனக்கு தெரிஞ்சதோ, அதே நிமிஷம் என் னோட மனசு ஒரு எதார்த்தமான நிலை மைக்கு வந்திடுச்சு. இப்படி ஒரு கசப்பான முடிவுக்கு நான் கொஞ்சம் கூட வருத்தப் படலை. இப்போதைக்கு என்னோட வருத்த மெல்லாம் சாந்தா எங்கே? சாந்தாவுக்கு என்னாச்சுங்கிறதுதான்?"

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் திக் பிரமை பிடித்த மாதிரி உட்கார்ந்திருந்த ருத்ரமூர்த்தி மெல்ல எழுந்து விஜயராகவ னிடம் வந்தார்.

"மிஸ்டர் விஜயராகவன் இந்தக் கல்யாண விவகாரத்துல என்னோட மகனே எனக்கு எதிரியா மாறுவான்னு நான் கொஞ்சம்கூட நினைச்சுப் பார்க்கலை. சாந்தாங்கிற அந்தப் பெண்ணை நான் கொலை பண்ணிட்டதா பொலிஸ்ல என் மேலயே கம்ப்ளைன்ட் கொடுத்திருக்கான். அந்தப் பெண்ணை டெலிஃபோன்ல நான் மிரட்டினது உண்மை. மிரட்டினா நித்தியனை விட்டு விலகி அவ போயிடுவான்னு நினைச்சேன்."

விஜயராகவன் அவருக்கு எந்தப் பதிலை யும் சொல்லாமல் விசாலியைப் பார்த்தார்.

"புறப்படம்மா... இனிமே இந்த வீட்ல ஒரு நிமிஷம்கூட நாம நின்னு பேசிட்டிருக்கக் கூடாது. ம்... கிளம்பு"

"அப்பா! அங்கிளுக்கு ஒரு பிரச்ச னைன்னா அது நமக்கு வந்த மாதிரிதான். பொலிஸ் வேற இதுல தலையை நீட்டிட் டாங்க. நாம இருந்து பார்த்து பிரச்சனையை சால்வ் பண்ணிட்டு போறதுதான் சரி."

"விசாலி! உனக்கு ஆசை காட்டி மோசம் பண்ணின இவங்க முகத்தை நீ பார்க்கிறதே பாவம்மா... போய் கார்ல ஏறு..!"

"அப்பா! நான் என்ன சொல்றேன்னா..."

"நீ ஒண்ணையும் சொல்லிட்டிருக் காதே...! ம்... கிளம்பு!" விஜயராவன் ரௌத்ர மாய் முகம் சிவக்க கத்திவிட்டு, போர்டி கோவில் நிறுத்தியிருந்த காரை நோக்கிப் போக விசாலி ருத்ரமூர்த்தியைப் பார்த்தாள்.

"அங்கிள்..."

"உங்கப்பாவோட கோபம் நியாய மானதுதாம்மா! அவருக்கு நான் நிறைய ஃபால்ஸ் ஹோப் கொடுத்துட்டேன். நீ இப்ப அவரோட கிளம்பிப் போம்மா... எனக்கு வந்திருக்கிற இந்தப் பிரச்சனையை நானே சால்வ் பண்ணிக்கிறேன்."

விஜயராகவன் போர்ட்டிக்கோவிலிருந்து கத்தினார்.

"விசாலி! நீ இன்னுமா வரலை?" சொல்லி விட்டு கார் ஹாரனை நீளமாய் அடித்தார்.

"நீ போம்மா..." கண்களில் நீரோடு ருத்ரமூர்த்தி தலையசைக்க விசாலி கனத்த இருதயத்தோடு போர்ட்டிக்கோவில் நின்றிருந்த காரை நோக்கிப்போனாள்.

டிரைவிங் சீட்டை ஆக்ரமித்திருந்த விஜயராகவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்ததும் கார் கிளம்பியது. பங்களாவைக் கடந்து ரோட்டுக்கு வந்ததும் மகளிடம் திரும்பினார்.

"ஏம்மா! நித்தியனை இழந்ததுல உனக் குக் கொஞ்சம்கூட வருத்தமே இல்லையா?"

"இல்லை!"

"நிஜமாத்தான் சொல்றியாம்மா?"

விசாலி புன்னகைத்தாள். "ஏதாவது ஒரு கோயில் வாசல்ல காரை நிறுத்துங் கப்பா. வேணும்னா சத்தியம் பண்றேன்."

"உனக்குள்ளே ஏற்பட்டிருக்கிற இந்த மனமாற்றத்தை என்னால ஜீரணம் பண்ணிக்க முடியலேம்மா. கடந்த ஒரு வருஷ காலமா உன்னோட பேச்சு மூச்சு எல்லாமே நித்தியனைப் பத்தியதாகத்தானே இருந்தது!"

"அப்பா! நீங்க என்னோட உணர்ச்சி களை மட்டுமே பார்க்கறீங்க... இந்த உலகத்துல இருக்கிற பாவங்களிலேயே மிகப் பெரிய பாவம் எது தெரியுமாப்பா? காதலர் களைப் பிரிக்கிறதுதான்! நித்தியனும் சாந்தா வும் ஒருத்தரையொருத்தர் காதலிக்கிறாங்க. அந்தக் காதலை நிறைவேத்தி வைக்க வேண்டியது நம்ம கடமையில்லையா?"

"சரி! அந்த சாந்தா இப்ப என்ன ஆனா?"

"தெரியலை... நித்தியன் அவரோட அப்பா மேல சந்தேகப்பட்டு பொலிஸ்ல கம்ப்ளைண்டும் பண்ணிட்டார். எனக்கென் னமோ ருத்ரமூர்த்தி அங்கிளாலே சாந்தா வுக்கு எந்த ஒரு ஆபத்தும் ஏற்பட்டிருக் காதுன்னு என்னோட மனசுக்குப் படுது."

விசாலி இப்படி சொன்னதும், இருதயத் துக்குள் ஒரு முள் தைத்த மாதிரி நிமிர்ந்தார் விஜய ராகவன். அந்த வலியைக் காட்டிக் கொள்ளாமல் கேட் டார்: "வேற யாரையாவது நீ சந்தேகப்படறியாம்மா?"

"யாரை சந்தேகப்படற துன்னே தெரியலை! பட் பொலிஸ் வேண்டியதைப் பண்ணிடுவாங்க."

விசாலி தீர்மானமான குரலில் சொல்ல, விஜயராக வன் வியர்த்துக் கொண்டே காரை உச்ச பட்ச வேகத்தில் விரட்டினார்.

அடி வயிற்றில் அமிலம் சுரந்தது, அவஸ்தையாய்.

மனசுக்குள் எண்ணம் ஓடியது.

'இன்றைக்கு இராத்தி ரியே சாமித்துரையைப் பார்த்து ஜாக்கிரதையாய் இருக்கச் சொல்ல வேண் டும்...'

***

**மு**குந்தனின் வீடு.

இன்ஸ்பெக்டரின் தலைமையில் ஒரு ஃபாரான்சிக் குழு வீட்டின் எல்லா அறைகளி லும் நுழைந்து பௌடர் ஸ்பிரே செய்து ஃபிங்கர் பிரின்ட்ஸை கலெக்ட் செய்து கொண்டிருந்தார்கள். நித்தியனும், முகுந்த னும் ஹால் ஓரமாய் நின்று இறுகிப்போன முகங்களோடு பொலிஸாரின் ஃபார்மா லிட்டீஸ்களை மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு ஃபாரன்ஸிக் அதிகாரியோடு பேசிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் திரும்பிப் பார்த்து நித்தியனையும் முகுந்தனையும் கையசைத்துக் கூப்பிட்டார்.

இருவரும் போனார்கள்.

"என்ன ஸார்?"

நித்தியன் வினவ இன்ஸ்பெக்டர் கேட்டார்,

"சாந்தாவோட ப்ளட் குரூப் என்ன?"

நித்தியன் யோசித்துவிட்டு தலை யாட்டினான்.

"தெரியலையே சார்..."

"சாந்தா தங்கியிருந்த ஹாஸ்டல்ல கேட்டா தெரியுமா?"

"கேட்டுப் பார்க்கலாம் சார்..."

"மிஸ்டர் நித்தியன்! இங்கே தரையில் பட்டிருந்த இரத்தக் கறைகளை அம்மோனியாவில் டைலூட் செய்து பார்த்தபோது ரெண்டு வகை குரூப் இரத்தம் கிடைச்சிருக்கு. ஒரு க்ரூப் பி. பாஸிட்டிவ். இன்னொரு க்ரூப் ஓ. பாஸிட்டிவ். அந்த ரெண்டு க்ரூப்லே எது சாந்தாவோட க்ரூப்ன்னு தெரியணும். அது தெரிஞ்சாத்தான் குற்றவாளியை ட்ரேஸ் பண்ண முடியும். சாந்தா தங்கியி ருந்த ஹாஸ்டலுக்கு ஃபோன் பண்ணி கேட்டுப் பாருங்களேன்."

தலையசைத்த நித்தியன் டெலி ஃபோனை நோக்கிப் போனான். ரிஸீவரைத் தொட்டு எடுப்பதற்கு முன் அது அடித்தது.

ரிசீவரை எடுத்து "ஹலோ" என்று குரல் கொடுக்க மறுமுனையில் பொலிஸ் கன்ட்ரோல் ரூமிலிருந்து பேசினார்கள்.

"அது முகுந்தன் வீடா?"

"எஸ்."

"இன்ஸ்பெக்டர் குமரன் அங்கே தானே இருக்கிறார்?"

"ஆமாம்..."

"அவரோடு பேச வேண்டும்..."

நித்தியன் இன்ஸ்பெக்டருக்கு குரல் கொடுத்து கூப்பிட்டு ரிசீவரை அவர் கையில் கொடுத்தான். அவர் வாங்கி "எஸ். குமரன் ஹியர்"

"ஸார் திஸ் ஈஸ் கண்ட்ரோல் ரூம்..."

"சொல்லுங்கள்."

"ஆவடி அருகே உள்ள ஒரு எருக் கிடங்குக்கு பக்கத்தில் ஒரு பெண்ணின் உடல் கிடைத்திருக்கிறது. காணாமல் போன சாந்தா, என்கிற பெண்ணின் அடையாளங்களோடு அந்தப் பெண் ணின் உடல் ஒத்துப் போகிறது. உடனே ஸ்பாட்டுக்குப் போய் அது சாந்தாதானா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்..."

"இதோ புறப்பட்டுட்டேன்."

ரிசீவரை சாத்திவிட்டு நித்தியனை ஏறிட்டார் இன்ஸ்பெக்டர் குமரன்.

(பௌர்ணமி தொடரும்)



# சதாம் உசேன்

**அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை**

## 31



**ராஜையா**

**ப**லத்த எதிர்ப்பு இல்லாமல் சரசரவென முன்னேறியது...

இதோ... வந்து விட்டது குவைத் மன்னர் அரண்மனை...!

ஈராக் வீரர்கள் அரண்மனையைச் சுற்றி வளைத்தனர்...

பெரிய தடை எதுவுமின்றி சுலபமாய் உள்ளே புகுந்தனர்...

அரண்மனை ஏறக்குறைய காலியாக இருந்தது.

ஈராக் வீரர்கள் உள்ளே நுழைவதற்கு ஆறு நிமிடங்களுக்கு முன்னர்தான் உயிருக்குப் பயந்த குவைத் மன்னரும், அவரது பரிவாரத்தின் பெரும்பகுதியினரும் அவசர அவசரமாய் விமானத்தில் கிளம்பி, பக்கத்திலுள்ள சவுதி அரேபியாவில் தஞ்சம் புகுந்துவிட்டனர்.

எல்லாம் ஐந்து மணி நேரத்திற்குள் மளமளவென நடந்து முடிந்துவிட்டது!

1990 ஆகஸ்ட் 2-ந் தேதி சூரியன் உதித்தபோது, குவைத் ஈராக் இராணுவத் தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

இதற்கு முதல்நாள் ஈராக்குக்கும் குவைத் துக்கும் இடையே சமரசப் பேச்சு நடந்தது. குவைத் பிடிவாதத்துடன் நடந்து கொண்ட தால் அந்தப் பேச்சுவார்த்தை முறிந்தது. இன்னும் பொறுப்பதில்லை என்று பொங்கிய சதாம் அன்றிரவே இராணுவ நடவடிக்கை எடுத்துவிட்டார்!

இதை ஒரு 'பிரஷ்ஷர் பாலிடிக்'ஸாகவே சதாம் தொடங்கினார். குவைத்தை பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ண மின்றியே இதைச் செய்தார்.

அதனால்தான், குவைத்தைப் பிடித்துக் கொண்ட மறுநாள், "குவைத் மன்னரை சந்தித் துப் பேசத் தயார்" என்று சதாம் அறிவித்தார்.

ஆனால், அமெரிக்க அவசரப்பட்டது. ஏற்கனவே ஈராக்குக்கு எதிராக பிரசார யுத்தமும், பொருளாதார யுத்தமும் நடத்தி வந்த அமெரிக்கா இப்போது இராணுவ யுத்தம் தொடங்க நேரம் வந்து விட்டதாக துள்ளிக் குதித்தது. குவைத்தை மீட்பதாக போர் பண் ணிக் கொண்டு இராணுவரீதியில் தலையிட்டு, சதாம் ஆட்சியைத் தூக்கி எறிய இதுதான் தருணம் என்று ஆர்ப்பரித்தது.

"குவைத்தை மீட்க அமெரிக்க இராணுவம் சவூதி அரேபியாவுக்கு விரைகிறது!" என்று அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் அறிவித்தார்.

இதைக் கேட்டு சதாம் இன்னும் எரிச்ச லடைந்தார். வளைகுடாவில் சாதாரணமாக அமெரிக்க போர்க்கப்பல்கள் வந்து நிற்பதற்கே அனுமதி தரக்கூடாது என்று கோரி வந்த சதாம், இப்போது தன்னோடு சண்டைக்கு வருகிறது அமெரிக்க இராணுவம் என்றவுடன் கொதித்தார்...

'வா... உலகச் சண்டியரே! நீயும் நானும் திரைக்குப் பின்னால் நடத்திவந்த யுத்தம் இப்போது வெளிச்சத்துக்கு வருகிறது... வா..! களத்தில் சந்திப்போம்!'

ஆகஸ்டு 7ந் தேதி அமெரிக்கப் படைகள் சவுதி அரேபியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

8ந் தேதி சதாம் பதிலடி நடவடிக்கைகளில் இறங்கினார். "இராக்கின் 19வது மாநிலமாக குவைத் இணைந்துவிட்டது. குவைத்துக்குள் எந்த நாட்டுப் படை நுழைய முயன்றாலும் பதிலடி கொடுப்போம்!" என்றார்.

அமெரிக்கப்படைகள் வந்து குவியக்குவிய அசையாமல் இறுகி நின்றார் சதாம்!

"ஆனானப்பட்ட அமெரிக்காவையே எதிர்க்க இந்த மனிதருக்கு இத்தனை நெஞ்சுரமா...?"

உலகம் குலுங்கியது.

**மா**டி ஜன்னல் வழியே வாசலைப் பார்த் துக்கொண்டிருந்தாள் ஹாலா. சதாமின் இளைய மகள். வயது 16. பள்ளியில் படித்துக் கொண்டிருப்பவள்.

வீட்டு வாசலில் கேட் மூடியிருப்பது தெரிந்தது. கேட்டுக்கு வெளியிலும் உள்ளேயும் பாது காவலர்கள் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. கேட் கதவு திறக்க, சதாமின் கார் வாசலுக்குள் நுழைவது தெரிந்தது....

'ஹா.. அப்பா.....' துள்ளிக் குதித்து மாடிப்படிகளில் இறங்கி ஓடி வந்தாள் ஹாலா.

ஹாலாவின் குரல் கேட்டு வீடே வாச லுக்கு விரைந்தது.

சதாம் காரிலிருந்து இறங்கினார்.

சதாம் இப்போதெல்லாம் வீட்டுக்கு வருவதே அபூர்வம். ஈராக் எல்லையில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் உட்பட 33 நாடுகளின் முப்படைகளும் நவீன போராயுதங்களும் அம்பாரமாய் குவிக்கப்பட்ட நாளிலிருந்தே இப்படித் தான். போர் தயாரிப்பு பணிகளில் மும் முரமாய் ஈடுபட்டிருந்த சதாம், தனக்கு வீடு என்றொன்று இருப்பதை ஏறக்குறைய மறந்தே விட்டார். அவர் எப்போது வீட்டுக்கு வருவார்? எப்போது போவார்? என்பதே வீட்டில் யாருக்கும் தெரி யாது.

சதாம் இப்போது வீட்டுக்குள் நுழைந் ததிலிருந்தே அவரை ஒரு புதுமை போல் சற்று ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டி ருந்தாள் ஹாலா.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# உதட்டில் ஒரு மிச்சம்

20

## இதுவரை

அரவிந்த் ஒரு பைலட். அவனது மனைவி ஜ்யோதி. அவர்களது நண்பன் விக்ரம். அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை. இதற்கிடையே அரவிந்த், அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன் பைலட்டாக ஓடக்கரை கிராமத்திற்குச் செல்கிறான்.

அக்கிராமத்தை வளைத்துப்போட அமைச்சர் திட்டமிட அதை எதிர்க்கிறார்கள் கிராம இளைஞர்கள்.

பொலிஸ் சுடுகிறது. சிலர் இறக்கிறான். கிராம இளைஞர்கள் கொதிக்கின்றனர். அமைதி வழி சரிப்படாது என்று ஆயுதம் ஏந்த முடிவு செய்கின்றனர்.

நிலத்தை அபகரிப்பதில் அமைச்சர் தீவிரம் காட்டுகிறார். அமைச்சரைக் கொல்ல இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.

இனி...

**ஹே**மநாத் சற்றே கவலையாக இருந்தார். எதிரில் உட்கார்ந்திருந்த மோகனனைக் குத்திக் கிழிப்பது போல பார்த்தார்.

"உங்களுக்கே போக்குக் காட்டி விட்டார்கள் என்றால், அந்த ஊர் இளைஞர்கள் ஆபத்தானவர்கள் போல் இருக்கிறதே. பேசாமல் இளைஞர் முகாம் திறந்து வைக்கும் நிகழ்ச்சியைக் கேன்ஸல் செய்து விடலாமா மோகனன்?"

"அப்புறம்? தொழிற்சாலை ஆரம்பிக்கும் எண்ணத்தையும் கைவிட்டு விடுவீர்களா?" என்றார். மோகனன் சற்றே கோபமாக. "தேவேந்திரனை சந்திக்க நான் தனியாகப் போனது முட்டாள்தனமாய் இருக்கலாம். அமைச்சர் வரும்போது இன்னும் அதிக கவனத்துடன் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பேனே தவிர, அலட்சியமாக இருக்க மாட்டேன் என்று மட்டும் என்னால் உத்தரவாதம் தர முடியும்."

"கொடுத்த தேதியிலிருந்து நானும் பின் வாங்குவதாக இல்லை." என்றார் பிரகாஷ்குப்தா. "இதையெல்லாம் யோசித்துப் பார்க்கும் போது, எனக்கும் வேறு யாரும் விமானம் ஓட்ட அனுமதிக்க வேண்டாம். ஏற்கனவே சொன்னபடி அரவிந்த்தான் எனக்கு பைலட்டாக வரவேண்டும்."

•••



"**எ**ன்னோடு பேசாதே!" என்று திரும்பி உட்கார்ந்தாள் ஜ்யோதி.

"ஏய், ஏய்..." என்று அவளுக்கு எதிரில் தரையில் மண்டியிட்டான் அரவிந்த். "சரியான காரணமில்லாமல் என்மேல் கோபம் காட்டுவது என்ன நியாயம்?"

"சரியான காரணம் ஏன் இல்லை? நான் உனக்காக உருகி உருகி நிற்பது உனக்குப் பெரிதாகத் தெரியாது. நான் பொலிஸில் புகார் கொடுத்து அவனைப் பிடித்துக் கொடுப்பேன், நீ என் உணர்வுகளைப் பற்றிக் கவலைப்படாமல் ரொம்ப பெருந்தன்மை என்று நினைத்து முட்டாள்தனமாய் புகாரை வாபஸ் வாங்கி அவனை விடுதலை செய்வாய்!"

"அதுதான் உன் ஆத்திரமா? விக்ரமே உன்னை மறந்தால்கூட உன்னால் அவனை மறக்க முடியாது இல்லை ஜ்யோதி?"

"பேசாதே... முஞ்சியில ஆஸிட் ஊற்றியவன் எல்லாம் ஒரு நண்பனா?"

"சேச்சே... விக்ரம் ஒருநாளும் அப் படி செய்திருக்க மாட்டான்!"

"உன் முகம் அழகாய் இருப்பதைப் பார்த்து நான் மயங்கி விட்டேன் என்று கமெண்ட் அடித்தது அவன்தான். ஜலால் என்பவனிடம் அவன் பணம் கொடுத்ததைப் பார்த்த சாட்சிகள் இருக்கிறார்கள்.... விக்ரம் அனுப்பியதாகத்தான் ஜலால் சொல்லியிருக்கிறான்."

"விக்ரம் அப்படிப்பட்டவன் இல்லை ஜ்யோதி."

"உன் நண்பனை நீதான் மெச்சிக் கொள்ள வேண்டும்."

"சரி விக்ரம் கெட்டவனாகவே இருந்து விட்டுப் போகட்டும். அவனைப் பற்றிப் பேசி நம் இனிமையான நேரத்தை வீணடிக்க வேண்டுமா ஜில்ஜிட்டா..."

"என்னைத் தொடாதே... நான் கோபமாய் இருக்கிறேன்" என்று முகத்தைத் திருப்பினாள் ஜ்யோதி.

"உன் கோபத்தை எப்படிக் கரைக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்." அரவிந்த் அவளை ஆட்டுக்குட்டிபோல் தூக்கினான். அவள் கைகளைக் கால்களை உதற உதற உள்ளே எடுத்துப் போனான்.

★★★

"**பு**ருவத்திலும் இடது காதோரத்திலும் மட்டும் சின்ன மாற்றங்கள் தேவைப்படுகின்றன." என்றார் டாக்டர் மகேஷ். "அப்புறம் தலை முடியைக் கொஞ்சம் ட்ரிம் செய்ய வேண்டும்" என்று தன் கையுறைகளைக் கழற்றினார்.

"மற்றப்படி ஷிவாவையும், அரவிந்த்தையும் வித்தியாசப்படுத்தும்படி பளீர் என்று ஏதாவது அடையாளம் விட்டுப் போயிருக்கிறதா?" என்றான் தேவேந்திரன்.

ஷிவா கட்டிலிலிருந்து எழுந்து உட்கார்ந்தான்.

"உதட்டில் பொருத்தியுள்ள மச்சம் சற்றே அளவு மாறியிருக்கிறது," என்றார் டாக்டர் மகேஷ்.

"ரொம்ப நெருக்க மானவர்கள் பார்த்தால் மட்டும் ஷிவாவிற்கும், அரவிந்திற்கும் இருக்கும் சின்ன வித்தியாசங்கள் தெரிந்து போகலாம்."

"அரவிந்திற்கு நெருக்கமானவர்கள் பார்த்துவிடக் கூடிய அளவு நெருக்கத்தில் போகாமல் நான் கவனமாய் இருக்கிறேன்" என்றான் ஷிவா.

கட்டிலிலிருந்து இறங்கி அரவிந்த் போலவே நடந்தான். பின் திரும்பி வந்து தேவேந்திரன் எதிரே அமர்ந்தான்.

"சொல், தேவ்.... டில்லியிலிருந்து நல்ல சேதி என்றாயே, என்ன அது?"

"அரவிந்த்தான் பிரகாஷ் குப்தாவிற்கு பிளேன் ஓட்டப் போகிறான் என்பது நிச்சயமாகிவிட்டது."

"வெரிகுட்! வெரிகுட்!" ஷிவாவின் சிதைந்த முகத்தில் ஒரு பெருமிதமான சந்தோஷம். "புரோகிராம் விவரம் தெரிந்து விட்டதா?"

"தெரிந்தது ஷிவா. கட்சியின் நூற்றாண்டு விழா வந்துவிட்டது. ஓடக்கரையில் இளைஞர் முகாமைத் திறந்துவிட்டு கார் தொழிற்சாலையின் முதல் திட்டமாக, அலுவலகக் கட்டடத்தை திறந்து வைக்கிறார், அமைச்சர் பிரகாஷ் குப்தா. இந்த இரண்டு திறப்பு விழாக்களுக்கும் வெள்ளிக் கிழமை, நாள் குறிக்கப்பட்டிருக்கிறது. வெள்ளிக்கிழமை மதியம் மதுரைக்கு வந்து இறங்குகிறார். அங்கு மீனாட்சியம்மனைத் தரிசித்துவிட்டு, மாலை நான்கரை மணிக்கு ஹெலிகொப்டரில் ஓடக்கரைக்குப் புறப்படுகிறார். ஐந்து மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பம். கடவுள் வாழ்த்து, கலைநிகழ்ச்சி, பிரமுகர்கள் பேச்சு, அமைச்சரின் சிறப்புரை, அப்புறம் ஜனகனமண..."

"விமானத்தை ஓட்டப்போவது அரவிந்த், ஹெலிகொப்டரை ஓட்டப்போவது யார் தேவ்?"

"விமானத்தையும் ஹெலிகொப்டரையும் நம் ஹீரோ அரவிந்த்தான் இயக்கப் போகிறான்."

"நாம் காத்திருந்த நாள் நெருங்கி விட்டது தேவ்." என்றான் ஷிவா அவன் கைகளில் தட்டி.

"மோகனன் யமகாதகன். அவரிடம் கவனமாய் இருங்கள்!" என்றார் டாக்டர் மகேஷ் சற்றே கவலையுடன்.

"ஷிவாவின் முகத்தில் கடைசித் திருத்தங்களையும் நீங்கள் செய்தவுடன் நாங்கள் மதுரைக்குப் புறப்படுகிறோம்" என்றான் தேவ்.

★★★

"**ப**த்திரம்.. பத்திரம்..." என்றாள் ஜ்யோதி. அரவிந்தின் டையை சரி செய்து கொண்டே.

"காலையில் விக்ரம் ஃபோன் செய்து மிரட்டியதிலிருந்து எனக்குப் பயமாயிருக்கிறது."

"ஆரம்பித்து விட்டாயா?" என்றான், அரவிந்த் முகத்தை சற்றே சலிப்பாக வைத்துக் கொண்டு.

"விக்ரம் என்ன சொன்னான் ஞாபகம் இருக்கிறதா? நீ எங்கே போனாலும் உன்னைச் சும்மா விடமாட்டானாம். இப்போது பார்த்து என்னைத் தனியாக விட்டு விட்டு நீ மட்டும் கிளம்புகிறாய்."

"தனியாக இல்லை, அமைச்சருடன். அவருடைய பரிவாரத்துடன்." என்று திருத்தினான் அரவிந்த்.

"இருக்கட்டுமே... விக்ரம் மோசமானவன்."

"அவன் சின்னக் குழந்தை போல. ஜ்யோதி"

"நீ மதுரைக்குப் போய்ச் சேர்ந்ததும் அரை மணிக்கொருதரம் எனக்கு ஃபோன் செய்வாயா? அரவிந்த்?"

"சரியான பயந்தாங் கொள்ளிப் பூச்சி நீ! என்னுடன் யார் யார் வருகிறார்கள் தெரியுமா? அமைச்சர் பி.ஏ.ஹேம்நாத். அமைச்சர் பாதுகாப்புப் பற்றி அவரைவிட அதிகம் கவலைப்படுபவர் யாரும் இல்லை. அமைச்சரின் செக்யூரிட்டித் தலைவர் மோகனன். அவரும் எங்களுடனே வருகிறார். இவ்வளவு பேரும் எனக்குக் காவல் இருக்க, இவர்களைத் தாண்டி என்னை யாரும் எதுவும் செய்துவிட முடியாது கண்ணுக்குட்டி."

ஜ்யோதி அவன் இடுப்பை வளைத்துப் பிடித்து ஷூக்கள் இருந்த பகுதிக்கு நடந்து சென்றாள்.

"உன் ஃபோனுக்காக நான் காத்திருப்பேன்டா." என்றாள் ஏக்கமாக.

"அதுவரை நினைவில் வைத்துக் கொள்ள... ஒரே ஒரு ஜில்ஜிட்டா."

ஜ்யோதி கவலை மறந்து துள்ளிக் குதித்தாள்.

•••

**ம**துரை

அந்தத் தனி அறையில் தேவேந்திரன், ஷிவா.

அரவிந்த்தைப் போலவே நடக்க, அரவிந்தைப் போலவே உட்கார, அரவிந்த்தைப் போலவே திரும்பிப் பார்க்க என்று மும்முரமான கடைசிக் கட்டப் பயிற்சி முடிந்து ஷிவா நாற்காலியில் சரிந்து உட்கார்ந்தான்.

"தேவ்... இனிமேயாவது, உன் திட்டத்தை எனக்குச் சொல்லலாமா?"

"சொல்கிறேன்!" என்றான் தேவேந்திரன்.

"மதுரைவரை அரவிந்தே அமைச்சருக்கு விமானம் ஓட்டட்டும். அமைச்சர் மீனாட்சியம்மனைப் பார்க்கப்போகும் நேரம் அரவிந்திற்கு ஓய்வு நேரம். அந்த நேரத்தில் அவனை நம் ஆட்கள் மடக்குவார்கள். அவர்களை விக்ரம் அனுப்பி வைத்தது போல் அவனை நம்பச் சொல்வார்கள். அவன் இருக்க வைத்தது போல் உன்னை நம்பச் செய்வார்கள். அவன் இருக்க வேண்டிய இடத்திற்கு நீ மாறுவாய். பிறகு ஹெலிகாப்டரை நீ செலுத்துவாய். ஓடக்கரைக்கு அருகே வந்ததும் தன் தொழிற்சாலைக்கான கட்டட வேலைகளைப் பார்த்து அமைச்சர் சந்தோஷப்படுவார்."

"அதுதான் அவருடைய கடைசி சந்தோஷம்." என்றான் ஷிவா. "அதன்பின் ஹெலிகொப்டரை நான் இறக்கமாட்டேன். நம் ஊரை அடுத்துள்ள மலைகளின் மீது கொண்டு மோதுவேன்."

"ஆம்!" என்றான் தேவேந்திரன். கண்களில் கனவுகளின் பொறி பறக்க. "நாம் அனைவரும் அடிக்கடி சந்திப்போமே அந்தக் குகைகளின் அருகாமையில்தான் பாறைகள் உள்ளன. அங்கே கொண்டு போய் ஹெலிகொப்டரை மோதினால் நிச்சயம் நெருப்பு பற்றிக் கொள்ளும். பிரகாஷ் குப்தா ஒரு மத்தாப்பூ போல கருகி முடிய வேண்டும்."

"ஆனால் தேவ்... அமைச்சர் மட்டும் தனியாக வரப்போவதில்லை. அவருடன் ஹெலிகாப்டரில் வருபவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து கருகுவார்களே என்றுதான் என் மனம் தடுமாறுகிறது."

"நமக்கு வேறு வழியில்லை ஷிவா... நீ கூடத்தான் அநாவசியமாய் உயிரைத் துறப்பாய்."

"அநாவசியம் என்று சொல்லாதே, தேவ்... நான் ஆசையுடன், ஆர்வத்துடன் காத்திருக்கிறேன். நீ ஒப்புக்கொண்டால், உன் திட்டத்தில் ஒரு சிறு மாற்றம் மட்டும் செய்ய விரும்புகிறேன், தேவ்..."

"என்ன?"

"மலையில் மோதி அமைச்சர் இல்லாமல் போனாலும், பிற்பாடு அந்தத் தொழிற்சாலையும் கட்சிக்கான இளைஞர் முகாம்களும் ஓடக்கரையில் துவக்கப்படலாம். அதனால்..."

"அதனால்?"

"தொழிற்சாலையில் திறக்கத் தயாராய் இருக்கும் கட்டடத்தை மோதித் தகர்த்து விட்டால்? பிரகாஷ் குப்தாவிற்கும் அவர் குடும்பத்தவர்க்கும் சகுனத்தின் மீது நம்பிக்கை அதிகம். அதனால் தொழிற்சாலை துவக்கும் எண்ணத்தையே அவர்கள் மாற்றிக் கொள்ளக் கூடும். நம்முடைய இடம் நமக்கு மறுபடி கிடைக்கும்."

தேவேந்திரன் யோசித்தான்'

(○—வரும்—○)

**சுபா**

---

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.

01

# அரங்கம் அந்தரங்கம்

### இதோ இவர்கள்

**ச**முதாய மாளிகையில் ஆடையில் அழுக்குப் படாமல் உலாவி வரும் ஆனந்த மூர்த்திகள்.....

நாணயப் பெருமக்கள்.....

தத்துவ ஞான உத்தமர்கள்.....

....ஆம். உலகம் இவர்களை அறிந்து கொண்டிருப்பது இப்படித்தான்!

பொது இடங்களில் இவர்களைக் காணும்போது காலைத் தொட்டு வணங்குவார்கள் சிலர்; கட்டித் தழுவி வரவேற்பார்கள், சிலர்.

'பொன்னான உள்ளம்,' 'வற்றாத கைகள்' என்று புகழ்வார்கள், சிலர்.

அரங்கத்தில் டாக்டர் 'ஜெக்கி'லாகவும், அந்தரங்கத்தில் மிஸ்டர் 'ஹைடா'வாகவும் காட்சியளிக்கும் இவர்களை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டாமா?

சாதாரண மனிதர்கள் காண முடியாத இடத்தில் இவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை, நீங்கள் புரிந்து கொள்ள வேண்டாமா?

இந்தச் சுரங்கத்திற்குள் நீங்கள் இறங்க முடியாது.

உங்கள் கைகளிலுள்ள நிர்வாண விளக்கை அங்கே நீங்கள் கொண்டு போக முடியாது.

'ஆகா! இவர் அல்லவா மனிதர்' என்று, நீங்கள் புகழ்ந்து போற்றும் மனிதர்களை, "இவரா.....? இப்படியா?" என்று பார்க்க வேண்டிய நேரம் வந்தால், உங்களுக்கு மாரடைப்பே ஏற்பட்டுவிடும்.

மனிதர்கள், வெறும் மனிதர்கள் மட்டுமல்ல. அவர்களுக்குள்ளே தெய்வங்களும் உண்டு; மிருகங்களும் உண்டு என்று நீங்கள் கேள்விப்பட்டு இருக்கிறீர்கள்.

நீங்கள் நினைக்கும் தெய்வங்கள் தான் மிருகங்கள் என்று அறிய நேர்ந்தால், உங்கள் நிலை என்ன?

கேளுங்கள்:

சட்டத்தையும், தர்மத்தையும் அலசி அலசி வைக்கிறார் ஒரு வழக்கறிஞர்.

அவர் சட்டத்தில் பட்டம் பெற்றிருக்கிறார். தர்மத்தைக் கரைத்துக் குடித்திருக்கிறார்.

ஒரு வழக்கில் உடமைக்காரனுக்குத்தான் சொத்து என்று வாதாடுவார்; இன்னொரு வழக்கில் குத்தகைக் காரனுக்குத்தான் என்று வாதாடுவார்.

வாதிக்கும் ஆஜராவார்; பிரதிவாதிக்கும் ஆஜர் ஆவார்!

ஆனால் இவர் வாதியா? பிரதி வாதியா?

இவர் உள்ளத்திலும் இல்லத்திலும் நுழைந்து பார்த்தால் தான் தெரியும்.

இதோ, இவர் ஓர் அரசியல்வாதி.

'நான் வாழ்வது நீதியைக் காக்கவே' என்பது இவரது முழக்கம்.

நீதி என்பதற்கு இவர் வகுத்துக் கொண்ட இலக்கணங்கள் இவருக்கே சொந்தமானவை!

இவர் தேர்தலில் நிற்பது சமூக தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக!

இவர் பதவியைக் கைப்பற்றுவதும் அதற்காகவே!

இவரால் சமூகத்திற்கு தர்மம் உண்டோ இல்லையோ, சமூகத்தில் இவருக்கென்றே சில தர்மங்கள் உண்டு.

இதோ, இந்த அம்மையார் ஒரு சமூக சேவகி.

அரை அடியாக வெட்டப்பட்ட முடி. உள்ளே இருக்கும் 'ப்ரா' பளிச்சென்று தெரியும்படி போடப்பட்ட ஈசல் இறகு ரவிக்கை. அதை முடியும் மூடாமல் காட்சியளிக்கும் நைலான் சேலை. குதிகாலை அரை அடி உயரம் தூக்கி நிறுத்தும் செருப்பு; தோளிலே ஒரு டம்பப் பை; அதற்குள்ளே கண்ணாடி, சீப்பு, உதட்டுச் சாயம்; பல பிரமுகர்களின் டெலி;ஃபோன் நம்பர்களும், விலாசங்களும் கொண்ட ஒரு டைரி.

பல அமைச்சர்களோடு எடுத்துக் கொண்ட புகைப்படங்களின் ஒரு செட்- இத்தியாதி! இத்தியாதி!

இவர் ஏழைகளுக்காகச் சமூக சேவை செய்கிறவர்.

இவரிடம் பணம் இல்லை.

ஆனால் ஏழு கிரவுண்டில் இரண்டுக்கு மாடி வீடு கட்டி இருக்கிறார்!

விமான நிலையமே இவரது அதிக நேரக் குடியிருப்பு.

கல்யாணமானவர்; கணவர் என்ற பெயரில் ஒருவர் இன்னும் இருக்கிறார்!

இதோ, இவர் ஒரு பொலிஸ் அதிகாரி.

சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவதற்காகவே அவதாரம் எடுத்தவர், இவர்.

இவரது இரண்டு பக்க மீசைகளில் ஒன்று சட்டம்: ஒன்று ஒழுங்கு!

நகரில் எங்கு தவறு நடந்தாலும் இவர் விடமாட்டார்.

யாரையும் கைது செய்து விடுவார்.

இந்த அரங்கத்தின் கதாநாயகனின் அந்தரங்க வாழ்க்கை தினமும் கைது செய்யப்பட வேண்டிய வாழ்க்கை!

ஆனால் சட்டமே இவரது கைகளில் இருக்கிறதே. என்ன செய்வது?

இதோ, இவர் ஒரு நடிகர்.

நடிக்கத் தெரியாவிட்டாலும், இவருக்கு அந்தப் பட்டம் உண்டு!

அரசியல் புரியாவிட்டாலும், அரசியலில் ஈடுபடுவார்!

இரவு ஒன்பது மணி வரை ஒழுக்கமே இவரது குறிக்கோள்.

நாடே இவரை உத்தமர் என்று நம்பும்!

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

~கவியரசு கண்ணதாசன்~

## கவியரசு கண்ணதாசன்



ஆனால், அந்தரங்கத்தில் இவர் யார்?

சமுதாயத்தில் இரண்டு பக்கங்கள் இங்கே காட்டப்படுகின்றன. இருட்டும், வெளிச்சமும் விவரிக்கப்படுகின்றன.

இந்திய ஜனநாயகத்தின் ஒரு வலிவிழந்த அம்சம் இங்கே சீர்தூக்கப்படுகிறது.

குற்றவாளிகளே நீதிபதிகளாகக் காணப்படும் அலங்கோலம் இங்கே விவரிக்கப்படுகிறது.

இந்தக் கதையின் பாத்திரங்கள் உயிருள்ளவை. இதில் நானும் ஒரு பாத்திரம்!

இங்கு சொல்லப்பட்ட பாத்திரங்களே அல்லாமல், வேறு பல பாத்திரங்களும் இதில் வருகின்றன. நடைபெற்ற நிகழ்ச்சிகள் உண்மையானவை. பெயர்கள்தான் மாற்றப்பட்டிருக்கின்றன. கற்பனைச் சுவையும் கலந்து செய்யப்பட்ட சிற்பம் இது.

இப்போது வாருங்கள், சென்னை நகருக்கு.

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# பொய் சிரிக்கிறது...



## ரூபராணி

கன்னத்தில் வடிந்த வியர்வைத் துளிகளைக் கையால் தேய்த்துத் துடைத்தபடி நிமிர்ந்தான் தங்கராசு. தீபாவளித் திருநாள்- பட்டாசு வெடிச்சத்தங்கள் அவன் காதைப் பிளந்தன.

அந்த வீட்டின் அரைமதிலுக்கப்பால் அவன் பார்வையை ஓட்டினான். புத்தாடை புனைந்து பலகாரத் தட்டுக்களைக் கையிலேந்தி சின்னஞ் சிறுசுகளும் அவனை ஒத்த பெடியன்களும் வீதியில் போவதைக் கண்டபோது, ஆவல் அவனையும் மீறி அவன் கண்களில் பளிச்சிட்டது.

தன்னைத்தானே ஒருமுறை பார்த்துக் கொண்டான். அழுக்குப் படிந்த ஆடைகள் அவனைக் கேலி செய்வது போலிருந்தன. தீபாவளியும் அதுவுமாக விறகு கொத்தும் வேலையில் மும்முரமாய் இருந்தான். அவன் உள்ளத்தில் ஒரு வித தகிப்பு...

'தோட்டத்தில ஆத்தாவோட இருந்திருந்தா எவ்வளவு சந்தோசமாயிருக்கும்? முறுக்கு, பலகாரம் எல்லாம் பக்கத்துப் பசங்களோட பகிர்ந்து தின்னுட்டு வெடி கொழுத்தி வெளயாண்டிருக்கலாம்.' மின்னலாய் ஒரு எண்ணம் தங்கராசுவின் மனதில் தோன்றி மறைந்தது. அவன் அப்பன் முனுசாமியை நினைத்ததும் அவன் மனசு கசந்தது.

"பள்ளிக்குப் போய் என்னடா பண்ணப் போறே? நமக்கென்னா உத்தியோகமா கெடைக்கப்போவுது? ஒரு ஊட்ல வேலைக்குப் போயி நாலு காசு சம்பாதிக்கிற வழியப் பாரு. அடம்பிடிச்சியோ முதுகுத் தோல உரிச்சிப்புடுவன்!" முனுசாமி எப்போதோ சொன்ன வார்த்தைகள் இப்போதும் நாராசமாய் அவன் காதில் ஒலித்தது.

ஏழு வயதில் மட்டக்குளியில் உள்ள சண்முகநாதன் சட்டத்தரணி வீட்டில் வேலைக்கு வந்தவன் தங்கராசு. அவனை வேலைக்குவிட அவன் ஆத்தா வள்ளிக்குத் துளிகூட இஷ்டமில்லை. அவள் கணவன் முனுசாமி குடிபோதையில் வந்து அவளை அடித்துப் போட்டு விட்டு தங்கராசுவை இழுத்துக் கொண்டு சண்முகநாதன் வீட்டில் கொண்டு சேர்த்தான்.

"அடியே பாடையில போறவளே! தங்கராசுவ வேலைக்காடி உட்டன்? அதுங்களுக்கு மூணும் பொட்டை புள்ளைங்களாம். ஒரு பொடியன வளக்கோணும்னு ஆசயாக் கேட்டாரு அந்த மவராசன்; படிச்சும் குடுப்பாரில்ல?"

முனுசாமி சொன்ன கதையை வள்ளி துளிகூட நம்பவில்லை.

தங்கராசுவின் தலையில் ஏகப்பட்ட வேலைகள் சுமத்தப்பட்டன. அவன் வேலைக்குச் சேர்ந்து ஏழு ஆண்டுகளைக் கழித்து விட்டான். வயது ஏற ஏற வேலையின் சுமைகளும் ஏறுவதை எண்ணியபோது, அவன் கண்களில் நீர் முட்டியது. கன்றிச் சிவந்து போன அவன் கைகளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"டேய் தங்கராசு!" அந்த வீட்டு எஜமானியின் குரலில் அதிகாரம் தெறித்தது.

"சீக்கிரம் விறகக் கொத்தி முடிச்சிடு. நாயைக் குளிப்பாட்டி லக்ஸ்பிரேயில் முட்டையைக் கலந்து வை. சீனி வாங்க மறந்திடாத, நாங்க வத்தளைக்குப் போறம். வர ரொம்ப லேற் ஆகும். உன்ர காம்பறாவில இரு. பிள்ளைகள்ட சாமான அது இதுன்னு கை வச்சியோ நீ தப்பமாட்ட!" கட்டளைகளை அள்ளி வீசிவிட்டுப் பிள்ளைகளுடன் புறப்பட்டு விட்டாள் எஜமானி.

தங்கராசு கோடரியைத் தொப்பென்று போட்டுவிட்டு அவனுடைய தோட்டம், வயல் ஆத்தா, நண்பர்கள் எல்லாரையும் பாசத்துடன் நினைத்து அழுதான் 'தன்னை விட நாய் மேல்,' என்று எண்ணியதும் ஏக்கங்கள் அவனுள் குண்டுகளாய் வெடித்துச் சிதறின.

'ஒவ்வொரு குடும்பத்தையும் கடவுள் ஏன் வித்தியாசமாய்ப் படைத்தார்' என்று எண்ணியதும் அவனுக்குக் கடவுள் மீதும் எரிச்சல் வந்தது.

திடீரென்று தங்கராசுவின் மூளை சுறுசுறுப்படைந்தது. இப்ப இந்த ஊட்டை விட்டு ஒடினா என்ன? யாரும் இல்ல. இப்படி எண்ணிய தங்கராசு செயலிலும் இறங்கி விட்டான். நொடிப் பொழுதில் உடைகளை மாற்றியவன். சீனி வாங்கக் கொடுத்த பணத்தை எடுத்துக்கொண்டு கண்டி பஸ்ஸில் ஏறிவிட்டான்.

சட்டத்தரணி குடும்பத்தினர் அன்று வீடு வந்து சேர்ந்தபோது இரவு மணி ஒன்பதைத் தாண்டி விட்டது. வீடு இருளில் மூழ்கிக் கிடப்பதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். 'தங்கராசு ஓடிப்போய் விட்டான்' என்பதை உணர அவர்களுக்கு அதிகநேரம் ஆகவில்லை.

"நல்லவேளை- நம்ம றூம்ஸ் எல்லாம் பூட்டிற்றுப் போனது," என்று ஆறுதலடைந்தாள் சண்முகநாதன் மனைவி.

'தங்கராசு வீட்டில் உள்ள நகைகளைத் திருடி விட்டுத் தலைமறைவாகி விட்டானென்று பொலிசுக்குத் தகவல் சொன்னால் என்ன?' என்று மனைவி கொடுத்த யோசனையைச் செயலாக்குவதில் உஷாரானார் சட்டத்தரணி.

தங்கராசு தான் பிறந்து வளர்ந்த தோட்டத்தில் அடியெடுத்து வைத்ததும் அதுவே அவனுக்குச் சொர்க்கமாகப்பட்டது. 'பட்டினி கிடந்தாலும் இன்னொருவர் வீட்டில் அடிமையாகப் போகவே கூடாது' என்று எண்ணினான்.

அவனைச் சுற்றி ஒரு கூட்டம்- சிறுவனாக இருந்த, தங்கராசுவை இளைஞனாகக் கண்டதில் அங்குள்ளவர்களுக்கு மகிழ்ச்சியாயிருந்தது. தங்கராசுவின் ஆத்தா முகத்தில் சந்தோஷம் பரவியது. முனுசாமி மௌனத்தில் இறுகிப்போயிருந்தான்.

அன்றைய இரவு தங்கராசு ஆத்தாவின் மடியில் தலைசாய்த்து சட்டத்தரணி வீட்டில் தான் செய்த வேலைகளைப் பற்றிக் கதை கதையாய்ச் சொன்னான்.

ஆத்தாவின் கண்களில் இருந்து வடிந்த நீர் தங்கராசுவின் தலையை நனைத்தது. "இனிமே நீ எங்கிட்டும் போவாதய்யா. இந்தத் தோட்டம் நமக்கு கஞ்சாச்சும் வாக்காதா? நீ தூங்குப்பா!" பெருமூச்சில் வார்த்தை கள் வெளியேறின.

பொழுது விடிந்தது. செவனு வீட்டுச் சேவல் செட்டை தட்டி ஒலி எழுப்பியது. சூரியன் 'சுள்' என்று சுடத்தொடங்கினான்.


தோட்டத்துப் பக்கம், ஜீப்பின் இரைச்சல் தெளிவாகக் கேட்டது. "பொலிஸ் பொலிஸ்" என்று குரலெழுப்பியபடி பால்காரப் பழனி மூச்சிரைக்க ஓடிவந்தான்.

பொலிஸ்காரனுக்கு தங்கராசுவின் வீட்டை அடையாளம் காட்டினான் செவனு. சற்று நேரத்தில் தங்கராசுவீட்டில் கூட்டம் கூடிற்று என்ன ஏது என்று தெரியாமல் முழித்தனர் எல்லோரும்.

"முதலாளி வீட்டு நகைகளைக் களவாடி வந்துவிட்டான்!" என்று பொலிஸ்காரன் தங்க ராசுவைக் குற்றம் சாட்டினான். லயத்துக் காம்பராவைச் சல்லடை போட்டான். தங்க ராசு தான் களவாடவில்லை என்று பல தடவை சொல்லியும் கெஞ்சியும் பொலிஸின் காதில் அது விழவில்லை.

"டோய் ஸ்ரேசனுக்கு வா..... எப்பிடி உண்மையை எடுக்கிறதெண்டு காட்றன்!" சொல்லிக்கொண்டு தங்கராசுவைத் தள்ளிக் கொண்டு போனான் பொலிஸ்காரன். ஆத்தாவின் கதறல் அந்தத் தோட்டத்தை உலுக்கியது.

# புதிர்



**'சாரதாவுக்கு மனசு உறுத்தியது. சுதந்திரம் கொடுத்தே கெடுத்துவிட்டேனா?'**

"என்ன சாரதாவா, வா, வா உட்கார், முகம் வாட்டமாயிருக்கே என்னாச்சுது? மணி மணியாக இரண்டு பையன்கள் இருந்தும் இப்பிடி வாடிப்போனால் நாமெல்லாம் எங்கேபோய் முட்டிக் கொள்றதாம்?"

பரபரப்பாக வரவேற்ற சிநேகிதியைப் பார்த்து எதுவும் பேசாமல் நீண்ட பெருமூச்சை மட்டும் உதிர்த்துவிட்டு நாற்காலியில் அமர்ந்தாள் சாரதா.

"வந்துற்றேன்!"

உள்ளே போன கமலா மகனிடம் இரைந்தாள்,

"இந்தா சந்துரு தங்கைச்சியை கூட்டிப் போய் ரியூசனுக்கு விட்டுட்டு உன் கிளாஸ் முடிய அழைச்சிட்டு வா. இன்னைக்கு என்னால வரமுடியாது."

"போம்மா எப்பப்பாரு இப்பிடி வேலை தந்துண்டே இருக்கிறீங்கள். விளையாட டைம் தருவதே கிடையாது. என் கிளாஸ் முடிய வந்துடுவேன்!" என்றான் எரிச்சலுடன் கமலாவின் மகன்.

"நாம பணத்தைப் பாராம கொட்றது விளையாடவா? அதெல்லாம் முடியாது. சொல்லிட்டேன். அப்புறம்பாரு அடி எப்படின்னு." கண்டிப்புடன் கூறிவிட்டு முன்னுக்கு வந்தாள் கமலா.

"பாரு சாரதா, பதினாலு வயசிலை என்னமாய் பேசறான். இப்ப நாம கண்டிச்சு வைக்காம பாவம் பார்த்தோம்னு வைச்சுக் கொள். நாளைக்கு அந்த சுதந்திரத்தைப் பயன்படுத்தி, தம் வழிகளில் போய்விடுவார்கள். பொறுப்புக்களை இப்ப இருந்தே குடுக்கணும்."



சாரதாவுக்கு மனசு உறுத்தியது. 'கமலா சொல்வது போல சுதந்திரத்தைக் கொடுத்தே கெடுத்துவிட்டேனா...?'

"என்ன வந்ததிலிருந்து பேசாமல் ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிறாய்? பெரியவன் ஒழுங்கா வகுப்புகளுக்குப் போகிறானா? அவனைப் பார்த்தும் ரொம்ப நாளாச்சு," என மௌனத்தைக் கலைத்தாள் கமலா.

"இல்லை கமலா- பெரியவன்தான் கொஞ்சம் தலையிடியாக இருக்கிறான். பதினேழு வயசிலை ஒருவித ஆணவம், சுயபுராணத்தின் இறுமாப்பு அவனை ஒரு ஹீரோவாக்கியிருக்கிறது. சேர்ந்து திரிகிற நண்பர்கள் அத்தனையும் கற்றுத் தேர்ந்தவர்கள். சொல்லுக்கடக்கி கட்டுக்குள் வைக்க முடியவில்லை. ஏறச் சொன்னால் இறங்கிறான். இறங்கச் சொன்னால் ஏறுறான். எப்படி வாழ்க்கையை விளங்கவைப்பதென்றே தெரியலை. பயமாக இருக்கிறது....." என்றாள் துயரம் பொங்க.

"அதான் சின்னக் காலத்திலை இருந்தே அடிச்சு வளர்க்கணும். நீண்ட கொடியில் விட்டால் வாலைப் பிடிச்ச கயிறு மட்டும் மிஞ்சும். நான் சந்துருவை இந்த விரட்டு விரட்டி வேலை வாங்குவது பொறுப்பை உணரணும் என்றுதான். அப்பதான் வேலையும், நேரமும் சரியாக இருக்கும். மற்றவற்றைச் செய்ய பொழுதிருக்காது." தன் புத்திசாலித்தனத்தை தானே மெச்சும் தோரணையில் பேசினாள் கமலா.

'என்ன பிள்ளை வளர்ப்பு வளர்த்திருக்கிறாய்?' என்று குற்றம் சாட்டுவது போலிருந்தது சாரதாவுக்கு.

அவள் எத்தனை அருமையாகத் திட்டமான அணுகுமுறைகளுடன் வளர்த்தாள். உடல், உள வளர்ச்சிக்கு சுதந்திரம் அவசியமென எத்தனை தளர்வான, கட்டுப்பாடுகள் அதிகம் திணிக்காத விதமாக நடந்து கொண்டாள். அதுவே இன்று அவளது துன்பத்திற்கு காரணமாகிவிட்டதா? அப்படி என்றால் எப்படித்தான் இந்த இளைய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது?

"கண்டிக்கப்போனால் முண்டுகிறார்கள். விட்டுப் பிடிச்சால் வாலைக் காட்டுகிறார்கள். தனக்குள் விசனப்பட்ட சாரதா, 'என்ன செய்வது கமலா, நான் நினைச்சேன் கறாரான கண்டிப்பு தறிகெட்டு ஓடத்தூண்டும். விட்டுப் பிடிச்சு தட்டிக்கொடுத்தால் நல்ல மனநிலை உருவாகும் என்று, ஆனா அவன் இப்ப தன் வயசையும் மீறியவர்களுடன் நட்புவைத்திருக்கிறான். அது எங்கே போய் முடியுமோ என்ற பதைப்பு. தட்டிக் கேட்டால் வார்த்தை தடிச்சு வேறுவிதமான முடிவைக் கொண்டு வந்து விடுமோ என்றதால் நான் மௌனமாக நிற்க வேண்டியிருக்கிறது." என்றாள் பயமும், பரிதவிப்பும் இழையும் குரலில்.

"சரி, சரி, நீ என்ன செய்வது. இப்பிடித்தான் இன்றைக்கு பிள்ளைகள் எதிர்க்கிறார்கள். நாளைக்கு அவர்கள் இன்னும் இரட்டிப்பாக எதிர்கொள்ளும் போதுதான் எங்களைப் புரிந்து கொள்வார்கள். அவனை அனுப்பு பேசிப்பார்க்கறேன்...." என்று ஆதுரமாக பேசினாள்.

## ஜெ.சூரியன்

"ஆமா கமலா உன் சொல்லைக் கேட்கக் கூடும் என்று நினைச்சுத்தான் சொல்ல வந்தன். ஒரு தடவைக்கு பல தடவை அழுத்தமாக சொல்லு!" என்று கூறிவிட்டு சற்று சுமை குறைந்த தென்புடன் வெளியே நடந்தாள்.

இரண்டாண்டுகள் கழிந்தன.

களைப்பும், துயரம் கவிந்த முகமுமாக கமலா, சாரதா வீட்டிற்குள் நுழைந்தாள். உள் மனதைப் படம் போட்டுக் காட்டியது. நிறையப் பயந்துபோய்க் காணப்பட்டாள். அவள் கரங்களைப் பற்றி இருக்கையில் இருத்தி அன்புடன் வினவினாள் சாரதா.

"என்னத்தை சொல்ல சாரதா. அன்றைக்கு என் மகனுக்கு பதினாலு வயசு. கண்டிச்சு வளர்க்கணும்னு உனக்கு அறிவுரை சொல்ல முடிந்தது. இன்றைக்கு அவனுக்கு பதினாறு வயசு, கண்டிச்சதாலை கண்மூடித்தனமாகப் பாய்கிறான். கண்ட கண்ட பையன்களுடன் சுத்துறான். வேளை கெட்ட நேரத்துக்கு வர்றான். கேட்டா. சே... நிம்மதியில்லை. சுதந்திரமில்லை. எப்பப்பாரு அதைச்செய், இதை செய்யாதைன்னு நச்சரிப்பு. பிள்ளையாக நினைச்சியளா இல்லை வேலைக்காரனாக நினைச்சியளான்னு, கத்துறான். என்ன செய்வதென்றே புரியேல்லை!" அழுகையினூடே கூறினாள் கமலா.

"கமலா இதுவொரு புதிரான பருவம். சிலர் சொல்லாமல் நல்லவற்றைப் பற்றிப் படர்ந்து செம்மையான முறையில் பலன் தருவர். சிலர் சொல்லிக் கொடுப்பதைக் கொண்டு வாழ முற்படுவர். வேறு சிலர், சொல்றதைக் கேளாமல் தம் போக்கில் சென்று பட்டுணர்ந்து, கெட்டு, குட்டுப்பட்டு ஞானம் பெற்ற பின்னர், ஞாலம் போற்ற வாழ்வதுமுண்டு. வாழ்க்கையை வீணடிப்பதுமுண்டு. "அப்போ எப்படித்தான் இந்தப் பிரச்சனையை தீர்க்கிறது?" சலித்துக் கொண்டாள் கமலா.

"எல்லோருக்கும் ஒரு அமைப்புண்டு. அதை எவராலும் மாற்றியமைக்க முடியாது. அதைத்தான் விதியென்கிறோம். பாதையைக் காட்டி குறுக்கேயிருக்கும், முட்களை அகற்றிப் போக அறிவுரை சொல்ல வேண்டியது நம் கடமை. கேட்டுப் போனால் முள் குத்தாமல் தப்பி நடக்கலாம். இல்லை காயப்பட்டு, வேதனைகளைச் சுமந்து குணப்பட்டால் தானுண்டென்று கண்மூடி நடந்தால் நாம என்னதான் செய்வது, நம்ம கடமையை சரிவர செய்வோம்!" என்றாள் சாரதா மிக, நிதானமாக, அந்த நிதானத்தில் அனுபவத்தின் முத்திரை அழுத்தமாகப் பதிந்திருந்தது.

# மறக்க வைத்த வடிவேலன்!

'புசு புசு'வென கடல் காற்று வீசியது. நிமலன், சாய்வு நாற்காலியில் கால்களை நீட்டியவாறு ஹாயாகப் படுத்துக் கிடந்தான்.

மட்டக்களப்பு வாவி கடலோடு சங்கமிக்கும் முகத்துவாரக் கரையோரமாக அவன் வீடு இருப்பதால் காற்றுக்கு என்றுமே பஞ்சமில்லை.

நிமலனின் மனைவி, நிமலன் வாங்கிவந்த சூடை மீனை பொரித்தெடுப்பதில், 'பிஸி'யாக இருந்தாள். பொரியல் இல்லாமல் அவன் சாப்பிடமாட்டான்.

"உணவில் பொரியலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்!" என்று டாக்டர் சொல்லியும் அவனுடைய 'ஆவால்' தனம் விட்டுப் போகவில்லை. மனைவியும் எவ்வளவோ சொல்லிப்பார்த்தாள். அவன் கேட்கவில்லை.



எப்படியாவது அவள் பொரித்துத்தான் ஆகவேண்டும். இல்லையென்றால் வீட்டில் ஒரே ரகளைதான்.

வழக்கமாக நடைபெறும் சம்பவமிது!

நிமலன் ஊருக்குள் பலவிதங்களாலும் கொஞ்சம் செல்வாக்கு உள்ளவன். நாலுபேர் மதிக்க வாழ்பவன்.

சினேகிதர்களின் சகவாசத்தால் முஸ்பாத்திக்காகக் குடிக்கத் தொடங்கியவன், இன்று முதல்தரக் குடிகாரனாக மாறிவிட்டான்.

'நிமலன் குடிக்கிறான்' என்பதை ஊரிலுள்ள பலரும் அறிந்துகொண்ட பின்னால் அவனுக்கிருந்த மதிப்பு, மரியாதை எல்லாமே படிப்படியாகக் குறையத் தொடங்கியது.

கள், சாராயம் என்று ஆரம்பித்த இவனது குடி இப்போது வடிசாராயத்தில் வந்து நின்றது. குடிப்பதற்கு முன்னால் பரமசாதுவாகக் காணப்பட்ட நிமலன் குடிப் பழக்கத்தைக் கைக்கொண்ட பின்னால் ஊருக்குள் பெரிய சண்டியனாகவே மாறி விட்டான்.

"உங்களுக்கு இருக்கும் மதிப்பு மரியாதை எல்லாமே இந்தக் குடிப்பழக்கத்தால் இல்லாமல் போய்விட்டதே! கடவுளுக்காக குடியைக் கெடுக்கும் இந்தக் குடியை விட்டு விடுங்கள்!" என்று நிமலனின் மனைவி கெஞ்சாத நாளில்லை!

அவள் மாத்திரமா நிமலனின்மேல் மரியாதை; அன்பு வைத்திருந்த படித்த பெரியவர்கள்கூட நிமலனுக்குப் புத்தி சொன்னார்கள்.

குடிபோதையில் இல்லாதபோது இவர்கள் சொல்வதையெல்லாம் நிமலன் "நீங்கள் சொல்வது சரிதான்!" என்று ஏற்றுக் கொண்டாலும் மதியமானதும் குடிக்கப்போய் விடுவான்.

ஊரில் பல இடங்களில் கள்ளக்களவில் பலர் வடிசாராயம் விற்பனை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களில் வேலனும் ஒருவன். அவனுக்கு வேறு தொழிலே செய்யத்தெரியாது. இந்த வடிசாராயம் விற்கும் தொழில் கொஞ்சம் ஆபத்தானதுதான் என்றாலும் அவன் அதற்கேற்றவாறு அவதானமாக- எவருக்கும் பிடிபடாமல் தொழிலை நடாத்திக் கொண்டிருந்தான்.

நிமலன் இவனிடம் போனால் எவருக்கு இல்லையென்றாலும் இவனுக்குக் கொடுக்கத் தவறுவதில்லை. காரணம் கடன் வைப்பதில்லை. அப்படிக் கடன் பட்டாலும் அடுத்தடுத்த நாட்களில் கணக்கைத் தீர்த்துக் கொள்வான்.

வேலனுக்கு அமோகமாக வியாபாரம் நடந்தது.

அடித்து விலக்கேலாத சனக்கூட்டம். அந்தச் சனக்கூட்டத்தில் நிமலனும் கலந்து கொள்வான்.

பணத்தை அதிகமாகச் சேகரிக்கத் தொடங்கியதும், வேலனின் வழமையான போக்கில் மாற்றம் காணப்பட்டது. எடுத்தெறிந்து பேசத் தொடங்கினான்.

ஒருநாள் வழமைபோல நிமலன் அவனிடம் குடிக்கச் சென்றான்.

"அண்ணா நீங்க வரவர மோசம்! இது கள்ளக்களவில் செய்யும் வியாபாரம். நீங்க இந்த இடமெல்லாம் போய்க் குடிக்கிறீங்கள்! அங்கே இல்லையென்றால்தான் என்னிடம் வருக்கிறீர்கள். என்னிடம் சாராயம் இல்லை. தயவுசெய்து வெளியால போங்க பாப்பம்!" என்று முகத்தில் அறைந்த மாதிரிச் சொல்லிவிட்டான்.

## செ. குணரத்தினம்

"சரி சரி இன்றைக்கு மட்டும் தா! நான் இனிமேல் உன்னிடம் வரப்போவதில்லை!" என்று வேலனிடம் நிமலன் சொல்லிவிட்டு, வீட்டுக்கு வந்தான்.

இந்த நினைவுகளை அசைபோட்டுப் பார்த்தபடிதான் அன்று நிமலன் சாய்வு நாற்காலியில் படுத்துக்கிடந்தான்.

'சை! எனக்கிருந்த மரியாதையை இந்தக் குடியால் நான்தான் கெடுத்துக் கொண்டேன். என் வயது, படிப்பு, எனக்கு இருக்கும் மரியாதை- இதையெல்லாம் அறியாத வேலன் சர்வசாதாரண மனிதனாக என்னை நினைத்துக் கொண்டானே! அவன்மீது பிழையில்லை! அவனவனின் அறிவுக்குத் தக்கபடிதானே பேச்சும் கதையும் இருக்கும்! எல்லாம் என்னால் வந்த வினை! இனிமேல் பட்டு இந்தக் குடியே வேண்டாம்!' என்று முடிவு செய்தவனாக நிமலன் சாய்வு நாற்காலியில் கிடந்தபோது, அவன் மனைவி அவனைச் சாப்பிட வருமாறு அழைத்தாள்.

அவளை நிமலன் இரக்கத்தோடு பார்த்தான்.

"கமலம், நான் இனிமேல் குடிப்பதில்லை! இது உறுதி. நீங்க எல்லாம் எவ்வளவோ சொல்லியும் நான் திருந்தவில்லை. இன்று வடிசாராயம் விற்கும் வேலனே என்னைக் கேவலமான மனிதனாக நினைத்து எதையோவெல்லாம் பேசிவிட்டான். பணத்தைக் கொடுத்து குத்து மாடு வாங்கிய நிலையில் நான் நின்றேன். இந்தப் பாடம் எனக்குப் போதும்!" என்றபடி நிமலன் சாப்பிட எழுந்தான். கமலத்திற்கு அதைக் கேட்டதுமே இன்ப அதிர்ச்சி ஏற்பட்டது. "எப்படியோ நீங்கள் திருந்தினால் சரி!" என்றபடி அவனை அழைத்துச் சென்றாள். ■



படிப்பகம்

www.padippakam.com

# முதல்படி



1+1=01
"கூட்டல் கணக்கு
பிழையாக இருக்கிறதே?"
என்றாள் அருந்ததி.
மாறன் உதட்டில்
புன்னகை வெளிச்சம்!

"கூட்டல் கணக்கல்ல
கூடல் கணக்கு!" என்றான்.

அருந்ததிக்கு
முகத்தில் வெட்கம்
சிகப்பு சாயம் பூசியது!

"புதுக் கணக்கெல்லாம்
போடுகிறீர்களே!
எங்கு கற்றீர்கள்?"

"கற்றது நேற்றிரவு
கல்லாத மீதி
இன்றிரவு!"

பொய்யாக அவள்
காதைப் பொத்தினாள்.

நேற்றுத்தான்
மண நாள்!

மாலைகளை மட்டுமல்ல
மனங்களையும்
மாற்றிக்கொண்டநாள்!

என் மனம் உனக்கு
உன் மனம் எனக்கு!

மனங்களின்
இடப் பெயர்ச்சி!

நேற்றுப் பகல்
மண நாள்!
நேற்றிரவு
மழை நாள்!

திருமேனி தோளில் சாய
உருவாகும் வெட்கம் பாய
இரு மேனி மோதித் தேய
பெரு மழை மனதில் பெய்யும்!

"விளக்கத்தை அறிவதற்கு
விளக்கை அணைப்பது
வழக்கத்திற்கு மாறானது!
படிப்பதற்கு வெளிச்சம்
வேண்டாமோ" என்றான்!

"இங்கு கண்களே
விளக்குகள்!
வேறு விளக்கு
வேண்டாம்!

புத்தியில் வெளிச்சம்
உண்டு
வேறு வெளிச்சம்
வேண்டாம்!"

அவள் விளக்கம்
புதிதாக இருந்தது!
'பள்ளியறை' என்று
ஏன் பெயர் வைத்தார்கள்?"
என்று கேட்டான்!

"ஏன் வைத்தாரோ
எவர் அறிவார்?"
என்றாள் தெரியாததுபோல.

"படிப்பதற்கு பாடம்
படிப்பதற்கு!
கற்பதற்கு கலைகள்
கற்பதற்கு!"
என்றான் குறுநகையோடு!

"ஆசான் யாரோ
அவர்தான் நீரோ?"
குறும்போடு
நெஞ்சில் சாய்ந்தாள்!

"இந்தப் பள்ளிக்கு
இருவருமே புதுமுகம்
இப்போதுதானே அறிமுகம்!

அனுபவமே இங்கு
ஆசான்!
அனுதினமும் இங்கு
பாடம்!

கற்றுத்தர யாருமில்லை
கற்றுக் கொள்வோம்!
பற்றும் பெருநெருப்பில்
வேள்வி செய்வோம்!"

நெஞ்சில் சாய்ந்தவளை
கொஞ்சி குதுகலித்தான்!

குத்தும் மீசை அவளை
குறுகுறுக்க வைத்தது!

"குத்துகிறது கொஞ்சம்
குறையுங்கள்" என்றான்
மீசையை திருகியபடி!

"எனக்கும் தான்
குத்துகிறது!" என்றான்!"

அவன் கண்கள்
சென்ற திசையும்
குறு நகையும் அவன்
சொன்னதின் அர்த்தம்
சொல்லாமல் சொல்லின!

'வெட்கம் கெட்ட
முரடா!' என்றபடி
விலகி முறைத்தாள்!

"கொலைகாரக் கண்கள்
உயிர்வரை சென்று
ஊடுருவும் கண்கள்!"
வசமிழந்து வர்ணித்தான்!

"அத்தனை பயங்கரமாவா
இருக்கிறேன்!
அப்படியானால் என்னை
மணக்க ஏன் இசைந்தீர்?"
கோபம் குடியேறியது.

"நான் என்ன
சொல்லிவிட்டேன்?
நீ ஏன் பிணங்குகிறாய்?
உன் கண்களை வியந்தேன்
நீ கவலை கொள்வானேன்?"

"இந்தக் கேலிதானே
வேண்டாம்!
பயங்கரமானவள் என்று
பழிப்புக் காட்டிவிட்டு
கதையை மாற்ற வேண்டாம்"

"நீ என்ன பேயா
என்னை மிரட்ட?"

"என்னது? என்னது?
பேய் என்றா-உம்
வாய் உரைத்தது!
போய் வருகிறேன்"

புறப்படுவது போல
எழுந்தவளை
புயல்வேகத்தில்
தடுத்தான்!

"என் கண்ணே
என்மேல் கோபப்படாதே!"

"உமது கண்
உம்மிடம் தானே இருக்கிறது!

"கண் மட்டுமல்ல
என் எல்லாமே
உன்னிடம்தான்!"

"சுற்றிவளைத்து
என்னை திருடி
என்கிறீர்?
உம் கண் என்ன
குருடோ?
நானோ திருடி?"

"சரியம்மா
நான்தான் திருடன்!"

"நீர்தான் திருடனா
அப்படியானால்
நான் தானே
திருடன் மனைவி!"

அவள் முகத்தைத்
திருப்பிக் கொண்டாள்!

"ஏதோ பேச்சுக்கு
சொன்னேன்!
ஏடா கூடமாகிவிட்டது!"
என்று கெஞ்சினான்.

"அது என்ன
ஏடா கூடம்?
விளக்கும் பார்க்கலாம்!"

"யாருக்குத் தெரியும்
வாயில் வந்தது
சொல்லிவிட்டேன்!"

"வெந்ததைத் தின்று
வாயில் வந்ததைப் பேசும்
பொறுப்பற்ற மனிதரோ?
நொந்து போனேன்
வந்து வாய்த்தீரே!"

எதைச் சொன்னாலும்
வாயால் உதைக்கிறாளே!
என்ன செய்யலாம்?
மாறன் யோசித்தான்!

"அம்மா மகாராணி
சரணம்! சரணம்!
வாளாடி வென்றுள்ளேன்
உன்னோடு என்னால்
வாயாடி வெல்ல முடியாது!

தோற்றுவிட்டேன்
ஏற்றுக்கொள்!
தூற்றாதே கண்மணி
போற்றி போற்றி!"

அவள் இதழ்களில்
வெற்றிப் பெருமிதம்!

நெற்றியால் முட்டினாள்
நெஞ்சினை வருடினாள்!

ஊடாமல் கூடுவதில்
இன்பம் இல்லை!
என்று நினைத்தாள்
அந்த இரகசியத்தை
சொல்லாது மறைத்தாள்!

இடை நோகாதோ
என்று எழில் தாங்கினான்!
காதல் போர்க் களத்தில்
படை நடத்தினான்!

விளக்கு
அணைத்திருந்தபோதும்
விளக்கம் தெரிந்தது!

முதலில் தீ
மூழ்கிவிட்டால்
திருப்பாற்கடல்!

## இலக்கிய நயம்

### திருவருது ரசிகன்

முத்துக் குளித்ததுபோல்
தேகம் வியர்த்து
தெப்பமாய் நனைந்தது!

வெற்றி வீரனாய்
வினா தொடுத்தான்!
"கற்றது நலமா?"

வெட்கம் நிறைந்த
புன்னகையுடன்
அருந்ததி கூறினாள்:
"வெற்றி உமக்கே
என்னை
வென்றது நீரே!
ஊடலில் தோற்றீர்
கூடலில் ஜெயித்தீர்!
தோல்வியே வெற்றியின்
முதல்படி!
அந்தபடி அமைக்கவே
ஊடலாய் நடித்தேன்!"

"ஊடலில் தோற்றவர் வென்றார் அது மன்னும்
கூடலில் காணப்படும்"

அதிகாரம்: 133. குறள்:1330

## சிந்தியா பதில்கள்

போன்ற தலைவர்கள் படங்களையும் மாட்ட வேண்டும்," என்றார்.

அதற்கு மிகப் பணிவாகக் கடைக்காரன் கூறினான்: "ஐயா! நீங்கள் சொன்ன தலைவர்களது படங்களை எல்லாம் வைத்திருந்தேன். அவை விரைவாக விற்றுத் தீர்ந்துவிட்டன. ஆனால் உங்கள் படங்கள் மட்டும்...!" என்று இழுத்தான். குருசேவ் முகம் கோணலாகி விட்டது.

✧✳

★ 'தொடரும்' பார்த்தீரா?

கு. நித்தியகலா, மொரட்டுவ.

முற்பாதி கல கல! பிற்பாதி வள வள!

✧✳

★ 'வளரும் பயிரை முளையிலேயே தெரியும்' என்கிறார்கள். சிறு வயதில் மக்காக இருந்த பிள்ளைகள், வளர்ந்ததும் புத்திசாலிக ளாக இருப்பதும் உண்டுதானே?

திருமதி இராதா மயில்வாகனம், கண்டி.

உண்டுதான்!

ஐந்து வயதுப் பையனை பாடசாலையில் சேர்த்தார்கள். இரண்டாவது நாளே அந்தப் பையன் "பாடசாலைக்குப் போக மாட்டேன்!" என்று அடம்பிடித்தான்.

"ஏன் போகமாட்டேன் என்கிறாய்?" என்று அம்மா கேட்டார்.

"நேற்று இரண்டையும் இரண்டையும் கூட்டினால் நான்கு வரும் என்று சொன்னார்கள். இன்று மூன்றையும் ஒன்றையும் கூட்டினால் நான்கு வரும் என்று சொல்கிறார்கள். அந்த ஆசிரியருக்கு எதுவுமே தெரியவில்லை!" என்று கூறினான் பையன்.

அந்த பையன்தான் பின்னர் உலகறிந்த கணிதமேதையும், தர்க்க சாஸ்திர வல்லுநருமான பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்.

★ 'கண் எதிரே தோன்றினாள்' வெற்றிக்கு என்ன காரணம்?

என். ரகீம், களுத்துறை.

தொய்வில்லாத கதை நகர்த்தல்! கரு பழைய தானாலும், அதனைச் சுவாரசியமாக நகர்த்திய இயக்குநரின் திறமைக்குக் கிடைத்த பரிசு: வெற்றி!

✧✳



மனோரமா

★ 'ஆச்சி இண்டர்நாஷனல்' மனோரமாவுக்கு சினிமாவில் கிடைத்ததைவிட நல்ல பாத்திரம் தானே?

வி. நிமலன், கொழும்பு-14.

சினிமாவிலும் 'தில்லானா மோகனாம்பாள்' படம் உட்பட அசத்தலான பாத்திரங்களில் கலக்கல் நடத்தியவர் ஆச்சி! 'நடிப்புலக வேந்தி' என்று அழைக்கலாம் தப்பில்லை! ('ஆச்சி இண்டர்நாஷனல்' இப்போது லேசாக சலிப்புத் தட்டுகிறதே)

✧✳

★ சந்தடி சாக்கில் மூக்கை நுழைப்பது என்றால் என்ன?

செல்வி.கி. பாமினி, அம்பாறை.

சமீபத்தில் படித்த கதை ஒன்று கைவசம் இருக்கிறது. எங்கே எடுத்துவிடலாம் என்று தேடினேன். மாட்டினீர்கள். படியுங்கள் கதையை.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே சண்டை. பிறக்கப்போகும் குழந்தைக்கு யார் பெயரை வைப்பது என்பதுதான் பிரச்சனை.

"சிவராமன் என்று என் அப்பா பெயரை வைக்க வேண்டும்!" என்றார் கணவர்.

"இல்லை, சுப்பிரமணியம் என்று என் அப்பா பெயரை வைக்க வேண்டும்!" என்றாள் மனைவி.

சண்டை நீடித்தது. போர் நிறுத்தம் செய்ய முடியாமல், அடுத்த வீட்டுக்காரரிடம் சென்றார்கள். அவர் வெகுவாகச் சிந்தித்து, "சிவராம வெங்கட சுப்பிரமணி என்று பெயர் வையுங்கள்!" என்று கூறினார்.

கணவர் சந்தேகத்தோடு கேட்டார்:

"சிவராமன் என் அப்பா பெயர். சுப்பிரமணியம் அவ அப்பா பெயர். அது யார் நடுவில வெங்கட்டு?"

பெயர் வைத்தவர் சொன்னார்:

"அது என் அப்பா வெங்கடாசலத்தின் பெயர்!"

✧✳

★ சிந்தியா! தற்போது வெளியாகியுள்ள படங்களில் குடும்பத்தோடு அமர்ந்து பார்க்கக்கூடிய படம் எது?

பவானி சந்திரன், கொழும்பு-06.

'துள்ளாத மனமும் துள்ளும்'. குழந்தைகளுக்கு என்றால் 'மாயா' பார்க்கலாம். காதில் பூ சுற்றும் கதைதான் என்றாலும் கம்பியூட்டர் கிராஃபிக்ஸ் குழந்தைகளைக் கவரும்!

✧✳

★ சக்தி ரி.வியில் 'தித்திக்கும் ஓசை' எப்படியிருக்கிறது?

அ. ரவி, கொழும்பு-09.

ஒரே நாளில் 'பெப்சி உங்கள் சாய்ஸ்' நிகழ்ச்சியையும், அதனை அப்படியே தழுவும் 'தித்திக்கும் ஓசை'யையும் ஒளிபரப்புவதால் திகட்டுகிறது.

★ ஏப்ரல் முதலாம் திகதி மாகாணசபைத் தேர்தலை அறிவித்துள்ள தேர்தல் ஆணையாளர் மக்களை முட்டாள்களாக நினைக்கிறாரா? என்று ஜனாதிபதி கேட்டுள்ளாரே?

எஸ். சொக்கலிங்கம், கொழும்பு-09.

இந்த நாட்டில் யார் ஆட்சி செய்கிறார்கள் என்ற சந்தேகம்தான் எனக்கு இப்போதெல்லாம் அடிக்கடி ஏற்படுகிறது!

✧✳

★ வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடக்குமா?

கா. அரசரத்னம், திருமலை.

நடக்கும் என்பார் நடக்காது!

✧✳

★ டாக்டரிடமும் வக்கீலிடமும் பொய் கூறக்கூடாது என்பார்கள்; வக்கீல்கள் மட்டும் பொய் பேசலாமா?

சா. தம்பிராசா, கொழும்பு-11.

நாம் அவர்களிடம் உண்மையைக் கூற வேண் டும் என்பதே, அவர்கள் பொய்யைப் பொருந்தக் கூடியதாகப் பேசுவதற்காகத்தானே!

✧✳

★ "எங்கள் மத்தியிலும் சில எருமைகள் உள்ளன!" என்று சந்திரிக்கா அம்மையார் அவர்கள் கூறியுள்ளதைப் பற்றி உமது கருத்து என்ன?

கே. நயீம், புத்தளம்.

அவரே கண்டுபிடித்து விட்டார் என்றால் பின்னர் ஏன் கமிட்டி போட்டிருக்கிறார்?! நடவடிக்கை எடுத்திருக்கலாமன்றோ!

✧✳

★ விளம்பரம் விரும்பாத அரசியல்வாதிகள் இருக்கிறார்களா?

ஆர். மருசலீன்,
மஸ்கெலியா.

அரிதிலும் அரிது! சமீபத்தில் படித்த கதை ஒன்று:

ரசியாவின் அதிபராக இருந்தவர் குருசேவ். ஒரு முறை ரசிய வீதியில் காரில் போய்க்கொண்டிருந்தார்.

ஒரு ஃபோட்டோ கடை அவர் பார்வையில் பட்டது. அக் கடை முழுக்க குருசேவ் படமாகவே இருந்தது. அவருக்குப் பெருமை தாங்க முடியவில்லை.

வண்டியை நிறுத்திய குருசேவ், கடைக்காரனிடம் சென்றார். "ஏனப்பா, என்னை உனக்குப் பிடித்திருக்கலாம். அதற்காக என் படமாகவா கடை முழுவதும் மாட்டியிருப்பது? லெனின், ஸ்டாலின்



'கண்ணெதிரே தோன்றினாள்' படத்தில் பிரசாந்த்–சிம்ரான்

★ சமீபத்தில் படித்ததும் சிரிக்க வைத்த தமாஷ்?

எம். நௌபர், மாத்தளை.

"பொதுக்கூட்ட மேடையில் எதற்கு நிறைய முக்காலி போட்டிருக்கிறது?"

"தலைவருக்கு நாற்காலி ஆசை என்று எதிர்க்கட்சிகள் தாக்கிப் பேசாமல் இருக்கத்தான்!"

✧✳

★ 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தில் வடிவேலு சாயலில் வந்து பாதை காட்டுவாரே, அந்த நடிகர் பெயர் என்ன?

ஆர். சியாமளா,
மட்டக்களப்பு.

பாரிவெங்கட்.

✧✳



பாரிவெங்கட்

★ சிந்தியா! ஒரே ஒரு கடி ஜோக்?

கே.எம். சிவா, கம்பளை.

"கல்யாண வீட்டில் ஆடுமாடுகளை விடமாட்டார்கள். ஏன் தெரியுமா?"

"ஏன்?"

"கல்யாணம் ஆயிரங் காலத்துப் பயிர். ஆடு, மாடுகளை உள்ளே விட்டால் மேய்ந்திடும்."

✧✳

(ஸ்போர்ட்ஸ்)

## சாதனை கண்ட சாதனை

இந்தியாவின் அனில் கும்ப்ளே ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்தார் அல்லவா? இதற்கு முன் 10 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை புரிந்தவர் இங்கிலாந்து நாட்டின் சுழற்பந்து வீச்சாளர் ஜிம் லேகர்.



ஜிம் லேகர்

1956ம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கெதிராக இவர் ஒரு டெஸ்ட் போட்டியில் 19 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இன்று வரை இதுதான் உலக சாதனை. அப்போது தொலைத் தொடர்பு சாதன வசதிகள் இப்போது போன்று இல்லாததால் இவரது சாதனைகள் அதிகம் வெளியே தெரியாமல் போய்விட்டன.

ஜிம் லேகர் 'ஓவர் டு மீ' என்ற சர்ச்சைக்குரிய புத்தகத்தை எழுதி சில சலுகைகளையும் இழந்திருக்கிறார். வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் தொலைக்காட்சி வர்ணனையாளராக இருந்து 23.04.1986ல் ஜிம் லேகர் காலமானார்.

122 வருடகால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இருவரே ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி சாதனை புரிந்துள்ளனர். இந்த இரு வீரர்களது சாதனைகளையும் நேரில் பார்த்த ஒரே ஒரு பார்வையாளர் என்ற சாதனையைப் புரிந்துள்ளார் ரிச்சர்ட் ஸ்டோக்ஸ் என்ற ஆங்கிலேயர்.

இவர் 1956ம் ஆண்டு இங்கிலாந்தின் ஓல்ட் ட்ராஃபோர்ட் மைதானத்தில் தனது தந்தையுடன் ஜிம் லேகர் 10 விக்கெட்டுக்கள் வீழ்த்திய சாதனையைப் பார்த்தவர். அப்போது இவருக்கு 10 வயது.

அண்மையில் கும்ப்ளே 10 விக்கெட்டுக்கள் வீழ்த்தியதை, வியாபார விஷயமாக இந்தியா சென்றபோது, இவர் பார்த்தார். அன்று அந்தச் சாதனையைப் பார்த்துவிட்டு, "இரண்டு முறை 10 விக்கெட்டுக்களை வீழ்த்தியதை நேரில் பார்த்த ஒரே நபர் நான்தான்!" என்று பேட்டி கொடுத்துள்ளார் ரிச்சர்ட் ஸ்டோக்ஸ்.

## இன்ஸமாம் திருமணம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் இன்ஸமாம்-உல்-ஹக். இவருக்கும் செய்தாகஸ்பா என்ற பெண்ணிணுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது.

இவர்களது திருமணம் சென்றமாதம் 26ம் திகதி இன்ஸமாமின் சொந்த ஊரான முல்தானில் எளிமையான முறையில் நடந்தது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர்கள், முன்னாள் வீரர்கள், நண்பர்கள், கிரிக்கெட் இரசிகர்கள் உட்பட ஏராளமானோர் இந்தத் திருமணத்தில் கலந்து கொண்டனர்.

இன்ஸமாம் ஆசியக் கோப்பை டெஸ்ட் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக கல்கத்தாவில் நடந்த முதல் டெஸ்டில் கலந்து கொள்ளவில்லை. இம்மாதம் 4ம் திகதி முதல் 8ம் திகதி வரை பாகிஸ்தான், லாகூர் நகரில் இலங்கைக்கெதிராக நடைபெறும் டெஸ்டில் இன்ஸமாம் கலந்து கொள்வார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

## ஒத்திவைப்பு

ஏழாவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி வருகின்ற மே மாதம் 14ம் திகதி முதல் ஜூன் 20ம் திகதி வரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்ளவுள்ள 19 பேர் கொண்ட இந்திய அணியின் விவரங்கள் சென்ற மாதம் 27ம் திகதி அறிவிக்கப்படுவதாக இருந்தது. பின்னர், அணித்தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இந்தியக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்திய அணியின் தலைவர் முகமட் அஸாருதீன், பயிற்சியாளர் அன்சுமன் கெய்க்வாட், உடற்பயிற்சி நிபுணர் அண்ட்ரு கோகினோஸ் ஆகியோர் வீரர்களைத் தேர்வு செய்யும்போது இருக்க வேண்டும். கடந்த 27ம் திகதி இவர்கள் இலங்கையில் இருந்ததால் அணித்தேர்வு ஒத்திவைக்கப்பட்டது.


படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 51

# தானியேல்

## இராஜகுமாரன்

ஆண்டவருடைய அருளுக்குப் பாத்திரரான தானியேல் பற்றிய பல சுவையான தகவல்களைப் பரிமாறிக் கொள்வோம். யூதா மக்களை பாபிலோனிய மன்னரான நெபுகத்நேசரின் காலத்திலேயே தானியேலும் வாழ்ந்தார்.

யூதா மன்னரான யோயாக்கிம் ஆட்சிபீடமேறிய மூன்றாம் ஆண்டுதான் நெபுகத்நேசர் யூதா நாட்டைக் கைப்பற்றினார். அவர் யூதா நாட்டிலிருந்து ஏராளமான செல்வத்தை சூறையாடித் தன் நாட்டுக்குக் கொண்டு சென்றார். சாலமோன் மன்னரால் கட்டப்பட்ட சிறப்பு வாய்ந்த ஆலயத்தினையும் கொள்ளையிட்டு அரும்பொருட்களையும் பாபிலோனுக்கு எடுத்துச் சென்றார். யூதா மக்கள் பல்லாயிரக் கணக்கினரை நெபுகத்நேசர் கைதிகளாக அழைத்துச் சென்றார்.

யூதா மக்கள் தன் நாட்டில் வந்து தங்க வேண்டியிருந்தமையினால், அவர்களுடைய பண்பாடு, பழக்க வழக்கங்களுக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டிய நிலையில் மன்னர் இருந்தார். ஆகவே அவர்களை வழி நடத்துவதற்கேற்ற சிலரை அம் மக்களைப் பராமரிக்க- அவ்வின மக்களிலிருந்தே- பொறுக்கி எடுக்கத் தலைப்பட்டார்.

கைதிகளாகக் கொண்டு போகப்பட்டாலும் யூதா மக்களில் பெரும்பாலானோர் பாபிலோனியக் குடி மக்கள் போன்று அந்நாட்டுச் சட்டதிட்டங்களுக்குட்பட்டு நடக்க முன் வந்தனர். இதனால் அம்மக்களை கௌரவமாக



நடத்த வேண்டும் என்ற நல்லெண்ணம் அவரிடம் ஏற்பட்டிருந்தது.

இத்தகையதானதொரு மன மாற்றம் மன்னரிடம் ஏற்படுவதற்கு கடவுளின் கருணை உள்ளமும் முக்கிய காரணம் என்பதை எமது வாசகர்கள் அறிவார்கள். இறைவாக்கினர் எரேமியா மூலம் ஆண்டவர் விடுத்த செய்திகளில், "பாபிலோனில் யூதமக்கள் சில காலம் நிம்மதியாக வாழட்டும்!" என்று கூறப்பட்டிருந்ததல்லவா?

### தானியேல் தெரிவு

யூதா இனத்தைச் சேர்ந்தவர்களான தானியேல், அனனியா, மிசாவேல் மற்றும் அசரியா ஆகிய நால்வரையும் மன்னரின் அதிகாரிகள் தேர்ந்தெடுத்தனர். இவர்கள் நற்குணமும் கல்வி அறிவாற்றலும் பெற்றிருந்தனர். நல்லொழுக்க சீலர்களாகவும் இவர்கள் காணப்பட்டனர்.

இந் நால்வருக்கும் அரச நிர்வாக முறைகள், பாபிலோன் மொழி போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன. பயிற்சிக்காலத்தில் இந்நால்வரும் காட்டி வந்த தகைமைகள் மன்னர் நெபுகத்நேசருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டன. இதனால் மன்னரும் அவர்கள்மீது நல்லெண்ணம் கொண்டவரானார்.

பயிற்சி காலத்தில் பாபிலோன் முறையிலான உணவு, மதுபோன்றவற்றை அந்நால்வரும் தீண்டவில்லை. புலால் உணவைத் தவிர்த்து காய்கறி வகைகளையே உண்டு வந்தனர். மன்னனோ, தனக்குத்தரப்படும் அதே உணவு-அதே திராட்சை இரசம் ஆகியவற்றையே தானியேல் முதலானோருக்குப் பரிமாற வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணையிட்டிருந்தார்.

தானியேலும் தோழர்களும் மச்ச மாமிசத்தையும் மதுவையும் உண்ண மறுத்தமையினால் உடல் மெலிந்து போய்விடுவார்களே; அவர்களை நல்ல முறையில் கவனிக்காமல் விட்டு, அவர்கள் மெலிவடைந்து போனால் மன்னரின் தண்டனைக்குள்ளாக நேரிடுமே என்று அதிகாரிகள் அஞ்சினர். ஆனால் முதல் பத்து நாட்களிலேயே தானியேலும் தோழர்களும், ஏனையோரைவிட, நல்ல தேக நலத்துடனும் சிறப்பான தோற்றத்துடனும் விளங்கியதைக் கண்டு அதிகாரிகள் அச்சம் தவிர்த்தனர்.

ஆண்டவருடைய கடாட்சமும் இந்நால்வர் மீது இருந்தது. இதனால் அறிவாற்றல், இலக்கிய அறிவு மற்றும் ஆழ்ந்த இறைஞானம் பெற்றவர்களாக இருந்தனர். இந்நால்வருடன் பயிற்சி பெற்ற ஏனைய பலரும் மன்னர் முன் கொண்டுவரப்பட்டனர். தானியேலும் தோழர்களும் ஏனையோரைவிட மிகவும் ஆற்றல் மிக்கவர்களாகக் காணப்பட்டமையினால், அரசர் அவர்கள் மீது தனிப்பற்றுடையவரானார். அரசியல் நிர்வாக முறைகளில், இந்நால்வரையும் ஆலோசனை கேட்கும் அளவுக்கு இவர்கள் அரசருடனான செல்வாக்கு அதிகரித்தது.

தானியேலுக்கு அரசர் நெபுகத்நேசர் 'பெல்தசாச்சர்' என்ற பெயரைச் சூட்டினார். அவருடைய தோழர்களுக்கும் வெவ்வேறு பெயர்கள் சூட்டப்பட்டன.



### மன்னர் கண்ட கனவு

நெபுகத்நேசர் அரியணை ஏறிய இரண்டாம் ஆண்டில் ஒரு கனவு கண்டார். அக்கனவு அவரை மிகவும் அச்சுறுத்தியது. அக்கனவின் பலனை அறிந்து கொள்ள ஆர்வம் அதிகரித்தது. அரசவையிலுள்ள மந்திரவாதிகளை எல்லாம் அழைத்து, தான் கண்ட கனவுக்குப் பலன் கூறும்படி பணித்தார். ஆனால் கனவு எத்தகையது என்பதை மன்னர் அவர்களிடம் வெளிப்படுத்தவில்லை.

கனவின் விவரத்தைக் கூறாமல் பலனை எவ்வாறு கூறமுடியும் என்று மந்திரவாதிகள் திகைத்தனர். பலனைச் சரிவரக் கூறாது விட்டால் மந்திரவாதிகள் அனைவரையும் கொல்லப்போவதாகவும் அவர்களுடைய சொத்துக்கள் முழுவதையும் அபகரிக்கப்போவதாகவும் மறுகட்டளை பிறந்தது. மந்திரவாதிகள் மீண்டும் மீண்டும் மன்னர் கண்ட கனவின் காட்சிகளைக்கூறாமல் விளக்கம் தர ஆண்டவராலும் முடியாது என்று கூறி விட்டனர். இதனால் மன்னரின் கோபம் மென்மேலும் அதிகரிக்கவே செய்தது.

பாபிலோன் அரசவையிலிருந்த மந்திரவாதிகளும் மாயவித்தைக்காரர்களும் அழிக்கப்படாமல் பாதுகாக்க தானியேல் திட்டமிட்டார். கண்ட கனவின் காட்சிகளையும் அக்காட்சிகளுக்கான மறைபொருளுக்கான கருத்தினையும் தனக்கு அறியத் தருமாறு தானியேலும் தோழர்களும் கடவுளிடம் விண்ணப்பித்துப் பிரார்த்தனை செய்தனர். தானியேல் விரும்பியவாறே மன்னர் கண்ட கனவும் அதன் உட்பொருளும் தானியேலுக்கு உணர்த்தப்பட்டது. ஆண்டவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு தானியேல் அரசரிடம் சென்றார். கனவின் காட்சிகளையும் அவற்றில் பொதிந்து கிடக்கும் மறைபொருளையும் முன்வைத்தார்.

அச்சமும் சோர்வும் குடிகொண்டிருந்த மன்னர் நெபுகத்நேசர், தானியேலை அழைத்து விளக்கத்தைக் கேட்டார்.

"அரசரே! தாங்கள் கண்ட கனவு தங்களுடைய எதிர்காலத்தைக் குறிப்பதாகும். தங்களுக்கும் தங்கள் நாட்டுக்கும் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்ற கவலையில் தாங்கள் இருந்து வருகிறீர்கள். கனவில் அச்சுறுத்தும் தோற்றமுடைய ஒரு சிலையினை நீங்கள் கண்டீர்கள். இதன் தலை பசும்பொன்னாலானது. அதன் மார்பும் புயங்களும் வெள்ளியால் ஆனவை. அச்சிலையின் வயிறும் தொடைகளும் வெண்கலத்தாலும் கால்கள் இரும்பினாலும் ஆனவை. காலடிகளின் ஒருபகுதி இரும்பாலும் மற்றோர் பகுதி களிமண்ணினாலும் ஆக்கப்பட்டிருந்தன.

தாங்கள் அச்சிலையைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒரு பெரிய கல் உருண்டோடி வந்து அச்சிலையைச் சின்னாபின்னமாக உடைத்தது. தொடர்ந்து வீசிய பெருங்காற்றில் சிதைந்து விழுந்த சிலையின் பாகங்கள் யாவும் அடித்துச் செல்லப்பட்டன. மோதிய கல் மட்டும் அந்த இடத்திலிருந்த வண்ணம் மிகப் பெரிதாக வளர்ந்துவிட்டது.

இத்தகைய உருவத்தின் தலை பொன்னாலானது என்பதனால் அது தங்களுடைய ஆட்சிக்காலம் ஒரு பொற்காலம் போல் இருக்கும். தங்களுக்குப் பின்னர் ஆட்சி புரிபவர், தங்களைவிட ஆற்றல் குறைந்த ஒருவராகவே இருப்பார். அதன் பின்னர் வரும் வெண்கலப் பகுதி-ஓரளவு உறுதி பெற்றதாக இருக்கும் ஆட்சியைக் குறிக்கிறது. நான்காவதாகத் தோன்றும் ஆட்சி இரும்பைப் போன்று உறுதி மிக்கதாய் இருக்கும். இரும்பாலும் களிமண்ணாலுமான காலடிகள், பிளவுபட்ட அரசொன்று பிற்காலத்தில் தோன்றும் என்பதனைச் சுட்டிக்காட்டுகிறது. இவற்றில் ஒன்று உறுதியானதாகவும் மற்றொன்று வலிமை குறைந்தும் காணப்படும்.

இச்சிலையினை மோதிச் சிதறடிக்கும் கல்லானது, இறைவனால் இறுதியில் அமைக்கப்படவிருக்கும்-எவராலும் அழிக்கப்படாத- உன்னதமான ஆட்சியைக் குறிக்கிறது. இந்த ஆட்சி நீண்ட நெடுங்காலம் நிலை பெற்றிருக்கும்.

### மன்னரின் மகிழ்ச்சி

மாமன்னரே! எதிர்காலத்தில் நடைபெறப் போகும் சம்பவங்களைத் தங்கள் கனவு மறைமுகமாகத் தங்களுக்கு உணர்த்தியிருக்கிறது. இது ஆண்டவரின் அருளேயன்றி வேறில்லை!"

இவ்வாறு தானியேல் கூறிமுடித்ததும் மன்னர் நெபுகத்நேசர் தானியேலின் தாளில் விழுந்து வணங்கினார். தான் கனவில் கண்ட காட்சிகள் எவற்றையும் எவரிடமும் கூறாதிருந்தபோதும், துல்லியமாக அவற்றைக் கூறி அவற்றின் மறைபொருளையும் மிகச் சிறப்பாக விரித்துரைத்தமைக்காக தானியேல் நிச்சயமாக ஆண்டவரின் அருட்கடாட்சம் பெற்றவரே, என்பதை முழுமையாக மன்னர் நம்பினார். யூதாமக்களும் இஸ்ரயேலரும் போற்றிக்கொண்டாடும் இறைவனே உண்மையான ஆண்டவர் என்று அவையிலுள்ள அனைவருக்கும் அறிவித்தார்.

தானியேலுக்கு ஏராளமான வெகுமதிகளை அளித்தார். அதுமட்டுமல்லாமல் பாபிலோன் நாடு முழுவதற்கும், ஆளுநராக நியமித்தார். தானியேலின் வேண்டுகோளின்படி அனனியா, மீசாவேல் மற்றும் அசரியா ஆகிய அவருடைய தோழர்களை நாட்டின் பல்வேறு பகுதிகளின் பொறுப்பாளர்களாக அரசர் நியமித்தார்.

தானியேலுக்கும் அவர் தம் தோழர்களுக்கும் மன்னர் இத்தனை மதிப்பளித்து கௌரவிப்பதனால் அரசபையிலுள்ள பலரும் பொறாமைத் தீயில் பொசுங்கினர். அவர்களை எவ்வாறாவது ஒழித்துக் கட்டினால்தான் தங்களுடைய பழைய நிலையை மீண்டும் கட்டியெழுப்ப முடியுமென்று கருதினர். அதற்கான தந்திரோபாயங்களை ஆராயத் தலைப்பட்டனர்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 49 விடை ☛ கெதலியா**

**பரிசு பெறுவோர்:**

1. ஜி. வனிதா, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு-15.
2. கே. மஞ்சுளா, இல. 187 கொழும்பு வீதி, [illegible]வத்த, அவிசாவளை.
3. எம்.எஸ். அஸ்மி, பிரதான வீதி, மதவாச்சி.
4. சி. சுபலக்சுமி, கோணக்கலை பிலானிவத்தை, பசறை.
5. பொ. புஸ்ப[illegible]ஜினி, அம்பாறையன் பிள்ளையார் கோயில் வீதி, காரைதீவு.04.

**திருமறை 51 வினா:-** தானியேலுக்கு நெபுகத்நேசர் சூட்டிய பெயர் என்ன?

மார்ச். 13க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 51—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**





யாழ் குடாநாட்டில் சுதந்திரமாக நடமாட உரித்துடையோர்;
- ✦ தலைவெட்டி தம்பிரான்கள்.
- ✦ கொள்ளையர்கள்.
- ✦ வழிப்பறிக்காரர்கள்.
- ✦ வெள்ளைவேன்.

## புலிகளாக இருந்தால்

*"யாழில் தலை வெட்டப்பட்ட உடல் கிடந்துள்ளதாக அறிகிறோம். இதனையிட்டு ஆழ்ந்த கவலையும் வேதனையும் அடைந்துள்ளோம் இதற்கு யார் எவர் எப்படி காரணமாக இருந்தாலும் கண்டிக்கிறோம். இவை ஜனநாயக நீர் ஓட்டத்தில் இரத்தம் கலந்த செயல். இரத்தம் கலந்து நீரோட்டத்தை சிவப்பாக்கியவர்கள் யார் எவர் என்றாலும் கண்டிக்கிறோம்."*

இவ்வாறு அறிக்கைவிட்ட தமிழ்க் கட்சிகள், புலிகள் இதனை செய்திருந்தால் எவ்வாறு அறிக்கை விட்டிருக்கும்?

*ஜனநாயகம் என்றால் என்னவென்று அறியாத புலிகள் இந்தப் படுகொலையைச் செய்துள்ளனர். இது ஜனநாயகத்திற்கு புலிகள் விடுத்துள்ள எச்சரிக்கை. யாழ் மக்களது இயல்பு வாழ்க்கையை பாதிக்கச் செய்யவும், சிவில் நிர்வாகத்தை சீர்குலைக்கவும் புலிகள் மனிதத் தன்மையற்ற ஈவிரக்கமற்ற, கொடூரமான, சகிக்க முடியாத, ஜனநாயக விரோத, ஜனநாயக உணர்வுக்கு மாறான, ஜனநாயக மறுப்பான செயலில் ஈடுபட்டுள்ளனர். இக் கோரக்கொலைக்காக அகில உலகம், ஐ.நா.சபை, மற்றும் சர்வதேச நீதிமன்றம் ஆகியன புலிகளை கண்டிக்க வேண்டும் என்று ஜனநாயக உணர்ச்சியுடன் கேட்டுக்கொள்கிறோம்.*




## புதிர் பொன்ராசா





-தமிழ்க்கட்சிகள் பலவற்றின் இன்றைய சிந்தனை மேலே உள்ள எழுத்துக்களில் ஒளிந்திருக்கிறது. எண்களை வரிசைப்படுத்திக் கண்டுகொள்ளுங்கள்.-

**காதிலை பூ கந்தசாமி**

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)





அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு. கொழும்பு

436331


# ஐந்தில் அசத்தல்



→ 'குழந்தையாக இருப்பது கடினமான காரியம்' என்ற ஒரு பாடல்- ஃபிரெஞ்ச் மொழியில் பாடப்பட்டது. இற்றைக்கு 5 வருடங்களுக்கு முன்னர்- 1994ம் ஆண்டு பெப்பரவரியில் ஃபிரான்ஸ்நாட்டு வானொலி, பிரதான தொலைக்காட்சிகளிலெல்லாம் திரும்பத் திரும்ப ஒலி-ஒளிபரப்பானது. கேட்போரையும் பார்ப்போரையும் கவர்ந்திழுத்தது அப்பாடல்.

அமெரிக்காவின் வானொலி- தொலைக் காட்சி இசையணித் தேர்வுகளிலெல்லாம் முதலிடத்தில் இப்பாடல் இடம்பெற்றது.

இப்பாடலைப் பாடிய இசைக் கலைஞரைப் பார்க்க வேண்டும் என்று எண்ணற்ற மக்கள் அவாக் கொண்டமையினால் மேடைகளிலும் அக்கலைஞர் தோன்றிப் பாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

↑ இத்தனைக்கும் அந்தப் பாடகருக்கு எத்தனை வயது என்கிறீர்கள். சொன்னால் நம்பமாட்டீர்கள். அவர் வயது நாலரை மட்டுமே.

அவர் மேடையில் பாடும்போது மக்கள் நெகிழ்ந்துருகிவிடுவார்களாம். ஆனால் திடீரென்று பிரபலமான ஒளிபரப்புக்களுக்கான தொலைக்காட்சி நிறுவனங்கள், முக்கியமான வானொலி நிலையங்கள் ஒரேயடியாக அக்கலைஞர்- பாடும் சிறுவனின் பாடல்களுக்கு ஒட்டு மொத்தமாகத் தடை விதித்துவிட்டன.

ஜோர்டி லெமொய்ன் என்ற அந்தச் சிறுவனை அவனுடைய தந்தை, தாய் இருவரும் ஒரு வியாபாரப் பொருளாக்கி விட்டனராம். அதுதான் தடை விதித்ததாக கூறினர்.

அச் சிறுவனின் பாடலுக்குத் தடை விதிப்பதற்காக கூறப்பட்ட காரணத்தை இசை உலகமும் இரசிகர்களும் ஏற்கவில்லை என்றே தெரிகிறது.

ஆனால் சிறுவனாக இருக்கும்போதே உலக சாதனை புரிந்த அப் பசசை மண்ணுக்கு இத்தண்டனை வழங்கியமைக்கான மறைமுகமான காரணம் இன்னும் வெளிப்படவில்லை என்றே தெரிகிறது. ஆனாலும் மிகச் சிறு வயதில் பிரபலமான இசைக் கலைஞர் என்னும் உலக சாதனையை யாராலும் தடை செய்ய முடியவில்லை. கின்னஸில் இந்த அற்புதச் சிறுவனின் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்பார்கள். இந்த சாதனைச் சிறுவன் 4 1/2 வயதிலேயே தானும் வளைந்து உலகையே தன் பக்கம் வளைத்தும் விட்டானே!




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


# புதுமுயற்சி



# சூரியசக்தி




# கிளிக்



↑ பார்த்தவுடன் நமக்கெல்லாம் வாயூறுகிறதல்லவா? பல வகையான இன்சுவை தரும் பானத்தை இந்த மனிதர் பருகுகிறார் என்று கருதினால் நிச்சயம் ஏமாற்றம்தான். சுவைத்து உண்ணும் இனிப்பு மிட்டாயுமல்ல; சிறுவர்கள் விரும்பி உண்ணும் லொல்லி பொப்புமல்ல, பருகும் இன்சுவைப் பானமுமல்ல, மிட்டாய் போன்று வாயினுள், வைத்திருக்கும் சிவப்புவர்ண 'மிட்டாயை' பல்லினால் மெதுவாகக் கடித்தால் இனிமையான இசை உங்கள் காதுகளுக்கு மட்டும் கேட்கும்.

பல்லினால் கடித்தால் அப்போது உண்டாகும் அதிர்வலைகள் உங்கள் காதுகளுக்கு மட்டும் கேட்கக் கூடியதாக இசையை எழுப்புகிறது. கடிக்க கடிக்க இன்பம். சுவை நாவுக்கல்ல, செவிக்கு!இம்மனிதர் தன் கையில் வைத்திருக்கும் பாத்திரம் போன்ற அமைப்பில் 4 பொத்தான்கள் காணப்படுகின்றன அல்லவா? இவை நமக்கு வேண்டிய மாற்று இசையைத் தெரிவு செய்து கொள்வதற்கான அமைப்புக்கள்.

இவை தவிர பலதரப்பட்ட மிருகங்களின் உறுமல் சப்தங்கள், பறவைகளின் இன்னிசைவான ஒலிகள் போன்ற 6 வகை ஓசை களையும் தனித்தனியே கேட்கக் கூடிய வசதிகளும் இதில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான இசைக் கருவி உருவாக்கப்பட்டது உலக சாதனையாக பதியப்பட்டுள்ளது.

---

→ இந்திய-பாகிஸ்தான் அணிகள் அண்மையில் சென்னையில் விளையாடிய முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வெற்றிபெற்றது. இந்த வெற்றிக்கு காரணகர்த்தா, பாகிஸ்தானின் அதிரடி வீரர் ஷாஹிட் அஃப்றிடி. இவர் இரண்டாவது இன்னிங்ஸில் 141 ஓட்டங்களைக் குவித்தார்.

ஒரு நாள் போட்டிகள் பலவற்றில் விளையாடியிருந்தாலும் இவர் விளையாடும் இரண்டாவது டெஸ்ட் போட்டி இதுவாகும்.

18 வயதான அஃப்றிடி 305 நிமிடங்கள் களத்தில் இருந்து 191 பந்துகளைச் சந்தித்து 141 ஓட்டங்களை எடுத்தார். இதில் 21 பவுண்டரிகளும், 3 சிக்ஸர்களும் அடங்கும்.

அஃப்றிடிக்கு இது முதலாவது டெஸ்ட் சதமாகும். அது மட்டுமன்றி இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானிய வீரர் ஒருவரால் அடிக்கப்பட்ட 19வது சதமாகும். ஒரு நாள் போட்டியில் மட்டுமே சோபிப்பார் என்று கூறப்பட்ட வாதங்களை டெஸ்ட் சதம் மூலம் தகர்த்தெறிந்து விட்டார் அஃப்றிடி.



# துணிச்சல்

## 2வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி லக்ஷிகா 06.03.1999

கொழும்பை வசிப்பிடமாகக்கொண்ட சத்தியமூர்த்தி-மதிவதனி தம்பதியினரின் செல்வப் புதல்வி **லக்ஷிகா** தனது இரண்டாவது பிறந்த தினத்தை 06.03.99 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, தம்பி சரோன், சுவிஸில் வசிக்கும் அம்மப்பா, கொழும்பில் வசிக்கும் அம்மம்மா, சின்னமாமா, கனடாவில் வசிக்கும் பெரியமாமா,ஹட்டனில் வசிக்கும் அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணன்மார், மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார்,சுவிஸில் வசிக்கும் அம்மப்பாமார், அம்மம்மாமார், அன்ரிமார், மாமாமார், கரணவாயில் வசிக்கும் அம்மப்பாமார், அம்மம்மாமார், அன்ரிமார், அக்காமார், அண்ணன்மார், பாட்டிமார், தாத்தாமார், மற்றும் கொழும்பு மூர்த்தி ஜுவலரிகடை மாமாமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வி லக்ஷிகாவை சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல் எஸ்.ஆர்.